# எலியா

---

# ELIJAH

## (எலிசாவும் சூனேமிய ஸ்திரீயும்)

55-0301

செவ்வாய்க்கிழமை மாலை,
மார்ச் 1, 1955

ஷ்ரைனர் டெம்பிள், ஃபீனிக்ஸ்,
அரிசோனா, அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# செய்தி: **எலியா** (55-0301)

மாலை வணக்கம், நண்பர்களே. இந்த அற்புதமான பிரச்சாரத்தின் நிறைவு நாளுக்கு முந்தைய நாளின் இரவில், இந்த ஷ்ரைனர் கலையரங்கத்தில் (Shriner Auditorium) மீண்டும் ஒருமுறை இருப்பது ஒரு பாக்கியமாகும். நான் இதுவரை பார்த்த மற்றும் நடத்திய கூட்டங்களிலேயே, இந்தப் பிரச்சாரம் மிகச் சிறந்தவற்றிற்கு அடுத்த நிலையில் உள்ளதென்று நான் நம்புகிறேன். முதலாவதாக சிறந்தது என்றால், அது நான் முன்பு இங்கு வந்து நீண்ட நாட்கள் தங்கியிருந்தபோது நடந்ததாகும். அப்பொழுது நடந்த கூட்டத்தை விட சிறந்த கூட்டம் எதுவும் நமக்கு இருந்ததாக நான் நினைக்கவில்லை. அது மிகச் சிறந்த கூட்டமாக இருந்தது. அதற்காக நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். தேவன் உங்கள்

ஒவ்வொருவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

2 நாளை இரவு நமது நிறைவு நாளாகும், அதன் பிறகு நாங்கள் கலிபோர்னியாவில் உள்ள ஏஞ்சலஸ் ஆலயத்திற்கு (Angelus Temple) விரைந்து செல்ல வேண்டும். பின்னர், சனிக்கிழமை காலை, சர்வதேச முழு சுவிசேஷ வர்த்தகர்கள் ஐக்கியத்தின் (Christian Business Men's Full Gospel Fellowship) ஒலிபரப்பிலும், பேசுவதற்கும் நாங்கள் இருக்க வேண்டும். அதன்பிறகு, அடுத்த வாரம் வியாழக்கிழமை வரை நாங்கள் ஏஞ்சலஸ் ஆலயத்தில் இருப்போம். பின்னர், வெள்ளிக்கிழமை அன்று, கடந்த ஆண்டு சர்வதேச முழு சுவிசேஷ வர்த்தகர்களுடன் நாங்கள் இருந்த அதே ஸ்டாக் எக்ஸ்பிட் (Stock exhibit) இடத்தில் கூட்டத்தைத் துவங்குவோம். அங்கு ஏறக்குறைய பதி னொன்று, பன்னிரண்டாயிரம் பேர் அல்லது அதற்கும் அதிகமானோர் அமரக்கூடிய ஒரு அழகான பெரிய இடம் நமக்கு இருக்கிறது. அது மிகவும் அருமையான இடம்; தாராளமான இடவசதி கொண்டது, ஒலி அமைப்புகள் நன்றாக இருக்கும், உண்மையிலேயே அது ஒரு

நல்ல இடமாகும். நீங்கள் அந்தப் பகுதியில் இருந்தால், எப்போது வேண்டுமானாலும் அங்கு வந்து எங்களைச் சந்திக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள். உங்களுக்கு பிரியமானவர்கள் யாரேனும் அங்கு இருந்து, அவர்கள் சுகவீனமாய் இருந்தால், அவர்களைக் கடிதம் எழுதி வரச் சொல்லுங்கள்; கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஊழியம் செய்ய எங்களால் முடிந்ததைச் செய்வோம் என்று நாங்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

3 இன்று எனக்குச் சற்று சிறந்த நாளாக இருந்தது. எனக்குச் கொஞ்சம் கூடுதல் ஓய்வு கிடைத்தது. ஞாயிற்றுக்கிழமை மிகவும் கடினமாக இருந்தது. இன்று, அல்லது நேற்று, அதன் தாக்கத்தை நான் சற்றே உணர்ந்தேன். உங்களுக்குத் தெரியும், நான் இனி ஒரு சிறு பையன் அல்ல. இருபது வயதைக் கடந்த பிறகு, அதாவது, நான் இருபது வயதைச் சற்றே கடந்துவிட்டேன், அதற்குப் பிறகு நீங்கள் அதை உண்மையிலேயே உணருவீர்கள்.

உங்களுக்குத் தெரியும், சகோதரர் போஸ்வொர்த் (Bosworth) அவர்கள் சிறிது காலத்திற்கு முன்பு இங்கே இருந்தார்... ஃப்ரெட் போஸ்வொர்த், சகோதரர் எஃப். எஃப். போஸ்வொர்த் அவர்களை எத்தனை பேருக்குத் தெரியும்?. அனேகமாக எல்லோருக்கும் அவரைத் தெரியும் என்று நான் கருதுகிறேன்; சுவிசேஷத்தின் அற்புதமான முதிர்வயதுப் போர்வீரர் அவர். நாங்கள் புளோரிடாவில் அவருடைய ஊரில் இருந்தோம்; நாங்கள் மதிய உணவு அருந்திவிட்டு, கடற்கரைக்கு நடந்து சென்றோம்; நான் அங்கே நின்று கொண்டிருந்தேன், எனக்கு நாற்பது வயது, என் தோள்கள் தொங்கிய நிலையில் இருந்தன. ஆனால் அவர், ஏறக்குறைய எண்பது வயதில் நின்றுகொண்டு, அவருடைய தோள்களை நிமிர்ந்து வைத்திருந்தார். நான் அவரைப் பார்த்து, "ஓ, என்னே" என்று நினைத்தேன்.

நான் அவரிடம், "சகோதரர் போஸ்வொர்த், நீங்கள் எப்போது உங்கள் மிகச் சிறந்த நிலையில் இருந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"ஓ," அவர், "இப்பொழுதுதான்" என்றார். அவர் சொன்னார், "சகோதரர் பிரான்ஹாம், நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். நான் ஒரு பழைய வீட்டில் வசிக்கும் ஒரு சிறுவன் அவ்வளவுதான்" என்றார்.

4 எனவே நான் நினைத்தேன், "தேவனே, நான் அந்த வயதைக் காணும் வரை வாழ்ந்தால், நானும் அப்படி உணர எனக்கு உதவி செய்யும்." அவர் தனது மனதில் தன் இளமையைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கிறார். அவர் காலையில் எழும்போது, அவர் அங்கே நின்று வேதவசனங்களை மேற்கோள் காட்டிக்கொண்டே இருப்பார். அவர் சொல்கிறார், நிச்சயமாக, அவ்வளவு வயதான ஒருவருக்கு இரத்த அழுத்தம் குறையும் என்று.

ஆனால் அவர் என்னுடன் ஆப்பிரிக்காவிற்குப் பயணம் செய்தார், திரும்பி வந்தார், அவராகவே மீண்டும் சென்றார், இப்போதுதான் ஜப்பானிலிருந்து திரும்பினார். சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு அவர் என்னை அழைத்து, "பில்லி, என்னுடன் ஜப்பானுக்கு வர உனக்கு விருப்பமா?" என்று கேட்டார்.

நான், "சரி, நீங்கள் எப்போது செல்கிறீர்கள், அடுத்த கோடையிலா?" என்று கேட்டேன்.

அவர், "இப்போதே" என்றார். அவருக்குக் காத்திருத்தல் என்பதே இல்லை; அவர் ஜப்பானுக்குக் கிளம்பிவிட்டார். திரும்பி வந்து, சில வாரங்களுக்கு முன்பு டல்லாஸ் வரை, அல்லது டல்லாஸ் அல்ல, லப்பக் (Lubbock) வரை என்னுடன் இருந்தார். கிட்டத்தட்ட எண்பது வயதில் மிகச் சிறந்த ஆரோக்கி யத்துடன் இருக்கிறார். எனவே அவர் அப்படி உணர முடியுமானால், நாம் நம்மைக்குறித்து வெட்கப்பட வேண்டும், அல்லவா? அதுதான் சரி. நம்மைப் பார்க்கும்போது - நாம் எவ்வளவு இளமையாக இருக்கிறோம், ஆனால் எண்பது வயதான ஒரு முதியவர் இன்னும் சுவிசேஷத் தைப் பிரசங்கிக்கிறார்...

நன்றாகக் கவனியுங்கள்; ஒரு நாள் அவர் தனது கால்களை மறுபக்கத்திற்கு எடுத்து வைப்பார். அப்போது காரியங்கள் மாறிவிடும். இதைச் சிந்தித்துப் பாருங்கள். இன்றிரவு நீங்கள் இங்கே இருக்கும்போது, கிறிஸ்தவர்களும் பாவிகளும் ஒரே விதமாக, நான் உங்களிடம்

ஒரு கணம் பேசும்போது நீங்கள் சிந்திப்பதற்காகச் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

5 உதாரணமாக, நாளைக்குப் பொருட்களைக் கட்டி வைக்கும் நேரம் (packing up time). நாம் புறப்பட வேண்டும். ஒருவேளை இன்றிரவாகக் கூட இருக்கலாம். இந்த உலகத்தை விட்டு, வேறொரு இடத்திற்குச் செல்ல வேண்டியதிருக்கலாம். அது அனேகமாக அப்படி இருக்கவும் கூடும் என்று உங்களுக்குத் தெரியும்.

என்னுடைய கூட்டாளிகளில் ஒருவர் இன்று சொன்னதை நான் கேட்டேன், இந்த நகரத்தில் மட்டுமல்ல, அமெரிக்காவைச் சுற்றியுள்ள எல்லா நகரங்களிலும்; ஒரு கார் திறக்கப்பட்டு அதிலிருந்து ஒரு டீனேஜ் பெண் இறங்கத் தொடங்கினாள் என்றும், அந்தக் காரிலிருந்து பீர் மற்றும் விஸ்கி கேன்கள் (cans) போன்றவை வெளியே விழுந்தன என்றும் என் கூட்டாளி ஒருவர் கூறினார். அந்தப் பிள்ளை அவற்றைக் அங்கேயே கிடக்கவிட்டு, உள்ளே சென்று எதையோ எடுத்துக்கொண்டு திரும்பி வந்தாள்.

அவர் சொன்னார், "தேவன் சீக்கிரத்தில் அமெரிக்கா மீது நியாயத்தீர்ப்பை அனுப்ப வில்லை என்றால், அவர் சோதோம் மற்றும் கொமோராவை உயிர்த்தெழச் செய்து அவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டி யிருக்கும் (அது சரி), சோதோம் மற்றும் கொமோராவை உயிர்த்தெழச் செய்து அவர்களை அழித்ததற்காக மன்னிப்பு கேட்க வேண்டி யிருக்கும் (அது சரி), அவர் சீக்கிரத்தில் நியாயத்தீர்ப்பை அனுப்பவில்லை என்றால்" என்றார்.

நாம் அதைச் சந்திக்க இருக்கிறோம் நண்பர்களே, அவ்வளவுதான். நிச்சயமாக. ஆனால் சபையும் ஒன்றைச் சந்திக்க இருக்கிறது: அது ஒரு எடுத்துக்கொள்ளப்படுதல் (Rapture). ஆமென். அதுதான் அந்த அற்புதமான பகுதி, சபைக்காக இயேசு வருவது, எடுத்துக் கொள்ளப்படுதல். அது விசுவாசியாதவர்களுக்கு ஒரு சோகமான நாளாக இருக்கும். ஆனால் இயேசு வரும் அந்த நேரத்தில், ஆயத்தமாயி ருப்பவர்களுக்கு நாம் இதுவரை கண்டிராத அல்லது நினைத்திராத ஒரு மிக அற்புதமான நேரமாக அது இருக்கும்.

6 உங்களுக்குத் தெரியாத வேறொரு உலகத்திற்கு, காலடி எடுத்து வைப்பதைப் போல நீங்கள் ஒரு பயணம் மேற்கொள்வதென்றால் எப்படி இருக்கும்?. நீங்கள் வயதானவராகவும் நடுக்கத்துடனும் இருக்கிறீர்கள், நீங்கள் பல வருடங்களாகக் கர்த்தருக்குச் சேவை செய்திருக்கிறீர்கள், நீங்கள் வயதாகும் போது உங்களை அழைத்துச் செல்லும் கப்பலில் ஏற நாளை நீங்கள் வெளிநாட்டிற்குச் செல்லப் போகிறீர்கள்.

அந்தக் கப்பல் இங்கே துறைமுகத்திற்கு வரப்போகிறது. நீங்கள் கீழே சென்று இந்தக் கப்பலில் ஏறினீர்கள், அந்தப் பழைய பனிமூட்ட ஒலி (foghorn) ஒலித்தது. கப்பல் கடலைக் கடக்கத் தொடங்கியது, நீங்கள் அக்கரைக்குச் சென்றவுடன், அந்தக் கப்பல் பல்லாயிரம் ஆண்டுகளாக முன்னும் பின்னும் பயணங்களை மேற்கொண்டது.

அவர்கள் புதிதாகக் கண்டுபிடித்த அந்தப் புதிய தேசத்தில் நீங்கள் உங்கள் காலடியை வைக்கும்போது; அங்கே நீங்கள் உங்கள் காலடியை வைத்தவுடன், அந்த நரைமுடிகள்

ஒவ்வொன்றும் மீண்டும் கறுப்பாக மாறின. அந்தச் சுருக்கங்கள் மற்றும் தேய்ந்துபோன உடல்கள் அனைத்தும், மீண்டும் ஒரு இளம் ஆணாகவும் பெண்ணாகவும் மாறி, என்றென்றும் வாழ்வதற்காக மாறின. உங்கள் கால்கள் அந்தத் தேசத்தைத் தொட்டவுடனேயே, அதுதான் நடந்தது. ஆம், அதுதான் மிகச் சரியாக நடக்கிறது. அது உண்மை.

சீயோனின் பழைய கப்பல் வந்து, அதன் நபரை, அவரை எடுத்துச் செல்லும்போது இது நடக்கிறது. சில காலை வேளைகளில், அந்த அறைக்குள் பனிமூட்டம் கூடும்போது அந்தச் சத்தம் (whistle) ஊதப்படுவதை நானே கேட்பேன் என்று எதிர்பார்க்கிறேன்; இந்த அழிவுள்ள வாழ்க்கை செலவழிக்கப்படுகிறது. அப்போது எல்லாம் சரியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அது அப்படியிருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். அவர் எனக்கு வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். நான் மறுபக்கத்தில் காலடி எடுத்து வைப்பேன் என்று என் முழு இருதயத்தோடும் நான் விசுவாசிக்கிறேன். நான் மட்டுமல்ல,

அவருடைய வருகையை விரும்பும் அனைவரும் அங்கே இருப்பார்கள்.

ஆகவே பாவி நண்பரே, இன்றிரவு உங்கள் சிந்தனைகளை அதின்மேல் வையுங்கள். ஒருவேளை நீங்கள் வந்து, இங்கிருந்து வெளி யேறி, நள்ளிரவு இருளிலும், அலறல்களிலும், புலம்பல்களிலும், முனகல்களிலும் ஒருபோதும் ஓயாத ஒரு நித்தியத்திற்குள் செல்லும் இருண்ட சுழல் குழியில் இறங்கும் ஒரு சரிவில் (chute) சென்றால் என்ன செய்வது... இன்றிரவு, நீங்கள் கப்பல்களை மாற்றுவதற்கான உங்கள் முடிவை எடுக்கலாம். நீங்கள் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன். கிறிஸ்து இல்லாத அனைவரும் அந்த வழியில் செல்கிறார்கள். கிறிஸ்துவுடன் உள்ள அனைவரும் இந்த வழியில் செல்கிறார்கள். நீங்கள் அவரை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்கிறீர்களா இல்லையா என்பது மட்டுமே வித்தியாசம். ஆகையால் இன்றிரவு உங்கள் தெரிவைச் செய்யுங்கள், நாம் நம் தலைகளைத் தாழ்த்தி இப்போது ஜெபிப்போம்.

7 எங்கள் பரலோக பிதாவே, இன்றிரவு நாங்கள் இந்தப் பெரிய கலையரங்கத்தில் கூடியிருக்கிறோம்; இங்கே நீர் இரவுதோறும் எங்களைச் சந்தித்து, எங்கள் பசியுள்ள ஆத்துமாக்களை ஆசீர்வதித்து, ஜீவ அப்பத்தை, எங்கள் ஆத்துமாக்களுக்கான உணவைக் கொடுத் திருக்கிறீர்; ஆண்டவரே, தேவையிலிருப் பவர்களுக்கு இரட்சிப்பையும், தேவையிலிருப் பவர்களுக்கு சுகத்தையும், நாங்கள் கேட்ட காரியங்களையும் நீர் தந்தருளினீர். உமது உயிர்த்தெழுதலின் வல்லமையில் நாங்கள் உம்மைத் தரிசிப்பதற்காக உமக்கு நன்றியுள்ள வர்களாய் இருக்கிறோம். பிதாவே, இன்றிரவு நீர் எங்களுடன் இருக்கவும், எங்களுக்கு உதவவும், எங்களை ஆசீர்வதிக்கவும் நான் ஜெபிக்கிறேன். பிதாவே, இன்றிரவு அலைந்து திரிகிற பிள்ளைகளை ஆசீர்வதியும்; எந்த வழியில் செல்வது, அல்லது என்ன செய்வது என்று தெரியாமல், நிலையற்றவர்களாய், கிறிஸ்து வுக்குள் இன்னும் நங்கூரம் பாயாதவர்களாய் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இன்றிரவு, அவர்கள் அந்த கன்மலையாகிய கிறிஸ்துவுக்குள் தங்கள் நங்கூரத்தைப் பாய்ச்சும்படி நான்

ஜெபிக்கிறேன். இந்தக் கப்பல் சுழன்று கொந்தளிக்கும்போது, இந்த வாழ்க்கைக்கடலில் எங்கள் சிறு படகுகள் செல்லும்போது, எங்கள் நங்கூரம் திரைக்குள்ளே உறுதியாய் இருக்கிறது என்று நாங்கள் அறிவோம். தேவனே, அதை அருளும். பிதாவே, வார்த்தைக்குள் செல்லும்படி நாங்கள் ஜெபிக்கிறோம், வார்த்தையைப் போதிப்பதின் மூலம் இங்குள்ள ஒவ்வொரு நபருக்கும் உம்மை வெளிப்படுத்திக்கொள்ளும். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை எடுத்து, எங்களுக்குத் தேவையான படியே, ஒவ்வொரு இருதயத்திற்கும் அதைக் கொண்டு சேர்ப்பாராக. இந்தக் கூட்டத்தின் முடிவில், கர்த்தருடைய மகிமை ஜனங்கள்மேல் இருப்பதாக, ஏனெனில் உம்முடைய குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் நாங்கள் இதைக் கேட்கிறோம். ஆமென்.

சாத்தியமானால், இரவு ஒன்பது மணியளவில் ஜெப வரிசையை (prayer line) துவங்க நாங்கள் பொதுவாக முயற்சிப்போம், அதற்கு முன் சில நிமிடங்களுக்கு மட்டும். இப்போது... மக்களுக்குப் போதிப்பதற்கு இது எனக்குப் புதிதான ஒன்று. மேலும், ஜெப

வரிசையை வைப்பதற்கு முன்பாக மக்களுக்குப் போதிக்க முயற்சிப்பது, அனேகமாகப் பல ஆண்டுகளில் இதுவே எனது முதல் கூட்டமாகும் என்று நான் நினைக்கிறேன்.

கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு கைகள் உயர்த்தப்படுவதைப் பார்ப்பது என் இருதயத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. நான்... இரவில் வீட்டிற்குச் சென்று, தரிசனங்களிலிருந்து சற்றே வெளியே வரும் போது, சில நேரங்களில் அனைவரும் உறங்கச் சென்ற பிறகு நான் படுத்துக்கொண்டு, அதை நினைத்து மகிழ்ச்சியில் அழுவேன். "இன்றிரவு தேவன் பிரியமாயிருந்தார், ஏனென்றால் அது எனக்குத் தெரியும். பாவிகள் வீட்டிற்கு வந்தார்கள்." அது உண்மை. பின்னர் அவர் தனது ஆசீர்வாதங்களால் நம்மைக் கனப்படுத்தி, தனது ஆவியை ஊற்றி, விசுவாசத்தைக் கொடுத்து, நோயாளிகளைச் சுகமாக்குகிறார். இதைவிட நமக்கு வேறென்ன வேண்டும்?

8 இப்போது, இன்றிரவு இரண்டு இராஜாக்களில், நேற்றிரவு தீர்க்கதரிசியாகிய எலியாவைக்குறித்துப் பேசினோம். நேற்றிரவு

*எலியா... அதாவது எலியா, யோசபாத் மற்றும் அவர்கள் அவரைச் சந்திக்கக் கீழே வந்தவரை நாம் பார்த்தோம். இன்றிரவு, இரண்டு இராஜாக்கள் 4-ம் அதிகாரத்தில் அவரை மற்றொரு காட்சியில் காண்கிறோம். ஒரு தலைப்புக்காக (text), இரண்டு இராஜாக்கள் 4-ம் அதிகாரத்தின் 24-வது வசனத்தை நான் வாசிக்க விரும்புகிறேன்.*

**கழுதையின்மேல் சேணம்வைத்து ஏறி, தன் வேலைக்காரனை நோக்கி: இதை ஓட்டிக் கொண்டுபோ; நான் உனக்குச் சொன்னால் ஒழிய போகிற வழியில் எங்கும் ஓட்டத்தை நிறுத்தாதே என்று சொல்லிப் புறப்பட்டு,**

(2 *இராஜாக்கள்* 4:24).

*இந்த வசனத்தை வாசிப்பதைக் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.*

9 *இப்போது, இன்றிரவு நமது காட்சி துன்பத்தில் இருக்கும் ஒரு குடும்பத்தின் மீது தொடங்குகிறது. ஒருவேளை, இன்றிரவு இங்கே அமர்ந்திருக்கும் அநேக குடும்பங்கள் துன்பத்தில்*

இருப்பதை உணர்ந்து கொள்வது இன்றிரவு ஒரு நல்ல விஷயமாக இருக்கும்.

பழைய ஏற்பாட்டில் இதற்குக் குறைந்தது ஏதாவது ஒன்றை நாம் காண முடிந்தால், அதாவது விசுவாசிகள் துன்பத்தில் இருந்த அந்நாட்களில் என்ன செய்தார்கள் என்பதற்கு ஒரு உதாரணமாக, ஒருவேளை, நாம் அதை ஒரு எடுத்துக்காட்டாக எடுத்துக்கொண்டு, நமது நிலையை அறிந்து என்ன செய்ய வேண்டும் என்பதைக் கண்டறியலாம்.

தீர்க்கதரிசியாகிய எலியாவின் நாட்களில்... அவர் சபைக்கு ஒரு நிழலாட்டமாக (type) இருந்தார் என்பதை நேற்றிரவு நாம் பார்த்தோம். கிறிஸ்துவின் நிழலாட்டமாகிய எலியா எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, அந்த இரட்டிப்பான பங்கு தீர்க்கதரிசியின் (எலிசா) மேல் வந்தது... அவர் ஒரு புறஜாதி நாடாகிய சூனேமுக்குச் சென்றதை நாம் காண்கிறோம். அங்கே ஒரு கனம்பொருந்திய பெண் இருந்தாள். அவள் ஒரு இஸ்ரவேலி அல்ல; அவள் ஒரு சூனேமியாள்.

எலியா (எலிசா) இந்த நாட்டின் வழியாகச் செல்லும்போது, அவர் ஒரு பரிசுத்த மனிதர், ஒரு தேவ மனிதர் என்பதை அவள் கவனித்தாள். நாம் ராஜாவின் பிள்ளைகள் என்பதை மக்கள் அங்கீகரிக்கும் வகையில், மக்களுடனான நமது நடை மற்றும் தொடர்புகள் இருக்க வேண்டும் என்பதிலிருந்து நாம் எப்பேர்ப்பட்ட பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம். அப்படி இருக்கத் தேவன் நமக்கு உதவி செய்வாராக.

"எல்லா மனுஷராலும் வாசிக்கப்படுகிற நிருபங்களாய் இருக்கிறோம்" என்று வேதம் சொல்லுகிறது என்று நான் நம்புகிறேன். அந்தப் புறஜாதி நாட்டில் எலிசா தன்னைத் தானே அப்படி நடத்திக்கொண்டார், அதனால் அவர் உண்மையிலேயே தேவனுடைய ஊழியக்காரர் என்பதை அந்தச் சூனேமியாள் உணர்ந்து கொண்டாள். அவருடைய குணாதிசயம், அவருடைய நடத்தை, மற்றும் அவர் மூலமாகத் தேவன் செய்த காரியங்கள், அவர் கர்த்தருடைய ஊழியக்காரர் என்று அவளை அங்கீகரிக்கச் செய்தன. எனவே அவள் அவரிடம் சில நன்மைகளைக் காட்ட விரும்பினாள். எனவே

*அவள் அவரை இரவு உணவிற்கு வரச் செய்தாள், அல்லது இன்னும் அதிகமாக, அவருக்குச் சிறிய காணிக்கை கொடுத்தாள், ஏதாவது வாங்குவதற்கு அவருக்கு உதவினாள். அவள் எந்தப் பிரதிபலனையும் விரும்பியதினால் அல்ல, அன்பாக அவரை நடத்தினாள்.*

10 *மக்கள் தங்களுக்குப் பிரதிபலன் கிடைக்கும் என்று நினைத்து மக்களுக்குக் கொடுக்கும் போது, அவர்களுக்கு எந்தப் பிரதிபலனும் இல்லை. "நான் இதை இலவசமாகக் கொடுக்கிறேன், கைமாறு எதையும் நான் எதிர்பார்க்கவில்லை" என்று சொல்லி, தங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து இலவசமாகக் கொடுப்பவர்களே (பலனைப் பெறுவார்கள்).*

*"புறஜாதிகள், அல்லது அவிசுவாசிகள் அப்படிச் செய்கிறார்கள். அவர்கள் திரும்பப் பெறலாம் என்று எதிர்பார்க்கும்போது கொடுக்கிறார்கள்" என்று இயேசு சொன்னார். ஆனால் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், எந்தப் பிரதிபலனையும் விரும்பாதபோது கொடுக்கிறோம். நாம் சும்மா கொடுக்கிறோம்.*

இப்போது, அந்தப் பெண்ணுக்கு... அவள் அதைச் சிறிது நேரத்திற்குப் பிறகு நிரூபித்தாள். இந்த மனிதருக்குக் கொடுப்பதில், அவருக்குக் கொடுக்கும் ஆசீர்வாதங்களில் அவளுக்கு வேறு எந்த உள்நோக்கமும் இல்லை. உணவு, பணம், அவள் எதைக் கொடுத்திருந்தாலும், அவர் கடந்து செல்லும்போது அவருக்காக ஒரு சிறிய காணிக்கையை வைத்திருந்தாள், தேவனுக்குரிய மரியாதையினிமித்தமே அவள் அதைக் கொடுத்தாள். அவள் சொன்னாள், "இவர் ஒரு பரிசுத்த மனிதர் என்று எனக்குத் தெரியும். இவர் ஒரு தேவ மனிதர் என்று எனக்குத் தெரியும். மேலும் நான்... இவர் என்னுடைய சபைப் பிரிவைச் சேர்ந்தவர் அல்ல. இவர் என்னுடைய சபையைச் சேர்ந்தவர் அல்ல, ஒருவேளை என் போதகர் இவருடன் உடன்படாமல் இருக்கலாம்; ஆனாலும், இவர் தேவனுடைய பரிசுத்த மனிதர் என்று நான் நம்புகிறேன். இவர் தேவனுடைய ஊழியக்காரர் என்று நான் நம்புகிறேன். எனவே நான் இந்தச் சிறிய காணிக்கையை இவருக்குக் கொடுப்பேன்". எனவே அவள் தன் தயாள குணத்தினால் அதைச் செய்தாள்.

11 சிறிது நேரத்திற்குப் பிறகு, அந்த மனிதரிடம் ஏதோ உண்மையான நன்மை இருப்பதை அவள் உணரத் தொடங்கினாள். எனவே அவள் தன் கணவனிடம் சொன்னாள், "இதோ, இவ்வழியாய்ப் போகிற இந்த மனிதர் ஒரு தேவ மனிதர் என்று எனக்குத் தெரியும். அவர் தேவனுடைய ஊழியக்காரர். இப்போது, நம்மிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது. அவர் செல்லும்போது நாம் கொஞ்சம் கொடுத்து வருகிறோம். அவருக்குக் கொஞ்சம் தயவைக் காட்டுவோம். இங்கே எங்காவது ஒரு சிறிய அறையைக் கட்டுவோம். அவர் கடந்து செல்லும்போது, அவர் மலையில் ஏறி ஜெபிக்கவும் உபவாசிக்கவும் செல்லும் வழியில் மிகவும் சோர்வாகவும் களைப்பாகவும் காணப்படுகிறார்; அவர் அங்குப் பல நாட்கள் இருக்கிறார். நம்முடைய இடத்தில் இங்கே ஒரு சிறிய இடத்தை உருவாக்குவோம்... நம்மிடம் நிறைய நிலம் இருக்கிறது, எனவே அவருக்காக இங்கே ஒரு சிறிய அறையைக் கட்டி, அதில் ஒரு சிறிய மேஜை, ஒரு விளக்கு மற்றும் ஒரு சிறிய நாற்காலியைப் போடுவோம்; அவர் கடந்து செல்லும்போது, அவர் உள்ளே வந்து

தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, படுக்கையில் படுத்து, சிறிது நேரம் ஓய்வெடுக்கலாம்". ஒருவரைப் பற்றி அப்படிக் கரிசனை கொள்வது மிகப் பெரிய விஷயம்.

எனவே அவர்கள்... அவள் அவருக்கு இந்த இடத்தைச் தயார் செய்தாள். அவளுடைய கணவன், ஒருவேளை ஒரு நீதிமானாகவும் நல்ல மனிதராகவும் இருந்தபடியால், அவர், "சரி, அது நன்றாக இருக்கும்" என்று சொன்னார்.

எனவே அவர்கள் சென்று ஒரு சிறிய இடத்தைக் கட்டி, தீர்க்கதரிசி அவ்வழியாய்க் கடந்து செல்லும்போது அதை அவருக்குக் கொடுத்தார்கள்.

ஒரு நாள், எலிசா அந்த வழியாக வரும்போது, அவர் அங்கே தங்கினார். அவர் இந்தச் சிறிய இடத்தைக் கண்டார். நிச்சயமாக, மக்கள் தன்னை நேசிப்பதைப் பார்த்து அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

இப்போது, எல்லோரும் நேசிக்கப்பட விரும்புகிறார்கள். நான் உங்களுக்கு உண்மையைச் சொல்கிறேன். நான்

விரும்புகிறேன். தேவன் என்னை நேசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், மக்கள் என்னை நேசிக்க வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். அதுதான் முற்றிலும் உண்மை. தேவன் என்னை நேசித்தால், மக்களும் என்னை நேசிப்பார்கள். நான் அவருடைய மக்களை நேசித்தால், அதைச் செய்வதற்காக அவர் என்னை நேசிப்பார். நான் அவரை நேசிப்பதை விட உங்களை நேசிப்பதையே தேவன் விரும்புகிறார். அது உங்களுக்குத் தெரியுமா?. என்னைப் பற்றி நீங்கள் என்ன சொன்னாலும் பரவாயில்லை, அங்கே இருக்கும் என் பையனை நீங்கள் நேசிப்பதையே நான் விரும்புகிறேன். நீங்கள் என் பிள்ளைகளை நேசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எந்தத் தந்தையும் அதைத்தான் நினைப்பார். பிதாவாகிய தேவனும் அதையே நினைக்கிறார், ஏனென்றால், "மிகச் சிறியவர்களாகிய இவர்களுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்று அவர் சொன்னார். எனவே நீங்கள் தேவனை நேசிக்க விரும்பினால், அவருடைய பிள்ளைகள் அனைவரையும் நேசிக்கத் தொடங்குங்கள்.

தேவன் உங்களுக்குப் பலனளிப்பார். நீங்கள் அவருடைய பிள்ளைகளை நேசித்தாலே, தேவனுடைய அன்பு உங்களுக்குள் இருப்பதைக் காட்டுகிறது.

12 இயேசு சொன்னார், "நீங்கள் ஒருவரி லொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதி னால் நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்றும், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட் பட்டிருக்கிறீர்கள் என்றும் எல்லா ஜனங்களும் அறிந்துகொள்வார்கள்". அப்போது நீங்கள் அதை அறிவீர்கள். உங்களிடம் ஒரு பெரிய சபை இருப்பதால் அல்ல, அதுவும் நல்லதுதான். நிறையச் சிறந்த போதகர்கள் வருவதால் அல்ல, அதுவும் நல்லதுதான். ஆனால் நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாய் இருப்பதி னாலேயே அறிந்துகொள்வார்கள்.

இப்போது, இந்த எழுப்புதல் முடிந்து நீங்கள் அனைவரும் உங்கள் அந்தந்த சபைகளுக்குச் செல்லும்போது... ஒரு சபையை விட்டுவிட்டு இன்னொரு சபைக்குச் செல்லுங்கள் என்று சொல்லி, உங்களை மதம் மாற்றுவதற்காக (proselyte) நாங்கள் இங்கு

வரவில்லை. உங்கள் சபையை வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சபைக்குச் சில பாவிகளைக் கொண்டு வர முயற்சி செய்யுங்கள்.

பின்னர் நீங்கள் உங்கள் அந்தந்த சபைக்குத் திரும்பும்போது, அன்பு நிறைந்த இருதயத்துடன் திரும்பிச் செல்லுங்கள். உங்களால் தாங்கிக் கொள்ள முடியாத அந்தப் பெண் அல்லது அந்த மனிதனை, எப்படியும் அவனையோ அல்லது அவளையோ நேசியுங்கள். அப்போது கூட்டத் திலிருந்து நீங்கள் எதையோ பெற்றுக் கொண்டீர்கள் என்று அவர்களுக்குத் தெரியும். அது உண்மை. நீங்கள் அதைச் செய்யா விட்டால், நீங்கள் எதையும் பெறவில்லை என்றே அர்த்தம். ஏனென்றால் நீங்கள் ஒருவரிலொருவர் அன்பு செலுத்த வேண்டும். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாய் இருக்கும்போது, நீங்கள் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறீர்கள் என்று வெளியுலகம் அறிந்துகொள்ளும்.

இயேசு சொன்னார், "நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப் போனால் (அதன் பலன் இழந்தால்), அது

வெளியில் கொட்டப்படுவதற்கும் மனிதரால் மிதிக்கப்படுவதற்கும் ஒழிய வேறொன்றுக்கும் உதவாது". கடந்த ஆண்டு நான் கலிபோர்னியாவில் ஃபோர்ஸ்கொயர் (Four square) மக்களுக்காக உங்கள் மாநாட்டை நடத்திக் கொண்டிருந்தபோது, நான் சால்ட் லேக் (Salt Lake) பாலைவனங்களைக் கடந்து சென்றேன், அங்கே நான் அதைக் கண்டேன், உப்பு அதன் சாரத்தை இழந்துவிட்டது, நடைபாதை அமைப்பதைத் தவிர வேறொன்றுக்கும் அது உதவாது.

13 ஆனால் உப்பு தொடர்புகொண்டால் அது சுவையூட்டும். உங்களிடம் இங்கே ஒரு துண்டு இறைச்சியும், இங்கே ஒரு பீப்பாய் உப்பும் இருந்தால், இறைச்சியைப் பாதுகாக்க, உப்பை இறைச்சியுடனோ அல்லது இறைச்சியை உப்புடனோ நீங்கள் ஒன்றாகச் சேர்க்க வேண்டும். அது அப்படித்தான் இருக்கிறது. நாம் விசுவாசியை அவிசுவாசியுடன் சேர்க்க வேண்டும்.

அது சரி. அவர்களைச் சபைக்குள், உப்பாய் இருக்கிற மக்களின் கூட்டத்திற்குள் நீங்கள்

கொண்டு வர வேண்டும். உங்களுக்குத் தெரியும், உப்பு தாகத்தையும் உண்டாக்குகிறது, இல்லையா? நீங்கள் உப்பு சாப்பிட்டால், உங்களுக்குத் தாகம் எடுக்கும். உலகம் முழுவதும் அவர்களைப் போல இருக்க வேண்டும் என்று தாகம் கொள்ளும் அளவுக்குத் தேவன் தமது சபையை அவ்வளவு உப்பாக இருக்க விரும்புகிறார் (அது சரி, புரிகிறதா?), தாகம், வெறும் தாகம் கொள்ள வேண்டும். "ஓ, அந்தப் பெண் வாழ்ந்ததைப் போல நான் வாழ முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அவள் மிகவும் இனிமையான, அமைதியான நபர், ஒருபோதும் கோபப்படுவதில்லை, சண்டையிடுவதில்லை. அவள் எப்பொழுதும் அன்பாக, வேறு யாருக்காவது உதவ ஏதாவது செய்ய முயற்சிக்கிறாள். அவள் எந்த ஒரு மனிதரின் சபைக்கும் ஒரு நற்பெயர்" என்று நினைத்துப் பாருங்கள்.

ஆம் ஐயா, அந்த மனிதர்... அவர் ஒரு அண்டைவீட்டார்; அவர் ஒரு பண்பாளர்; அவர் தேவனுடைய அன்பினால் நிறைந்திருக்கிறார். அவர் இரவின் எல்லா நேரங்களிலும் எங்காவது முழங்காலில் நின்று ஜெபிப்பதை நீங்கள்

பார்க்கலாம். அவர் எப்பொழுதும் ஏதாவது செய்யத் தயாராக இருக்கிறார்; அவர் எப்போதும் கர்த்தராகிய இயேசுவைப் பற்றியும் அவருடைய இரக்கத்தைப் பற்றியும் பேசுகிறார். உலகத்தை உப்பாக மாற்றும் வழி அதுதான். அதுபோல நடந்து கொள்ளுங்கள்.

எலியா அந்த வகையான நபராக இருந்தார். அப்பொழுது, ஒரு நாள், அந்த வழியாக வரும்போது, தனது பயணத்தில் களைப்பாய் இருந்ததால், "இதோ பார்," கதவில் தொங்கும் ஒரு சிறிய பலகையில், "இந்தச் சொத்து இவ்வழியாகச் செல்லும் தேவ மனிதருக்கு உரியது" என்று எழுதியிருப்பதை அவர் பார்த்ததாக என்னால் காண முடிகிறது. "கேயாசியே, இதோ பார், இங்கே உள்ள இந்தச் சூனேம் மக்கள் நமக்கு இந்தச் சிறிய இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள், நாம் இங்கே தங்கலாம்" என்று அவர் தனது வேலைக்காரனிடம் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது. அவர் கதவைத் திறக்கிறார், ஏனென்றால் அது அவருடையது, உள்ளே சென்று, படுக்கையில் படுத்து, தன்னை நிமிர்த்திக் கொள்கிறார். "கேயாசி, அவள் நம்மிடம் மிகவும் அன்பாக

இருந்திருக்கிறாள் என்று உனக்குத் தெரியும். நமக்குத் தேவையான எல்லாவற்றையும் அவள் நமக்குச் செய்திருக்கிறாள். உள்ளே போய் அவளிடம் பேசு" என்றார். அவரே உள்ளே சென்றிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால் அவர், "நீ உள்ளே போய் அவளிடம் பேசு, நான் ராஜாவினிடத்திலாவது அல்லது படைத்தலைவனிடத்திலாவது பேச வேண்டுமா என்று கேள். அவர்கள் அனைவரும் என்னை விரும்புகிறார்கள். நான் அவர்களுக்கு நல்ல நண்பன். ஒருவேளை அவள் ஏதாவது உதவி அல்லது அதுபோன்ற எதையாவது விரும்புவாள்" என்றார். எலியா அவளைச் சோதித்துப் பார்த்தார் என்று நான் நம்புகிறேன்.

14 எனவே அவன் சென்று, அவளிடம் கேட்டான், அதற்கு அவள், "இல்லை, நான் என் சொந்த ஜனங்களுக்குள்ளே குடியிருக்கிறேன், இதற்கு நான் எந்தப் பிரதிபலனையும் விரும்பவில்லை. நான் கர்த்தரை நேசிப் பதாலும், அவருக்காக ஏதாவது செய்ய விரும்பு வதாலும் மட்டுமே இதைச் செய்தேன், என்னால் முடிந்த ஒரே வழி இதுதான், அவர் ஒரு உண்மையான தேவ ஊழியர் என்றும், தேவ

மனிதர் என்றும் நான் கண்டேன், அதனால் அந்த நோக்கத்திற்காகவே நான் இதைச் செய்தேன். எனக்கு எந்தப் பிரதிபலனும் வேண்டாம்" என்று சொன்னாள்.

எனவே அவன் திரும்பிச் சென்றான், எலிசா அதைப் பற்றிச் சிறிது நேரம் பேசினார். கேயாசி, "எலிசா, நான் ஒன்று சொல்கிறேன், அவளுக்குப் பிள்ளைகள் இல்லை, அவள் கணவன் வயதானவர்" என்று சொன்னதாக நான் கற்பனை செய்கிறேன்.

"ஆம்," என்று எலிசா சொன்னார். அவர் அங்கிருந்த அந்தச் சிறிய படுக்கையில் திரும்பிப் படுத்து, சில நிமிடங்கள் யோசித்திருப்பார் என்று நான் கற்பனை செய்கிறேன். சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு தரிசனம் அவருக்கு முன்பாக வந்தது, அந்தப் பெண் ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதை அவர் பார்த்தார், "போய் அவளை இங்கே அழைத்து வா" என்றார்.

எனவே அவன் போய் அந்தப் பெண்ணை வாசலுக்கு அழைத்து வந்தான், அவள்

வாசலுக்கு வந்தபோது, அவர், "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உற்பவகாலத் திட்டத்தின்படி, அடுத்த வருஷம் இந்நேரத்தில் நீ ஒரு குமாரனை அணைத்துக்கொள்வாய்" என்றார்.

15 அதற்கு அவள், "வேண்டாம், என் ஆண்டவனே," என்று சொல்லி, "என் கணவர் வயதானவர்" என்றாள், ஆனால் அதே சமயம் எலியா, "இது கர்த்தருடைய நாமத்தில்" என்று சொன்னார், ஆகவே அது அத்தோடு முடிந்தது. தேவன் எதையாவது சொன்னால், அது அங்கேயே முடிந்தது. அவ்வளவுதான். இனி அதைப்பற்றிச் சந்தேகப்படத் தேவையில்லை, தேவன் அப்படிச் சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்து பூமிக்குத் திரும்புகிறார் என்று தேவன் சொன்னால், நான் அதை நம்புகிறேன். அது உண்மை. இப்படிப்பட்ட காலங்கள் வரும் என்றும், மனிதர்கள் இறுமாப்புள்ளவர்களாயும், தேவனைப் பார்க்கிலும் சிற்றின்பப் பிரியர்களாயும் இருப்பார்கள் என்றும் தேவன் சொல்லியிருந்தால், நான் அதை நம்புகிறேன்.

அது உண்மை. தேவன் சொல்லும் அனைத்தையும், நான் நம்புகிறேன்.

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார்" என்று அவர் சொன்னார். நான் அதை நம்புகிறேன். "அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம்" என்று அவர் சொன்னார், நான் அதை நம்புகிறேன். ஆகவே அது முடிந்தது. புரிகிறதா? நீங்கள் அதை நம்பினால், அதை எடுத்துக்கொள்ளுங்கள், அதன்படி செயல்படுங்கள், அவ்வளவுதான்... முடிவுகள் வரும்.

அது எவ்வளவு தாமதமானாலும், தொடர்ந்து விசுவாசியுங்கள். ஆபிரகாம் தாமதித்தார், அல்லது வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு ஆபிரகாம் இருபத்தைந்து ஆண்டுகள் காத்திருந்தார். ஆனால் அவர் தேவனைத் துதித்து, எல்லா நேரத்திலும் பலவடைந்துகொண்டே இருந்தார்: எப்படியும் குழந்தை பிறக்கப் போகிறது, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார், எல்லாவற்றையும், அந்த நிகழ்விற்காகத் தயார் செய்தார். அது நடக்கப்போகிறது என்று தேவன் அவரிடம் சொன்னவுடனேயே, அவர்

எல்லாவற்றையும் தயார் செய்தார். பின்னர், இருபத்தைந்து ஆண்டுகள் காத்திருந்தும், இறுதியாக அது நடக்கும் வரை காத்திருந்து, எல்லா நேரத்திலும் பலவடைந்துகொண்டே இருந்தார். தேவன் பேசும்போது, அது நிறைவேறியே தீர வேண்டும்.

16 எனவே எலிசா அவளிடம் ஒரு குழந்தை பிறக்கும் என்று சொன்னார். எலிசா சொன்ன அதே நேரத்தில் அது நடந்தது. ஏனென்றால் அவர் ஒரு தீர்க்கதரிசி. அவர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் கீழ் இருந்தார், அது நிறைவேறியே தீர வேண்டும்.

அந்தச் சிறு பையனுக்குச் சுமார் பன்னிரண்டு வயதானது, எலிசா அவ்வழியே வந்து, படுக்கையில் படுத்து, பின்னர் கர்மேல் மலைக்குச் செல்வார், அங்கே அவர் ஜெபிப்பதற்கு ஒரு குகை இருந்தது. ஒரு நாள் அந்தச் சிறுவன் தன் தந்தையுடனும், அறுவடை செய்பவர்களுடனும் வயலில் இருந்தான். பகல் சுமார் பதினொரு மணியளவில், அதுபோல... அந்தச் சிறு பையனுக்கு வெயில் தாக்கம் (sunstroke) ஏற்பட்டது என்று நான் நம்புகிறேன்,

ஏனென்றால் அவன், "என் தலை, என் தலை" என்று அலறத் தொடங்கினான். வயலில் அந்த நேரத்தில், அனேகமாகத் தலைப்பாகை இல்லாத ஒரு சிறு பையன், சுமார் பன்னிரண்டு வயதுடையவன், அறுவடை செய்பவர்களுக்குப் பின்னால் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தான், பாலைவனம் போன்ற அந்தப் பகுதியில் கீழே வெகு தூரத்தில் இருந்தான். ஒருவேளை அந்தச் சிறிய பையனுக்கு வெயில் தாக்கம் ஏற்பட்டிருக்கலாம். எனவே அவனது தந்தை ஒரு வாலிபனை அழைத்து அவனைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குச் செல்லும்படிச் சொன்னார். அவன் மதியம் வரை தன் தாயின் மடியில் இருந்தான், பின்னர் அவன் இறந்து போனான்.

இப்போது, எல்லாம் முடிந்துவிட்டது போல் தோன்றியது. எனவே அந்தத் தாய் அந்தச் சிறிய பையனைத் தூக்கினாள்... இப்போது, கவனியுங்கள், அந்தச் சிறு பையனை வைத்து அவள் செய்த முதல் காரியம், அவள் அவனைத் தன் சொந்த வீட்டிலிருந்து நேராக வெளியே எடுத்து, எலியாவின் வீட்டிற்குள் கொண்டு சென்று, தீர்க்கதரிசி படுத்திருந்த படுக்கையில்

அவனைப் படுக்க வைத்தாள். நல்ல ஞானம் என்று நான் நம்புகிறேன்.

17 அவனைத் தனியே எடுத்துச் சென்று, அவிசுவாசத்திலிருந்து அவனைப் பிரித்து, தீர்க்கதரிசி இருந்த அறையில் அவனை வைத்து, கதவை மூடினாள், யாரும் உள்ளே சென்று அவனைச் சுற்றிக் குழப்பம் விளைவிக்க அனுமதிக்கவில்லை, மாறாக அவள் அவனை அறைக்குள் வைத்து, கதவை மூடினாள். அவளுடைய கணவன் உள்ளே வந்தார், நிச்சயமாக, அங்கே நிறைய அழுகையும், கூக்குரலும், சத்தமும் இருந்தது. அவள், "எல்லாம் நலமாயிருக்கும். இப்போது, எனக்காக ஒரு கோவேறுக்கழுதையை ஆயத்தம் செய், நான் தேவ மனிதரிடம் போகிறேன்" என்றாள்.

இப்போது, எல்லா நம்பிக்கையும் போய்விடவில்லை, ஏதோ ஒன்று செய்ய முடியும் என்று அவள் இருதயத்தில் ஏதோ ஒன்று சொல்லத் தொடங்கியது. எல்லா மூலிகைகளும், ஒருவேளை மருத்துவரும் கூட அங்கே இருந்திருக்கலாம், அவரால் முடிந்ததைச் செய்திருக்கலாம். ஒன்றும் செய்ய முடிய

வில்லை, அவளுக்குத் தெரிந்த எல்லா வைத்தியங்களையும் அவள் செய்துவிட்டாள். எதுவும் செய்ய முடியவில்லை. அந்தச் சிறிய பையன் இறந்துவிட்டான்.

இப்போது, அவள் நினைத்தாள்... அல்லது ஒருவேளை, மற்றவர்கள் அனைவரும் நினைத்திருக்கலாம், எல்லா நம்பிக்கையும் போய்விட்டது என்று. ஆனால் உயிரோடிருந்து ஆளுகை செய்கிற ஒரு தேவன் இன்னும் இருக்கிறார் என்பதை அவள் அறிந்திருந்தாள். ஓ, என்மே. அதை மட்டும் நாம் பெற்றுக்கொள்ள முடிந்தால்.

இப்போது, அவள் இருதயத்தின் ஆழத்தில் ஏதோ ஒன்று துடிக்கத் தொடங்கியது. "நான் தேவ மனிதரைக் கண்டுபிடிக்க விரும்புகிறேன். நான் மீண்டும் சபைக்குச் செல்ல விரும்புகிறேன்". பொதுவாகத் துன்பம் ஒரு வீட்டைத் தாக்கும்போது ஒரு நபரின் இருதயத்தில் தோன்றுவது இதுதான். "நான் தேவ மனிதரை மீண்டும் பார்க்க விரும்புகிறேன்".

18 அவளுடைய கணவன், "ஏன், அவர் இந்த வழியாகச் செல்லவில்லையே. அவர் அமாவாசையிலும் ஓய்வுநாள் ஆராதனையிலும் மேலே செல்வார். அவர் அங்கே செல்வார், ஆனால் இன்று அமாவாசையும் இல்லை, ஓய்வுநாளும் இல்லை. அதனால் அவர் அங்கே இருக்க மாட்டார்" என்றார்.

அவள், "எல்லாம் நலம்" என்றாள்.

ஏன்? அத்தகைய எண்ணத்தை அவள் எதை அடிப்படையாகக் கொண்டு சொல்ல முடியும்? ஏனென்றால் அவள் இருதயத்தில் ஆழமாக இருந்த ஏதோ ஒன்று, "தேவ மனிதரிடம் போ" என்று அவளிடம் சொன்னது. உங்களுக்குப் புரிகிறதா?

இப்போது, பிரபஞ்சத்தை ஆளுகிற ஒரு தேவன் இருக்கிறார் என்று அவளுக்குத் தெரியும். சூரியனைப் பிரகாசிக்கவும், கோதுமையை வளரவும், மரத்தையும் செய்தவர், ஜீவனைக் கொடுத்த தேவன் என்று அவளுக்குத் தெரியும். பூமியில் தேவனுக்கு ஒரு பிரதிநிதி (representative) இருப்பதை அவள்

அறிந்திருந்தாள். அந்தப் பிரதிநிதி தீர்க்கதரிசி ஆவார். அவளால் எப்படியாவது தீர்க்கதரிசியிடம் செல்ல முடிந்தால்... மகன் உயிர்த்தெழுப்பப்படுவான் என்ற எண்ணம் அவளுக்கு இருந்ததாக நான் நினைக்கவில்லை. ஆனால் அவள் தீர்க்கதரிசியிடம் சென்றால், தேவன் ஏன் தன் குழந்தையை எடுத்துக்கொண்டார் என்பதைத் தன்னால் புரிந்து கொள்ள முடியும் என்று அவள் நினைத்தாள்.

19 இப்போது, மக்கள் தேவனுடைய ஊழியர் மூலம் தேவன் என்ன செய்ய முடியும் என்பதை உணருவதில்லை. இன்று மக்களால் அதிகம் சாதிக்க முடியாததற்குக் காரணம், அவர்கள் தேவனுடைய ஊழியர்கள் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டதேயாகும். அது உண்மை. அதில் ஒரு பகுதி ஊழியரின் தவறு. அவர் உங்களுக்குப் பல வருடங்களுக்கு முந்தைய தேவனைப் பற்றிச் சொல்ல முயன்றார், ஆனால் தேவன் எப்பொழுதும் செய்தது போலவே தனது ஊழியர்களைப் பயன்படுத்தி இன்றும் பூமியில் தேவனாகவே இருக்கிறார். அவர் தவறுவதில்லை; அவர் அதே தேவன். எல்லா யுகங்களிலும், ஒவ்வொரு

யுகத்திலும், அவர் தனது கரங்களை வைப்பதற்கு ஒருவரை வைத்திருந்தார். மேலும் தேவன் தம்முடைய ஊழியர்கள் மூலம் ஏதாவது செய்வார் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். ஆமென்.

"ஓ," அவள், "எல்லாம் நலமாயிருக்கும். எல்லாவற்றையும் விட்டு விடுங்கள்" என்றாள். எனக்கு அது பிடித்திருக்கிறது. அவள் எலிசாவைச் சென்றடைந்தால், குழந்தை ஏன் இறந்தது என்பதைத் துல்லியமாகக் கண்டு பிடித்துவிடுவாள் என்று அவள் இருதயத்தில் ஏதோ ஒன்று உறுதியாக இருந்தது, ஏனென்றால் அவர் தேவனுடைய ஊழியக்காரர் என்பதை அவள் அறிந்திருந்தாள்.

எனவே அவர்கள் கோவேறுக்கழுதையை ஆயத்தப்படுத்தினார்கள். அவள் வேலைக்கா ரனுக்குக் கொடுத்த இந்தக் கட்டளை எனக்குப் பிடித்திருக்கிறது. "நீ முன்னோக்கிச் செல்; நான் உனக்குச் சொன்னாலொழிய, நீ நிற்கவோ, அல்லது தணிக்கவோ (slack), அல்லது எதுவும் செய்யவோ கூடாது" என்று அவள் சொன்னாள்.

20 நான் இதை நினைக்கிறேன். சபைக்கும் இது போன்ற ஒரு கட்டளை இருக்க வேண்டும். முன்னோக்கிச் செல்லுங்கள்; நிற்காதீர்கள்; தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருங்கள். இந்தப் பிரச்சாரம் முடியும் போது, வேறொரு இடத்தில் இன்னொன்றைத் தொடங்குங்கள். காத்திருக்க வேண்டாம்; சும்மா காத்திருக்க வேண்டாம்; தேவனுக்காகத் தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருங்கள். தொடர்ந்து முன்னேறிக் கொண்டே இருங்கள், ஏனென்றால் மக்கள் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும், எங்கேயோ ஒரு இடத்தில், ஒருவேளை உலகெங்கிலும் ஒவ்வொரு நாளும் ஒரு இலட்சம் மக்கள் இறக்கிறார்கள். உலகெங்கிலும் ஒவ்வொரு நாளும் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் பேர் இறக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்களில் சுமார் ஒரு இலட்சம் பேர் கிறிஸ்துவை அறியாமலே மரிக்கிறார்கள். சும்மா சுற்றித் திரிவதற்கு நமக்கு நேரம் இல்லை. நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும், கொஞ்சம் கூடத் தணிக்கக் கூடாது.

21 இந்தப் பிரச்சாரம் மட்டுமல்ல... நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள், ஆத்துமாக்கள் இரட்சிக்கப் படுவதைப் பார்க்கிறீர்கள், தொடர்ந்து முன்னேறுங்கள், எதையும் தணிக்க வேண்டாம். போதகர்களே, ஓரல் ராபர்ட்ஸ் (Oral Roberts), அல்லது வில்லியம் பிரான்ஹாம் (William Branham) அல்லது வேறு யாராவது வரும் வரை காத்திருக்க வேண்டாம். உங்கள் சபையில் தெய்வீகச் சுகத்தைப் பயிற்சி செய்யுங்கள். நாம் முன்னோக்கிச் செல்வோம், மக்கள் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தேவ மனிதராகிய கிறிஸ்துவிடம் கொண்டு சேர்ப்போம். ஏதோ விசேஷித்த நிகழ்வுக்காகக் காத்திருக்க வேண்டாம், இப்பொழுதே செல்லுங்கள். வேறு யாரையும் போலவே நீங்களும் தேவனுடைய ஊழியக்காரர். நீங்கள் அழைக்கப் பட்டிருக்கிறீர்கள், மெத்தடிஸ்ட், பாப்டிஸ்ட், பிரஸ்பிடீரியன் யாராயிருந்தாலும். உங்களிடம் தேவனிடமிருந்து ஒரு கட்டளை இருந்தால், "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். வியாதிக்காரர்மேல் கைகளை வைப்பார்கள்,

அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள். விசுவாசிக்கிறவர்களிடத்தில் இந்த அடையாளங்கள் நடக்கும்" என்பதே பொதுவான உத்தரவுகள் ஆகும். உங்களிடம் தேவனிடமிருந்து ஒரு கட்டளை இருந்தால், இவைகளைச் செய்யத் தேவனிடமிருந்து உங்களுக்கு ஒரு அதிகாரம் உண்டு. ஆமென்.

யாருக்கு இருக்கிறது? நீங்கள் சொல்கிறீர்கள், "ஓ, இயேசுவால் அவற்றைச் செய்ய முடியும்" என்று.

"உங்களால் அவற்றைச் செய்ய முடியும்" என்று அவர் சொன்னார். "என் நாமத்தினாலே... அவர்கள்..." ஆமென். நீங்கள் குதிரைக்கு முன் வண்டியைக் கட்டுகிறீர்கள் (cart before the horse - வரிசை மாறுகிறீர்கள்). புரிகிறதா? சரி.

"என் நாமத்தினாலே 'அவர்கள்' பிசாசுகளைத் துரத்துவார்கள். 'அவர்கள்' வியாதிக்காரர்மேல் கைகளை வைப்பார்கள்." அது சரியா?. "'அவர்கள்' வியாதிக்காரர்மேல் 'தங்கள்' கைகளை வைப்பார்கள், அப்பொழுது 'அவர்கள்' சொஸ்தமாவார்கள்." அதுதான் கட்டளை. அதை

எடுத்துக்கொண்டு போவோம். இன்று நாம் இந்தக் காரியங்களில் மிகவும் தளர்வாக இருக்கிறோம்.

22 மக்களிடையே ஒரு சிறிய எழுச்சி ஏற்படுகிறது, அதன்பின் நாம் அமைதியடைந்து விடுகிறோம், அது எப்படியென்றால், பிசாசு தனது காற்றை நம் மீது வீசுவதைப் போல இருக்கிறது, மேலும் நாம் வேதாகமத்தை எடுப்பதற்குப் பதிலாக, வீட்டில் எங்கோ இருக்கும் ஒரு பழைய "ட்ரூ ஸ்டோரி" (True Story) பத்திரிகையை எடுத்துக் கொள்கிறோம். இன்றிரவு இந்த நகரத்தில் அநேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் ஹாலிவுட்டைக் குறித்து எல்லாவற்றையும் உங்களிடம் சொல்ல முடியும், ஆனால் தேவனைப் பற்றி அவர்களுக்கு வேறு ஒன்றும் தெரியாது, இருந்தும் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கிறார்கள். இது ஒரு வெட்கக்கேடு. ஆமென்.

ஜெபக் கூட்டத்தின் இரவு வரும்போது, நீங்கள் ஜெபக் கூட்டத்திற்குச் செல்லாமல், வீட்டிலேயே தங்கித் தொலைக்காட்சியைப்

*பார்க்கிறீர்கள். அது சரியா? நிச்சயமாக. செய்தித்தாள்களை வாசிக்க நேரம் இருக்கிறது, இதைச் செய்ய நேரம் இருக்கிறது, உங்கள் சமூகக் கூட்டங்கள் மற்றும் காரியங்களை வைத்துக்கொள்ள நேரம் இருக்கிறது, ஆனால் தேவனுக்காக நேரம் இல்லை. நமக்கு இன்று தேவைப்படுவது ஒரு நல்ல பழைய பாணியிலான அப்போஸ்தலனாகிய பவுலின் எழுப்புதலும், வேதபூர்வமான பரிசுத்த ஆவி மீண்டும் சபைக்குள் வருவதும், அடையாளங்களும், அற்புதங்களும், அதிசயங்களுமே ஆகும். சரியான காரியத்தைத் தவிர, மற்ற எல்லாவற்றிற்கும் நேரம் இருக்கிறது.*

*அதுதான் இன்று உலகம் இந்த நிலையில் இருப்பதற்குக் காரணம். குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள நேரமில்லை, அவர்களைத் தெருக்களில் திரிய விடுகிறார்கள்.*

*தங்களை உண்மையான தாய்மார்கள் என்று அழைத்துக்கொள்ளும் பெண்களே, உங்கள் குழந்தைகள் பாதி நேரம் எங்கே இருக்கிறார்கள் என்று கூட உங்களுக்குத் தெரிவதில்லை. அது மெத்தடிஸ்ட் மற்றும் பிரஸ்பிடீரியனில் மட்டு*

மல்ல; பெந்தெகோஸ்தேவிலும் அப்படித்தான் இருக்கிறது. அது உண்மை. அது சத்தியம் என்று உங்களுக்குத் தெரியும். சிறார் குற்றச் செயல்களைப் (juvenile delinquency) பற்றிப் பேசுகிறார்கள், அது பெரும்பாலும் பெற்றோரின் குற்றச்செயலே (parent delinquency) ஆகும். இன்று பெற்றோருக்குத் தேவைப்படுவது என்னவென்றால், அந்த ஐஸ் பெட்டியில் (ice box) இருக்கும் பழைய பீர் கேன்களை வெளியே எடுத்து, மேஜையின் மேல் இருக்கும் சீட்டுக் கட்டுகளை அகற்றிவிட்டு, அவ்விடத்தில் வேதாகமத்தை வைத்து, அதைத் திறந்து பிள்ளைகளைச் சுற்றிலும் அழைத்து ஒரு ஜெபக் கூட்டத்தை நடத்துவதே ஆகும். அதுதான் இன்று நமக்குத் தேவை. அது உண்மை.

23 என் ஊராகிய கென்டக்கியில் (Kentucky) உங்களில் சிலர் இருக்கிறீர்கள், கென்டக்கியின் கல்வியறிவின்மை பற்றியும், அவர்கள் எவ்வளவு அறியாதவர்கள், எவ்வளவு ஊமையா னவர்கள் என்றும் சொல்லும் சிறிய பழைய பழமொழிகள் அவர்களிடம் உள்ளன.

ஒரு போதகர் என்னிடம் சொன்னார், அவர் கென்டக்கிக்குக் கீழே செல்ல விரும்பவில்லை, ஏனென்றால் கென்டக்கியில் வசிக்கும் மக்கள் மிகவும் முட்டாள்கள் என்று. நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்லுகிறேன், அங்கே இருக்கும் சில பழைய நரைத்த முடி கொண்ட தாய்மார்கள் (mammies) உங்களுக்குச் சிலவற்றைக் கற்றுக்கொடுக்க முடியும். அது உண்மை.

உங்கள் மகள் ஏறக்குறைய இரவு முழுவதும் சிகரெட் பிடிக்கும், விஸ்கி குடிக்கும் சில பழைய அயோக்கியர்களுடன் வெளியே சுற்றித்திரிந்து, காலையில் பாதி ஆடையுடனும், அதுபோன்ற எல்லாவற்றோடும் உள்ளே வர அனுமதித்துவிட்டு, உங்களை நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்று அழைத்துக் கொண்டு அவளிடம் ஒன்றும் சொல்லாமல் இருக்கிறீர்களா? கென்டக்கியில் அது நடக்கட்டும், அந்தப் பழைய தாய்மார்களில் ஒருவர் அந்த வாதுமை மரக் குச்சிகளில் (hickories) ஒன்றை எடுத்து வருவார்; அவள் ஆறு மாதங்களுக்கு அசைய முடியாது. ஆம், ஐயா.

இன்று நமக்குத் தேவைப்படுவது, அவ்வப்போது அவர்களுக்குச் சிறிதளவு சரீரத் தூண்டுதலைக் (protoplasa stimulation) கொடுப்பதை நம்புகிற சில பழைய, உண்மையான பழைய காலத்து அமெரிக்கத் தாய்மார்கள்தான். அது முற்றிலும் சரி. அது சரி என்று உங்களுக்குத் தெரியும். ஆமென்.

24 சபை எல்லாவற்றையும் அனுமதித்து வேலிகளை இறக்கிவிட்டது, அவர்கள் அனைவரும் பாடுகிறார்கள்: "அவர்கள் வேலிகளை இறக்கிவிட்டார்கள்; நாம் பாவத்துடன் சமரசம் செய்துகொண்டோம். நாங்கள் வேலிகளை இறக்கிவிட்டோம், ஆடுகள் வெளியேறின, ஆனால் வெள்ளாடுகள் எப்படி உள்ளே வந்தன?" நீங்கள் வேலிகளை இறக்கிவிட்டீர்கள், அதுதான் நடந்தது. நீங்கள் கிறிஸ்தவத்தின் தரங்களை இறக்கிவிட்டீர்கள். ஆமென்.

பிசாசு நாகரீகங்களிலிருந்து வெளியேறி யிருக்கலாம், ஆனால் அவன் இன்னும் வியாபாரத்தை விட்டு வெளியேறவில்லை. அவன் இன்னும் வியாபாரத்தில்தான் இருக்கிறான். அதை நாம் பிரசங்கிகளுக்காக

வைத்துக்கொள்வோம். நான் தெய்வீகச் சுகத்தைப் பிரசங்கிக்கவே இங்கு வந்தேன். சரி.

ஆனால் அது உங்களுக்கு நல்லது. ஆமென். அது உங்களை நேர்படுத்தும். இது காலை உணவுக்குப் பழைய பாணியிலான சோள ரொட்டி, மற்றும் தட்டைப் பயிறு, மற்றும் கடுமையான காபி போன்றது, ஆனால் அவை ஒரு நல்ல நாள் வேலைக்கு உங்கள் விலா எலும்புகளில் ஒட்டிக்கொள்ளும் (உடலுக்குத் தெம்பு கொடுக்கும்). நிச்சயமாகக் கொடுக்கும். சரி.

கவனியுங்கள், ஆம் ஐயா. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்நாளில், இந்த நேரத்தில், சபை முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்க வேண்டும், அதற்குப் பதிலாக, அது பின்னோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. அது உண்மை. உங்களால் போக முடியவில்லை என்றால்... நீங்கள் முன்னோக்கிச் செல்லவில்லை என்றால், நீங்கள் பின்னோக்கிச் செல்கிறீர்கள். தேவன் தமது சபை பின்னோக்கிச் செல்வதையோ அல்லது சும்மா இருப்பதையோ விரும்புவதில்லை; நாம் முன்னோக்கிச் செல்ல

வேண்டும் என்று அவர் விரும்புகிறார், சிறிதும் தணிக்கக் கூடாது. பரிசுத்த ஆவியானவர், "அங்கே தணியுங்கள், சில வருடங்கள் காத்திருங்கள்" என்று சொல்லவில்லை.

"எல்லா நேரமும் தொடர்ந்து முன்னோக்கிச் செல்லுங்கள். முன்னேறுங்கள்" என்று அவர் சொன்னார்.

அவள் எங்கே போய்க்கொண்டிருந்தாள்? தேவ மனிதரிடம், எல்லா நேரமும் மலையின் மேல் ஏறிக்கொண்டிருந்தாள்.

நான் ஒரு சிறிய பாடலைப் பாடுவது வழக்கம்:

*மலையின் மேல் என்னை உயர நடத்தும்,*

*உம்மோடு ஐக்கியத்தை எனக்குத் தாரும்.* (அந்தப் பழைய பாடல் உங்களுக்கு நினைவிருக்கிறதா?)

*அது ஊற்றுக்கும் என்னைச் சுத்திகரிக்கும் இரத்தத்திற்கும், எங்களுக்கு வெளிச்சம் தரும்.*

25 மலையின் பக்கமாக மேலே செல்லும்போது, அவள் அந்த வேலைக் காரனிடம், "அந்தக் கோவேறுக்கழுதை மூச்சு விடுவதற்குக் கூட நீ அனுமதிக்காதே. போய்க் கொண்டே இரு" என்று சொன்னாள். அப்படித் தான் அதைச் செய்ய வேண்டும். அதைச் சபையின் மேல் வையுங்கள்; நாம் தொடர்ந்து முன்னேறுவோம். பிரச்சனை என்னவென்றால், நீங்கள் சபையைப் பாரத்தால் ஏற்றுகிறீர்கள்.

நான் சிறிது காலத்திற்கு முன்பு ஒரு வயதான கருப்பினச் சகோதரர், ஞானிகள் இயேசுவைப் பார்க்க வருவது குறித்துப் பிரசங்கிப்பதைக் கேட்டேன். அவர் ஒரு நல்ல விளக்கத்தைக் கொடுத்தார். அவர் சொன்னார்... "அந்தப் பழைய ஒட்டகங்களின் மேல் சுமைகளை ஏற்றச் சென்றார்கள், உங்களுக்குத் தெரியும்," மேலும், "உங்களுக்குத் தெரியுமா," அவர் சொன்னார், "அவைகளில் இரண்டு புறப்பட்டன". மேலும், "பிறகு இந்த ஒரு நபர் ஒட்டகத்தின் மேல் மூட்டைகளை ஏற்றத் தொடங்கினார், அந்தப் பழைய ஒட்டகத்தால் நகர முடியாத அளவுக்கு அவர் அதைச் சுமையால் ஏற்றினார்" என்று சொன்னார்.

சபைக்கும் ஏறக்குறைய அப்படித்தான் நடந்திருக்கிறது. நாம் அனைத்து வகையான சிறிய சங்கங்களையும், இது, அது, மற்றும் மற்ற அனைத்து வகையான சிறிய கேளிக்கைகள் மற்றும் அதுபோன்றவைகளையும் உள்ளே கொண்டு வருகிறோம், மேலும் ஜெபக் கூட்டத்தின் உண்மையான மதிப்பை வெட்டி எறிந்துவிட்டோம். மேல்வீட்டு அறை ஒரு விருந்து அறையாக (supper room) மாறியது. அது உண்மை. அது உங்களுக்கு நல்லது.

அவர்கள் ஒரு பழைய கடினமான சேவலைப் பிடித்து, அதை வேகவைத்து, போதகருக்குப் பணம் கொடுப்பதற்காக ஒரு தட்டு ஒரு டாலர் என்று விற்கலாம். நீங்கள் தேவனுடைய திட்டத்தை ஏற்றுக்கொண்டு, எல்லோரும் தசமபாகம் செலுத்தி, கர்த்தர் உங்களுக்குச் சொன்னதைச் செய்தால், நீங்கள் மிகவும் சிறப்பாக இருப்பீர்கள், மேலும் அந்த அறையை இரவு நேரத்தில் ஜெப அறையாக மாற்றலாம். ஆமென்.

26 ஓ, என்னே, நாம் முன்னோக்கிச் செல்வோம். நாம் சபைக்கு நீதிமானாக்கப்

படுதலை (justification) மட்டும் பிரசங்கித்திருந்தால், இப்பொழுது அவர்களை அதற்கும் மேலே கொண்டு செல்வோம். இன்னும் கொஞ்சம் மேலே செல்லுங்கள். நாம் அதற்குள் நுழைந்தால், தேவன் பரிசுத்த ஆவியினால் நிரப்பத் தொடங்குகிறார், பின்னர் நாம் தெய்வீகச் சுகத்திற்குச் சென்று அதைத் தேடுவோம்.

பரிசுத்த ஆவி ஒரு மிகப்பெரிய டிபார்ட்மென்ட் ஸ்டோர் (apartment store - விற்பனை நிலையம்) போன்றது. கிறிஸ்தவர்களாக மாறிய மக்களுக்குத் தங்களிடம் என்ன இருக்கிறது என்று தெரிவதில்லை.

முதலில் முழுவதையும் பார்க்காமல் நான் ஒரு வீட்டை வாங்குவதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? யாரோ எனக்கு ஒரு பெரிய ஆர்கேட் (Arcade - கடைவீதி) போன்ற இடத்தைக் கொடுத்தது போல, எல்லாம் எங்கும் இருக்கும் ஒரு பெரிய இடத்தை நான் சொந்தமாக வைத்திருப்பதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? அது எல்லாம் என்னுடையது. நீங்கள் கிறிஸ்துவிடம்

வரும்போது அப்படித்தான் இருக்கிறது, எல்லாம் உங்களுக்கு உரியது. கிறிஸ்து எதற்காக மரித்தாரோ அந்த மீட்பின் ஆசீர்வாதங்கள் அனைத்தும் உங்களுடையது. ஒவ்வொரு விசுவாசியும் ஒவ்வொரு மீட்பின் ஆசீர்வாதத்தையும் உடைமையாக்கிக் கொண்டிருக்கிறார்கள் (ஆமென்), அது விசுவாசிக்குக் கொடுக்கப் பட்டுள்ளது.

ஒரே ஆவியினாலே நாம் அனைவரும் கிறிஸ்து இயேசு என்னும் இந்தப் பெரிய ஆர்கேட்டிற்குள் (Arcade) ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம். என்னே, இங்கே இந்த அலமாரியின் மேல், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்; இங்கே இரத்தத்தின் மூலம் பரிசுத்தமாக்கப்படுதல் (sanctification). இங்கே மேலே மகிழ்ச்சி; இங்கே சமாதானம்; அங்கே நீடியபொறுமை, நற்குணம், சாந்தம் இருக்கிறது. ஏன், என்மே, எல்லாம் இருக்கிறது. அவற்றில் சில கொஞ்சம் உயரத்தில் தொங்கிக் கொண்டிருக்கலாம், என்னால் அவற்றை அடைய முடியவில்லை, ஆனால் அவர்கள் மூலையில் ஒரு ஏணியை (step ladder) வைத்திருக்கிறார்கள். மேலே ஏறுவோம்,

அதைப் பார்ப்போம், அது எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். உங்களால் தெய்வீகச் சுகத்தை எட்டிப்பிடிக்க முடியாவிட்டால், தேவனுடைய ஏணியை எடுத்துக்கொள்ளுங்கள். மேலே எட்டி அது எதைப் பற்றியது என்பதைக் கண்டறியுங்கள்; அது அனைத்தும் உங்களுக்குச் சொந்தமானது. சரி. சபை அப்படித்தான் இருக்க வேண்டும், சாலையில் முன்னேறிச் செல்ல வேண்டும்.

27 எனவே அந்தப் பெண், "இப்போது, நீ முன்னோக்கிச் செல். நீ கொஞ்சம் கூடத் தணிக்காதே, ஏனென்றால் நாம் இப்போது மேலே செல்ல வேண்டும்; நாம் அவசரப்பட வேண்டும்" என்று சொன்னாள்.

தேவனுடைய ஊழியர் மலைகளுக்குப் பின்னால் எங்கிருந்தாலும், தனது சிறிய குகை அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் வெளியே பார்த்தார், அந்தச் சூனேமியாள் வருவதைக் கண்டார்.

அவர், "கேயாசி," "இதோ அந்தச் சூனேமியாள் வருகிறாள்; என்ன விஷயம் என்று

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது" என்றார். இப்போது, தேவன் தனது தீர்க்கதரிசிகளிடம் எல்லாவற்றையும் சொல்வதில்லை. அவர் எதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறாரோ அதை மட்டுமே அவர்களிடம் சொல்கிறார். அவர்கள் எதை... அவர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டாம் என்று விரும்பு கிறாரோ, அதை அவர் தமக்குள்ளேயே வைத்துக் கொள்கிறார்.

ஆனால் இதோ இந்தச் சூனேமியாள் வருகிறாள், இந்தச் சிறிய வேலைக்காரன் கோவேறுக்கழுதையை அவசரமாக அடித்து விரட்டிக்கொண்டு வருகிறான். "அவளளவு அவசரம் எதற்காக என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது" என்றார்.

"போய் அவளைச் சந்தி," என்று சொன்னார். "அவளுடன் எல்லாம் நலமா, அவள் கணவருடன் எல்லாம் நலமா, குழந்தையுடன் எல்லாம் நலமா என்று அவளிடம் கேள்" என்றார்.

எனவே அவன் சத்தமிட்டு, "உன்னுடன் எல்லாம் நலமா? உன் கணவருடன் எல்லாம் நலமா? குழந்தையுடன் எல்லாம் நலமா?" என்றான்.

கவனியுங்கள். இந்தப் பாடத்தில் எனக்குப் பிடித்தது இதுதான். அவள், "எல்லாம் நலம்" என்றாள். ஆமென். அந்தக் குழந்தை ஒரு சடலம், ஆனால் "எல்லாம் நலம்". அது என்ன? எல்லாம் அப்போது பரிசீலனையில் இருந்தது. அவள் சூழ்நிலையைக் கட்டுக்குள் வைத்திருந்தாள். அவள் இருதயத்தில் சொல்லிக் கொண்டிருந்த அவளுடைய இருதயத்தின் விருப்பம், அந்தத் தீர்க்கதரிசியிடம் செல்ல வேண்டும் என்பதே. அங்கே அவள் தீர்க்கதரிசியின் முன்னிலையிலேயே இருந்தாள். எனவே தேவன் அவள் குழந்தையை எடுத்துக்கொண்டார் என்றால், அது அவருடைய சித்தம், எல்லாம் சரியாக இருக்கும். "எல்லாம் நலம். என் கணவருடன் எல்லாம் நலம். என்னுடன் எல்லாம் நலம். குழந்தையுடனும் எல்லாம் நலம்".

28 அவள் எலிசாவிடம் ஓடிவந்து, அவன் காலில் விழுந்தாள், ஒருவேளை அவன் கைகளை முத்தமிடத் தொடங்கினாள் அல்லது அதுபோல ஏதோ செய்தாள். கேயாசி நினைத்தான், "அவள் என் எஜமானரிடம் அப்படி நடந்துகொள்வது சரியல்ல". அதனால் அவன் அவளைப் பிடித்து இழுத்தான். அவளை அவரிடமிருந்து தள்ளிவிட்டான். "இங்கே பார், நீ அப்படிச் செய்யக்கூடாது. நீ என் எஜமானரிடம் அப்படி வரக்கூடாது".

எலிசா, "அவளை விடு. ஏனென்றால் அவள் இருதயத்தில் துக்கம் இருக்கிறது, தேவன் அதை எனக்கு மறைத்துவிட்டார். அவளுக்கு என்ன நேர்ந்தது என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் அவள் இருதயத்தில் துக்கம் இருக்கிறது" என்றார்.

அப்பொழுது அவள் எழுந்தாள். என்ன நடந்தது என்பதை அவள் அவருக்கு வெளிப்படுத்தத் தொடங்கினாள், என்ன சம்பவித்தது என்று சொல்லி, தன் குழந்தை இறந்துவிட்டது என்று கூறினாள். "என்னிடம் பொய் சொல்லாதீர்கள் என்று நான் உங்களிடம்

சொல்லவில்லையா? இப்போது, என் குழந்தை இறந்துவிட்டது. நான் அவனை உங்கள் அறையில் வைத்திருக்கிறேன். அண்டை வீட்டார்கள் அனைவரும் கூடிவிட்டார்கள். அவர்கள் அவன் உடலைச் சுகந்தவர்க்கமிட்டு அடக்கம் செய்ய ஆயத்தம் பண்ணுகிறார்கள். நான் உங்களிடம் வந்திருக்கிறேன்" என்றாள்.

இப்போது, கவனியுங்கள். எலிசா, "கேயாசி, இந்தத் தடியை எடுத்துக்கொள், நீ முன்னோக்கிச் செல், யாராவது உன்னிடம் பேசினால், நீ அவர்களிடம் பேசக்கூடச் செய்யாதே. இதை நேராகக் குழந்தையிடம் கொண்டுபோய், குழந்தையின் மேல் வை. அல்லது யாராவது உன்னிடம் பேசினால், பதில் பேசாதே. எந்தச் சமூக வைபவத்திற்கும் (social affair) நிற்காதே" என்று சொன்னார்.

29 அதுதான் இன்று நம்மிடம் உள்ள பிரச்சனை. நாம் தேவனிடமிருந்து ஒரு செய்தியைப் பெறும்போது, நேராகச் சென்று தேவன் நமக்குச் சொல்வதைச் செய்வதற்குப் பதிலாக, ஒரு சிறிய சமூக வைபவத்திற்காக நிற்கிறோம்: இதைச் செய்ய வேண்டும், சில

ஐஸ்கிரீம் விருந்துகள், மற்றும் இது போன்ற மற்ற எல்லா வகையான காரியங்கள், சமூக வைபவங்களைச் சபைக்குக் கொண்டு வருகிறோம். பாவத்திலும் அக்கிரமத்திலும் மரித்திருக்கிற மரித்தவர்களுக்கு நாம் தேவனுடைய செய்தியைக் கொண்டு செல்ல வேண்டும். ஆமென்.

கவனியுங்கள். இப்போது, எலிசா, அவர் ஏன் அந்தத் தடியை அனுப்பினார்? நீங்கள் எப்போதாவது நின்று சிந்தித்ததுண்டா? ஏனென்றால் எலிசா தான் அணிந்திருந்த ஆடைகள் ஆசீர்வதிக்கப்பட்டவை என்பதை அறிந்திருந்தார்; தேவன் தன் இருதயத்தில் வாசம் பண்ணுகிறார் என்று அவர் அறிந்திருந்தார். தான் அணிந்திருந்த ஆடைகள் ஆசீர்வதிக்கப்பட்டவை என்பதை அவர் அறிந்திருந்தார்; அவர் தொட்ட அனைத்தும் ஆசீர்வதிக்கப்பட்டது என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் தன்னை அறிந்திருந்தார், அதனால் அவருடைய விசுவாசம் அதில் இருந்தது. எனவே அவர்...?... தடியை. பவுல் தன் சரீரத்திலிருந்து கைக்குட்டைகளையும் கச்சைகளையும் எடுத்து நோயாளிகளுக்கும்

பாதிக்கப்பட்டவர்களுக்கும் கொடுத்ததை அவர் அங்கிருந்துதான் பெற்றார் என்று நான் நினைக்கிறேன்.

எனவே அவர்... ஆனால் அந்தச் சூனேமியாள்... இப்போது, அது நன்றாக வேலை செய்திருக்கும்; சூனேமியாள் அதை நம்பியிருந்தால், அது நன்றாக இருந்திருக்கும். ஆனால் அந்தக் கோலில் (staff) தேவன் இருந்தாரா இல்லையா என்று அவளுக்குத் தெரியாது, அந்த மனிதருக்குள் தேவன் இருக்கிறார் என்று அவளுக்குத் தெரியும். எனவே அவள், "கர்த்தருடைய ஜீவன்மேலும் உம்முடைய ஆத்துமாவின் ஜீவன்மேலும் ஆணையிடுகிறேன், நான் உம்மை விட்டுப் போவதில்லை; நான் இப்போது உம்முடைய கைகளில் இருக்கிறேன். நான் கண்டுபிடிக்கும் வரை இங்கேயே இருக்கப் போகிறேன்" என்றாள். உங்களுக்குத் தெரியும், எனக்கு அது பிடித்திருக்கிறது, அந்தத் தீர்மானம், அதிலேயே நிலைத்திருங்கள்.

அதுதான் இன்று மக்களிடம் உள்ள பிரச்சனை, தேவன் ஒரு சுகமளிப்பவர் என்று

அவர்கள் வாசிக்கிறார்கள், அவர்கள் சுற்று முற்றும் பார்த்து, "சரி, திருமதி ஜோன்ஸ் அதைப் பெறவில்லையே" என்று சொல்கிறார்கள். நீங்கள்... பின்னர் நீங்கள் விட்டு விடுகிறீர்கள். சகோதரரே, அதிலேயே உறுதியாக நில்லுங்கள். ஆமென்.

தேவன் அப்படிச் சொன்னால், தேவன் தனது வார்த்தையைக் காத்துக்கொள்ள வேண்டும், உங்களுடையது அல்ல, தேவனுடைய வார்த்தை. அதிலேயே உறுதியாக நில்லுங்கள்.

"நான் உம்மை விட்டுப் போவதில்லை" என்று அவள் சொன்னாள்.

30 எனவே எலிசா தன் அரையைக் கட்டிக்கொண்டு, என்ன செய்வது என்று தெரியாமல், தரிசனம் இல்லாமல் புறப்பட்டார். அவர்கள் சென்றார்கள். கேயாசி அவர்களை முந்திக்கொண்டு போனான். அவன் முன்னால் சென்று, அறைக்குள் நுழைந்து, குழந்தையின் மேல் தடியை வைத்து, காத்திருந்தான். ஜீவன் வரவில்லை. குழந்தை இன்னும் மரித்தே

இருந்தது. அவன் திரும்பிச் சிறிது நேரம் பார்க்கிறான், குழந்தை இன்னும் மரித்தே இருந்தது. எனவே அவன் தடியை எடுத்துக்கொண்டு, ஓடித் திரும்பி வருகிறான், அவன் எலிசாவையும், சூனேமியாளையும் சந்திக்கிறான்.

அவன் சந்தித்தபோது, அவன், "நான் குழந்தையின் மேல் தடியை வைத்தேன், அங்கே ஜீவனில்லை, சுவாசமில்லை; அவன் தன் கண்களைத் திறக்கவில்லை; அவன் இன்னும் மரித்தே இருக்கிறான்" என்றான்.

பார்த்தீர்களா, அந்தப் பெண்ணின் விசுவாசம் தடியின் மேல் இல்லை; அது தீர்க்கதரிசியின் மேல் இருந்தது.

இப்போது, உங்கள் விசுவாசம் எங்கே இருக்கிறது என்பதைப் பொறுத்தது அது. சிலர், "நீங்கள் என்மேல் கைகளை வைக்க வேண்டும்" என்று சொன்னார்கள்.

மற்றொருவர், அந்த ரோம மனிதன் (நூற்றுக்கு அதிபதி), "ஒரு வார்த்தை மட்டும்

சொல்லும், என் வேலைக்காரன் பிழைப்பான்" என்று சொன்னான்.

இருந்தும், அந்த ஒரு பெண் அவர் தன்மேல் கைகளை வைப்பதை விரும்பவில்லை; அவள் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். சில இரவுகளுக்கு முன்பு பாடத்திலிருந்த சிறிய யவீரு (Jairus), "வந்து என் மகள் மேல் உம்முடைய கைகளை வையும்" என்று சொன்னான். உங்கள் விசுவாசம் எங்கே இருக்கிறது என்பதைப் பொறுத்தது அது.

எனவே எலிசா செய்தது சரிதான்.

31 இப்போது, அவர் சோதித்துப் பார்க்கிறார் (probing) என்று நான் நம்புகிறேன். ஆனால் அவர் எதைத் தொட்டாலும் தேவன் அதை ஆசீர்வதித்தார் என்பதை அவர் அறிந்திருந்தார். உங்களுக்குப் புரிகிறதா? தேவன் அதை ஆசீர்வதித்தார் என்று அவர் நம்பினார். எனவே அவர், "தேவன் இதை ஆசீர்வதித்திருக்கிறார். நீங்கள் இதைச் சடலத்தின் மேல் வைத்தால், தேவன் அதைச் சுகமாக்குவார் என்று நான் நம்புகிறேன்" என்று சொன்னார்.

இப்போது, அவருடைய விசுவாசம் என்னவாக இருந்தாலும் பரவாயில்லை, அந்தப் பெண்ணின் விசுவாசம் அதேபோல் இல்லாவிட்டால், அது வேலை செய்யாது. நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா? உங்கள் விசுவாசமும் உங்கள் போதகரின் விசுவாசமும் ஒன்றுசேர வேண்டும். நீங்களும் அதே விசுவாசத்தைப் பெற்றிருக்க வேண்டும். தேவ மனிதர் உங்களுக்குச் சொன்ன அதே காரியத்தை நீங்கள் நம்பினால், ஏதோ ஒன்று நடந்தே தீரும். எனவே தேவ மனிதர் தான் அங்கே செல்ல வேண்டியதில்லை என்று நம்பினார்; அவர் தடியை மட்டும் அனுப்புவார். ஆனால் அந்தப் பெண், "இல்லை, இல்லை, இல்லை. நான் உன்னுடனே இருக்கப் போகிறேன். நான் கண்டுபிடிக்கும் வரை இங்கேயே இருக்கப் போகிறேன்" என்றாள்.

அப்பொழுது கேயாசி, "குழந்தைக்குச் சுவாசமில்லை. அவன் இன்னும் மரித்தே இருக்கிறான்" என்றான்.

எனவே அவர்கள் சென்றார்கள், முற்றத்திற்குள் வந்தார்கள், இப்போது அந்தக்

கூட்டத்தைப் பாருங்கள், எல்லோரும் சுற்றிலும், ஒரு புலம்பலும் கூக்குரலும். விசுவாசத்திற்கு எப்பேர்ப்பட்ட இடம். எலிசா அங்கே நின்று கொண்டிருந்தார், தரிசனம் இல்லை, என்ன செய்வது என்று தெரியவில்லை, அவரால் முடிந்ததெல்லாம் சுற்றுமுற்றும் பார்ப்பது மட்டுமே. அங்கே தந்தை அழுது கொண்டிருந்தார், அங்கே அண்டை வீட்டார்கள் அனைவரும், எல்லோரும் அழுது கொண்டிருந்தார்கள். அவர் தனது சிறிய பழைய அறைக்குச் செல்கிறார், அந்தப் பெண் குழந்தையைப் படுக்கையில் கிடத்தியிருந்தாள், எனவே அவர் அறையை விட்டு எல்லோரையும் வெளியேற்றி, கதவை மூடினார், அவர் மட்டும் தனியாக இருந்தார். ஒரு மூலையில் சென்று, முழங்காலில் நின்று, ஜெபிக்கத் தொடங்கினார். அவர் ஜெபித்து முடித்ததும், எழுந்து, தரையில் குறுக்கும் நெடுக்குமாக, முன்னும் பின்னும், இங்கும் அங்கும், தேவனுடைய ஆவி அவர்மேல் வரும்வரை நடந்தார். தேவனுடைய ஆவி அவர்மேல் வந்தபோது, சந்தேகத்திற்கு இடமின்றி அவர் ஒரு தரிசனத்தைக் கண்டார், சென்று, குழந்தையின் மேல் தன்னை

வைத்துக்கொண்டு, தன் வாயின்மேல் அவன் வாயையும், தன் கண்களின்மேல் அவன் கண்களையும், தன் உள்ளங்கைகளின்மேல் அவன் உள்ளங்கைகளையும் வைத்துப் படுத்தார், ஜெபம் இல்லை; மூக்குக்கு நேராக மூக்கு, உதடுகளுக்கு நேராக உதடுகள், கண்களுக்கு நேராக கண்கள், கைகளுக்கு நேராகக் கைகள், குழந்தை ஏழு முறை தும்மிப் பிழைத்தது.

அது என்ன? அது அந்தப் பிரசங்கி அல்ல. அந்தக் குழந்தையை மீண்டும் உயிருக்குக் கொண்டு வந்தது அவருடைய தீர்க்கதரிசிக்குள் இருந்த கிறிஸ்துவே. அல்லேலூயா.

ஓ, என்னே, அவர் வெளியே நின்று, "கேயாசி, அந்தச் சூனேமியாளைக் கூப்பிடு" என்று சொன்னபோது. ஆமென்.

அந்தப் பெண் வாசலுக்கு வந்தாள். எலிசாவுக்காக அங்கே அந்தப் படுக்கையைச் செய்தபோது அவள் செய்த எல்லா நற்செயல்களும், தன் சொந்தக் கைகளால் அவருக்குப் படுக்கையை விரித்ததும், ஒரு நாள் அவளுடைய மரித்த குழந்தை அங்கே

கிடக்கப்போகிறது என்றும், கிறிஸ்துவின் மூலமாக அந்தத் தீர்க்கதரிசியின் சரீரம் அந்தக் குழந்தையை மீண்டும் உயிருக்குக் கொண்டு வரும் என்றும் அவளுக்குச் சிறிதும் தெரிந்திருக் கவில்லை. ஒருவருக்கொருவர் ஏதாவது செய்ய முயற்சிக்கும்போது, ஒருவருக்கொருவர் உதவ முயற்சிக்கும்போது என்ன நடக்கிறது என்று உங்களுக்குத் தெரியாது. அது உண்மை. தண்ணீரின் மேல் போடும் அப்பத்தைப் போல (Like bread upon the water), அது ஒரு நாள் உங்களிடம் திரும்பும்.

32 எலிசாவை நோக்கிய அவளுடைய மனப்பான்மை அவளுக்கு வெற்றியைத் தந்தது. அவள் எலிசாவிடம் சென்று, "இப்போது, இங்கே பாரும் நீ ஒரு மாய்மாலக்காரன். என் போதகர் சொன்னதுதான் சரி" என்று சொல்லியிருந்தால்... கவனியுங்கள், அவள் அத்தகைய மனப்பான்மையுடன் சென்றிருந்தால், அவள் அவரிடமிருந்து எதையும் பெற்றிருக்க மாட்டாள். ஆனால் தேவ மனிதரை நோக்கிய அவளுடைய மனப்பான்மை, அவள் எதைப் பெற்றாளோ அதைத் துல்லியமாகக் கொடுத்தது, அவளுடைய வெற்றி, ஏனென்றால் அவள்

விசுவாசித்தாள். நீங்கள் செய்ய வேண்டிய ஒரே வழி அதுதான். இயேசு கிறிஸ்து, ஏதோ ஒரு புராணக் கதை, குழந்தைகளுக்குச் சொல்லும் ஏதோ சாண்டா கிளாஸ் (Santa Claus) விஷயம், அல்லது அது போன்ற ஒன்று என்று நீங்கள் நம்பினால், நீங்கள் ஒருபோதும் எதையும் பெற மாட்டீர்கள், அவர் தேவனுடைய குமாரன், மரித்து, உயிர்த்தெழுந்து, உன்னதத்திற்கு ஏறி, இன்றிரவு இங்கே நம்முடன் வசிக்கிறார், மேலும் அவர் தனது வேதாகமத்தில் செய்வதாக வாக்குத்தத்தம் செய்த எதையும் செய்வார் என்று உங்கள் இருதயத்தில் உண்மையாக நம்பும் வரை நீங்கள் எதையும் பெற மாட்டீர்கள். நீங்கள் அப்படி இருக்கும்போது, ஏதோ ஒன்று நடக்கப் போகிறது.

அப்போது அவள் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, அவருக்கு முன்பாகத் தலைவணங்கி, அவரைத் தேவனுடைய ஊழியராக அங்கீகரித்து, தலைவணங்கி, வெளியே சென்றாள், அன்பு நிறைந்த இருதயத்துடன் வெளியே சென்றாள். அந்தப் பெரிய இக்கட்டான நேரத்தில்... அவள் சும்மா உட்கார்ந்து, "சரி, நம்பிக்கை எல்லாம் போய்விட்டது. மருத்துவர் இப்போதுதான்

போய்விட்டார், எதுவும் செய்ய முடியாது என்று சொன்னார். இப்போது என் குழந்தை இறந்து விட்டது, எனவே அவ்வளவுதான் செய்ய முடியும் என்று நினைக்கிறேன்" என்று சொல்லியிருந்தால் என்ன நடந்திருக்கும்? "உதவியற்ற நிலையில் உட்காருங்கள்" என்று சொல்லியிருந்தால். அந்தக் கதை ஒருபோதும் சொல்லப்பட்டிருக்காது. அவள் இருதயத்தில் விசுவாசம் வராமல் இருந்திருந்தால், அது அப்படித்தான் இருந்திருக்கும். ஆனால் தேவன் தனது இரக்கத்தினால் அந்தத் தாயின் இருதயத்தில் எதையோ வைத்தார், அதனால் ஏதோ ஒன்றைச் செய்ய முடியும் என்று அவள் அறிந்திருந்தாள்.

இன்றிரவு உங்கள் குடும்பத்தில் நீங்கள் அப்படி இருக்கலாம். ஒருவேளை நீங்கள் எப்போதாவது கொண்டிருந்த ஒவ்வொரு நம்பிக்கையும், நீங்கள் சுகமாவதற்குக் கொண்டிருந்த நம்பிக்கையும், மருத்துவர்கள் உங்களைச் சோர்வடையச் செய்கிறார்கள்.

அந்த மனிதர் (மருத்துவர்) தன்னால் முடிந்த அனைத்தையும் செய்துவிட்டார், "இது மருத்துவ

அறிவியலைக் கடந்துவிட்டது. எதுவும் செய்ய முடியாது" என்று சொன்னார். ஆனால் "ஆம் முடியும். ஆம் முடியும்" என்று உங்களுக்குச் சொல்லும் ஏதோ ஒன்று இந்த இருதயத்தில் ஆழமாகத் தோன்றினால்... அதிலேயே உறுதியாக நில்லுங்கள்.

33 பால் ரேடர் (Paul Rader), என்னுடைய நண்பர், பாப்டிஸ்ட் பிரசங்கியார், சில வருடங்களுக்கு முன்பு இங்கே கலிபோர் னியாவில் இறந்தார். ஒரு அற்புதமான மனிதர், மிஷனரி, சுகமளிப்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர், ஒருமுறை ஒரு சிறிய கதையைச் சொன்னார், அவரும் அவரது மனைவியும் ஒரு மிஷனரி பயணத்தில் தென் அமெரிக்காவில் எங்கேயோ வெகு தொலைவில் கீழே இருந்தார்கள். அவருக்கு ஏதோ ஒரு வகையான காய்ச்சல், மஞ்சள் காய்ச்சல் (yellow fever) ஏற்பட்டது. நான் நினைக்கிறேன், அது பிளாக் வாட்டர் காய்ச்சல் (black water fever). அது சில மணிநேரங்களில் உங்களைக் கொன்றுவிடும். அவர் வெகு தொலைவில், காடுகளுக்குள் மைல் கணக்கில் பின்னால் பூர்வீக மக்களுடன் இருந்தார், அங்கே ஒரு சிறிய படகில் சென்றார்.

அன்று இரவு உணவிற்குப் பிறகு, அவர்கள் சாப்பிட்டார்கள், அவர் தன் அறைக்குச் சென்றார் என்று சொன்னார்.

அவர் மேலும் மேலும் சுகவீனமடைந்தார். அவர் தனது அன்பு மனைவியிடம், "அன்பே, நீ இங்கே மண்டியிட்டு எனக்காக ஜெபிக்கத் தொடங்கினால்," "நான் அதை நம்புகிறேன்; எனக்கு... அறையில் இருட்டாகி வருவது போல் தோன்றுகிறது" என்றார்.

அதனால் அவள் மண்டியிட்டு, தன் கைகளை உயர்த்தி, "அன்பே, நான் மருத்துவரை அழைக்கச் செல்லட்டுமா?" என்று கேட்டாள்.

அதற்கு அவர், "இல்லை, மருத்துவரை அழைக்கப் போகாதே; அது வெகு நேரமாகும்" என்றார். "சொல்வது கடினம், இதுபோல இரவு வருவதால், இப்போது உன்னால் மருத்துவரை அழைத்து வர முடியாது" என்று அவர் சொன்னார். அவர், "எனக்காக ஜெபம் செய், அன்பே, உன் கைகளை என்மேல் வை" என்றார். அவரது உயிர் மெல்ல மறையத் தொடங்கியபோது அறையில் இருள் சூழ்ந்து

கொண்டே இருந்தது, சிறிது நேரத்திற்குப் பிறகு அது முழுவதும் இருளடைந்தது.

அவர் மீண்டும் ஓரிகானில் (Oregon) இருப்பதைப் போலக் கனவு கண்டதாகச் சொன்னார். அதுதான் அவர் முன்பு மரங்களை வெட்டும் வேலையைச் செய்த அவருடைய ஊர். அவர் மிகவும் வலிமையான மனிதராக இருந்தார். அவர்... ஒருமுறை அவருடைய முதலாளி அவரிடம் சொன்னார். அவர் கனவு கண்டார், "பால், மலையின் மேல் சென்று, எனக்கு ஒரு குறிப்பிட்ட அளவிலான மரத்தை வெட்டி அதைத் கீழே கொண்டு வா" என்று சொன்னார்.

அவர், "சரி, ஐயா" என்றார்.

34 அவர் மலைச்சரிவில் ஓடினார், தான் சுய நினைவில்லாத நிலையில் கனவில் இருந்த போது, மீண்டும் இளமைப் பருவத்தின் துடிப்பைத் தன் கால்களில் உணர்ந்ததாகச் சொன்னார். அவர் அந்த மரத்தை மிகவும் எளிதாக வெட்டினார் என்று சொன்னார். கோடாரி மென்மையான ஓரிகான் ஃபிர் (Oregon

fir) மரத்தின் வழியே கீழே சென்றதை அவரால் உணர முடிந்தது என்று அவர் கூறினார். மரம் கீழே விழுந்தது; அவர் அதைச் சீர்படுத்தினார், கோடாரியை மரத்தில் மாட்டி, அதைத் தூக்க முயன்றார்.

ஓ, தன் பலம் தன்னை விட்டுப் போய் விட்டதாக அவர் சொன்னார். அதைத் தூக்கத் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ததாக அவர் கூறினார். "சரி, என் பலம் முற்றிலும் போய்விட்டது" என்றார். ஒருவேளை இன்றிரவு நீங்கள் அந்த நிலையில் இருக்கலாம், உங்கள் பலம் முற்றிலும் போய்விட்டது. நம்பிக்கைகள் போய்விட்டன, எல்லாம் போய்விட்டன. அவர் கடினமாக உழைத்ததாகச் சொன்னார். அவர், "சரி, என்னால் இதைத் தூக்க முடிந்திருக்க வேண்டும். நான் இதைத் தூக்க முடிந்திருக்க வேண்டும். ஏன், நான் இது போன்றவற்றை முன்பே தூக்கியிருக்கிறேன்" என்றார்.

ஒருவேளை நீங்கள் முன்பே சுகமடைந்தி ருக்கலாம், ஒருவேளை நீங்கள் ஜெப வரிசைகள் மூலம் சென்றிருக்கலாம், நீங்கள் சுகமடைந் திருக்கலாம், ஆனால் இம்முறை உங்களால்

அந்தச் சுமையை எப்படியாவது மேலே கொண்டு வரப் போதுமான விசுவாசத்தைத் திரட்ட முடியவில்லை.

அவர் தான் முற்றிலும் சோர்ந்து போய்விட்டதாகச் சொன்னார். எனவே அவர் கீழே உட்கார்ந்து, தலையைக் குனிந்து அழத் தொடங்கினார். "நான் மிகவும் பலவீனமாக இருக்கிறேன், என்னால் நகர முடியாது; என் பலத்தை இழந்துவிட்டேன், நான் என்ன செய்வேன் என்று எனக்குத் தெரியவில்லை" என்று அவர் சொன்னார்.

அவர் தனது முதலாளியின் குரலைக் கேட்டதாகச் சொன்னார் - அவருடைய முதலாளியின் குரல் மிகவும் மென்மையாகவும் கனிவாகவும் இருந்தது. அவர், "பால், என்ன விஷயம்?" என்று கேட்டதாகச் சொன்னார்.

அவர், "ஐயா, எனக்கு... எனக்கு... அதைத் தூக்கப் பலமில்லை. என்னால் அதை அங்கே கீழே கொண்டு செல்லவே முடியவில்லை" என்றார்.

அவர், "பால், நீ வீணாகச் செய்கிறாய்; நீ வீணாகப் போராடுகிறாய்" என்றார். மேலும் அவர், "பால், அங்கே கீழே ஓடும் அந்த ஓடையை நீ பார்க்கவில்லையா?" "அந்த ஓடை முகாமுக்கு அருகிலேயே ஓடுகிறது" என்றார். "நீ ஏன் அதைத் தண்ணீரில் தள்ளிவிட்டு, அதன் மேல் குதித்து சவாரி செய்து செல்லக்கூடாது?" என்றார்.

அவர் திரும்பிப் பார்த்தபோது, அவருடைய முதலாளி இயேசுவாக இருந்தார் என்று சொன்னார். "அதைத் தண்ணீரில் தூக்கி எறி, பால்; இனிமேல் நீ முயற்சி செய்யாதே. அதன் மேல் ஏறிக்கொண்டு சவாரி செய்" என்றார்.

35 அவர் அதைத் தண்ணீரில் தூக்கி எறிந்து, தண்ணீரில் குதித்து, தண்ணீரைத் தெறிக்கவிட்டு, நீரோட்டம் அதை நேராக முகாமுக்குக் கொண்டு சென்றது என்று சொன்னார். அவர், "நான் அதில் சவாரி செய்கிறேன்" என்று கத்திக்கொண்டு, தன் பலம் எல்லாம் தனக்கு வருவதாகத் தன் குரலின் உச்சத்தில் அலறத் தொடங்கினார். அவர் அந்த அறையில் சுயநினைவுக்கு வந்தபோது, தன் குரலின் உச்சத்தில் அலறிக் கொண்டிருந்தார்

என்று சொன்னார். அவர் மேல் கைகளை வைத்து ஜெபித்துக் கொண்டிருந்த அவருடைய மனைவி, அவர் சுயநினைவுக்கு வந்தபோது, "நான் அதில் சவாரி செய்கிறேன். நான் அதில் சவாரி செய்கிறேன். நான் அதில் சவாரி செய்கிறேன்" என்று கத்திக்கொண்டு அறையின் நடுவில் குதித்தார் என்று சொன்னாள்.

36 சகோதரரே, இன்றிரவு அதுதான் விஷயம். நான் இயேசு கிறிஸ்துவை அவருடைய வாக்குத்தத்தத்தில் பிடித்துக் கொண்டு, அந்த விஷயத்தைப் பரிசுத்த ஆவியின் தண்ணீருக்குள் தூக்கி எறிந்துவிட்டு, நான் அதில் சவாரி செய்வேன். அல்லேலூயா. என்ன நடந்தாலும் பரவாயில்லை, நான் அதில் சவாரி செய்கிறேன். சரி. தொடர்ந்து சவாரி செய்யுங்கள்.

எல்லோரும், வேறு யாராவது என்ன சொன்னாலும் பரவாயில்லை, நீங்கள் எத்தனை முறை முயற்சி செய்திருந்தாலும் பரவாயில்லை, அதைத் தள்ளிவிட்டு அதில் சவாரி செய்யத் தொடங்குங்கள். நீங்கள் இருக்க வேண்டிய இடத்திற்குத் தேவன் உங்களை நேராக

அழைத்துச் செல்வார். நீங்கள் அதை நம்புகிறீர்களா?

ஏன், ஏழு வருடங்களுக்கு முன்பு மேயோ சகோதரர்கள் (Mayo Brothers) என் முகத்தைப் பார்த்து, "ரெவரெண்ட் பிரான்ஹாம், உங்களுக்குப் பிழைக்க வாய்ப்பே இல்லை" என்று சொன்னார்கள். ஆனால் நான் அவரை அவருடைய வார்த்தையில் பிடித்துக் கொண்டேன். நான் அதில் சவாரி செய்கிறேன். ஆமென்.

37 என்றாவது ஒரு நாள் அவர் என்னை மறுபக்கத்தில் சேர்ப்பார் என்று வாக்குத்தத்தம் செய்தார். வயது கூடிக்கொண்டே போகிறது, ஆனால் நான் அதில் சவாரி செய்கிறேன். இந்நாட்களில் ஒரு நாள், நான் இந்த வாழ்க்கையிலிருந்து வெளியேறுவேன், ஆனால் இன்றிரவு நான் அதில் சவாரி செய்கிறேன். "புத்தகத்திலுள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும் என்னுடையது, ஒவ்வொரு அதிகாரமும், ஒவ்வொரு வசனமும் என்னுடையது. ஓ, என்மே, தேவன் வாக்குத்தத்தம் செய்தார், "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை

விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட் பட்டிருக்கிறான்". நான் அதில் சவாரி செய்கிறேன். நான் அதை நம்புகிறேன். கிறிஸ்து அப்படிச் சொன்னார். என்ன? "என் வார்த்தை களைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு (இப்போதே) நித்திய ஜீவன் உண்டு, அவன் ஒருபோதும் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படமாட்டான், ஆனால் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்".

நான் இருபத்து மூன்று ஆண்டுகளாக அதில் சவாரி செய்து கொண்டிருக்கிறேன். அல்லேலூயா. பயணம் இன்னும் இருக்கும், அது முடியும் போது, நான் இன்னும் அதில் சவாரி செய்து கொண்டிருப்பேன்.

38 நான் ஒரு காலத்தில் குருடனாய் இருந்தேன், பெரிய தடிமனான கண்ணாடிகளை அணிந்திருந்தேன், இதுபோல ஒரு கையால் தெருக்களில் வழிநடத்தப்பட்டேன், எனக்கு முன்னால் ஒரு சிறிய தூரத்திற்கு மேல் பார்க்க முடியாது. இன்றிரவு, தேவ கிருபையினால்,

என்னிடமிருந்து ஐந்து அடி தூரத்தில் உள்ள செய்தித்தாள் எழுத்துக்களை என்னால் படிக்க முடிகிறது. ஒரு வருடத்திற்கு முன்பு இங்கே கண் பரிசோதனை செய்தேன், அது பத்து-பத்து (ten-ten) ஆக இருந்தது. அது 20/20, பிறகு பதினைந்து-பதினைந்து, பிறகு பத்து-பத்து. அது என்ன? நான் தேவனை அவருடைய வாக்குத்தத்தத்தில் பிடித்துக்கொண்டேன், தேவன் என் பார்வையை எனக்கு அளிக்கும் வரை நான் அதில் சவாரி செய்தேன்.

இப்போது, என்னால் பாட முடியும்:

*அமேசிங் கிரேஸ்! (Amazing grace - ஆச்சரியமான கிருபை) அது எவ்வளவு இனிமையான தொனி,*

*என்னைப் போன்ற ஒரு பாவியை அது மீட்டது!*

*நான் ஒரு காலத்தில் காணாமல் போயிருந்தேன், இப்போது கண்டுபிடிக்கப்பட்டேன்,*

*நான் குருடனாயிருந்தேன், ஆனால் இப்போது காண்கிறேன்.*

*என் இருதயத்தைப் பயப்படக் கற்றுக்கொடுத்தது கிருபையே,*

*கிருபை என் பயங்களை நீக்கியது;*

*அந்தக் கிருபை எவ்வளவு விலையேறப்பெற்றதாகத் தோன்றியது*

*நான் முதலில் விசுவாசித்த அந்த நேரத்தில்.*

*அல்லேலூயா. ஓ, நான் அதை நினைக்கும்* போது... தேவனை அவருடைய வாக்குத் தத்தத்தில் பிடித்துக்கொண்டு முன்னோக்கிச் செல்லுங்கள், விசுவாசத்தில் முன்னோக்கிச் செல்லுங்கள். என்ன? எதில் விசுவாசம், தேவன் சொன்னது என் இருதயத்தில் நங்கூரமிடப் பட்டிருக்கிறது என்றும், அது என்னுடைய தனிப்பட்ட சொத்து என்றும் விசுவாசிப்பது, ஏனென்றால் இயேசு அதற்காக மரித்தார். நான் அதில் சவாரி செய்கிறேன். நான் அதை நம்புகிறேன்.

39 பாவி நண்பரே, இன்றிரவு உலகம் குழப்பத்தில் இருக்கும்போது, அணு மற்றும் கோபால்ட் குண்டுகள் எங்கும் தொங்கிக்

கொண்டிருக்கின்றன. ஒரு குண்டு... சற்று முன்பு நான் ஒரு கனிம ஆய்வாளரிடம் பேசிக் கொண்டிருந்தேன், ஒரு பவுண்டு யுரேனியத்தில் எவ்வளவு சக்தி இருக்கிறது என்றும், அந்த ஒரு பவுண்டு யுரேனியத்தின் அழுத்தத்தை உண்டாக்க எத்தனை பல்லாயிரக்கணக்கான டன் டிஎன்டி (TNT) தேவைப்படும் என்றும் அவர் என்னிடம் சொன்னார்.

மிஸ்டர் மூர் (Mr. Moore) சொல்வதை நான் கேட்டேன், அவருடைய ஜெட் சக்தி நண்பர்களில் ஒருவர் தன்னிடம் சொன்னதாகச் சொன்னார், அவர் தனது விமானத்தில் ஒரு குண்டை எடுத்துச் சென்றார், ஷ்ரீவ் போர்ட்டிலிருந்து (Shreveport) டெக்சாஸில் உள்ள ஹூஸ்டன் (Houston) வரை நிரப்பப்பட்ட எத்தனை நூறு பெட்டி வண்டிகள் (boxcars) முழுவதுமான டிஎன்டி என்று எனக்கு மறந்துவிட்டது. அல்லது டிஎன்டி ஏற்றப்பட்ட அது போன்ற பெட்டி வண்டிகளை அனுப்பினால், டிஎன்டி ஏற்றப்பட்ட அந்த நீண்ட வரிசைப் பெட்டி வண்டிகள் அனைத்தையும் விட, இந்தக் குண்டு அதிக அழுத்தத்தையும் சக்தியையும் கொண்டிருந்தது.

ஒரு பெரிய கோபால்ட் குண்டு (cobalt bomb), அணுகுண்டைச் சுற்றியுள்ள கோபால்ட், அங்கே காற்றில் ஒரு ஏவுகணையிலிருந்து நம் எதிரிகளால் சுடப்படலாம், ஒரு விசையினால் அங்கே; சில மணிநேரங்களில், முழு பூமியும் முற்றிலுமாக அழிக்கப்படும்.

காற்று வீசத் தொடங்கினால் போதும், அதைச் சுற்றி எந்த உயிரினமும் வாழ முடியாது, பூமியை முற்றிலுமாக அழித்துவிடும், சில நிமிட நேரத்திலேயே இதைச் செய்ய முடியும். நம்முடைய எதிரி, தேவபக்தியற்ற, இரக்கமற்ற, கொடூரமான, புத்தியில்லாத எதிரி, இன்றிரவு அந்தப் பொருளைத் தங்கள் கைகளில் வைத்திருக்கிறார்கள். குதிரைகளின் சரீரத்தில் நீங்கள் ஏன் நம்பிக்கை வைக்கிறீர்கள்? அணுசக்தியில் நீங்கள் ஏன் நம்பிக்கை வைக்கிறீர்கள்? இவ்வுலகத்தின் காரியங்களில், உங்கள் வீடுகளில், உங்கள் இடங்களில், உங்கள் பதவிகளில் நீங்கள் ஏன் நம்பிக்கை வைக்கிறீர்கள்? தேவனை அவருடைய வார்த்தையில் பிடித்துக்கொண்டு, அங்கே அணுக்களின் வழியாக, அங்கே மண்டலங் களுக்குள், பரலோகத்திற்குள் அதில் சவாரி

செய்யுங்கள். தேவன் எதை வாக்குத்தத்தம் செய்தாரோ, தேவன் அதைச் செய்வார். இன்றிரவு நீங்கள் அதை நம்புகிறீர்களா?

40 தேவன் இரக்கமாயிருப்பாராக, தேவனுடைய பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்வோம். தேவனுடைய பிரதிநிதிகள் யார்? அந்த நாளில், அது எலியாவாக இருந்தது. இன்று யார்? இயேசு கிறிஸ்து; அவரே அவருடைய பிரதிநிதி. பெண்ணே, மனிதனே, சிறுவனே, சிறுமியே, எல்லா சாத்தியமற்ற நிலைகளும் தீர்ந்துபோன போது, அந்தச் சூனேமியாள் தனது மரித்த மகனுக்காக விசுவாசிக்க முடிந்தால், எலிசாவுக்குள் தேவன் இருந்தார் என்று ஒரு சாதாரண மனிதரை அவள் விசுவாசிக்க முடிந்தால், உலகத்தைத் தமக்குள்ளாக ஒப்புரவாக்கிக்கொண்ட தேவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார் என்று உங்களால் எவ்வளவு அதிகமாக விசுவாசிக்க முடியும்? வாருங்கள், காலம் கடந்துபோவதற்கு முன்பே இன்றிரவு ஒப்புரவாகுங்கள். நாம் ஜெபிப்போம்.

41 எங்கள் பரலோக பிதாவே, நாங்கள் எங்களைச் சுற்றிலும் பார்த்து, நாங்கள் வாழ்கிற

நாள், நேரம், நடக்கும் இந்தப்பெரிய காரியங்கள், இன்று செய்தித்தாள்களில் சிதறிக் கிடப்பதைப் பார்க்கிறோம். இங்கே இந்த நகரத்தில் அந்த மருத்துவர், பொறாமை கொண்ட ஆவியினால் நான்கு சிறு குழந்தைகளைக் கொன்று, தன் சொந்த மனைவியைச் சுட்டுக் கொன்று, பின்னர் தற்கொலை செய்து கொண்டார். இங்கேயே இந்த நகரத்தில், பிசாசு அவனைப் பிடித்துக்கொண்டான். தேவனே, மக்கள் அது பிசாசு என்று நம்புவதில்லை. இன்றிரவு அவர்கள் தங்கள் கண்களைத் திறந்து பார்க்கட்டும்.

மேலும், பிதாவே, அவர்கள் அவரைக் கடந்து பார்த்து, அவர்களை இரட்சிக்கக் காத்திருக்கும் அன்பும் இரக்கமும் நிறைந்த ஒரு உயிருள்ள தேவன் இருப்பதைப் பார்க்கட்டும். அதை அருளும், ஆண்டவரே. இப்போது எங்களுக்கு அருகில் வாரும், பிதாவே. உம்முடைய நாமத்தில், நாங்கள் எதைக் கேட்கிறோமோ, அதைப் பெற்றுக்கொள்வோம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

இங்கே ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் இருக்கிறார்கள், ஒருவேளை, ஆண்டவரே, அவர்கள் ஒருபோதும் உம்மைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டதில்லை. தங்கள் ஆத்துமாவில் சமாதானம் என்றால் என்னவென்று அவர்களுக்குத் தெரியாது. பூமியின் இந்த பழைய காரியங்கள் அனைத்தும் கடந்து போகின்றன. ஆத்துமா, அழியாத பகுதி, அணுவின் ஒவ்வொரு மண்டலத்தையும் தாண்டி, காஸ்மிக் ஒளி (cosmic light), பெட்ரோலியம் (petroleum) ஆகியவற்றைத் தாண்டி, ஆவிக்குரிய மண்டலத்திற்குள் செல்கிறது. அதுதான் நித்தியமான பகுதி; அதுதான் அழியாத பகுதி, கர்த்தராகிய இயேசுவின்மேல் விசுவாசம் வைக்கும்போது. நீர் அதை எவ்வளவு எளிமையாக ஆக்கினீர்கள். சும்மா வாருங்கள், பெற்றுக் கொள்ளுங்கள். "கேளுங்கள், அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள்".

42 "என் வார்த்தைகளைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு, நித்திய ஜீவன் உண்டு". கேட்பதற்கு எளிமையாக இருக்கிறது. "பேதைகளும் திசைகெட்டுப் போவதில்லை" என்று நீர் சொன்னீர். எதுவும்

கட்டுப்படுத்துவதில்லை, எதுவும் சிக்கலானதல்ல, கிறிஸ்து இருதயத்துடன் பேசுவதால், அதை ஏற்றுக்கொள்வது, அதை விசுவாசிப்பது மட்டுமே. "என் பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" என்று நீர் சொன்னீர்.

பிதாவாகிய தேவனே, கர்த்தராகிய இயேசு சிந்தின இரத்தம், அவருடைய மேலான தியாகம் மற்றும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில், இன்றிரவு நீர் ஒவ்வொரு பாவியின் இருதயத்தையும், கட்டிடத்திலுள்ள பின்வாங்கிப் போன ஒவ்வொருவரையும் நீர் தட்டுவீராக. அவர்களை அன்போடு உம்மிடம் திருப்பிக் கொண்டு வாரும். இன்னொரு இரவு மட்டும், அதன் பிறகு நாங்கள் செல்ல வேண்டும். பிதாவே, இன்றிரவு அநேகர் உம்மைக் கண்டுகொள்ளும்படி அருளும், ஏனெனில் அவருடைய நாமத்தில் நாங்கள் இதைக் கேட்கிறோம்.

43 நம் தலைகள் தாழ்த்தப்பட்டிருக்க, இசை இனிமையாகவும் மென்மையாகவும் ஒலித்துக் கொண்டிருக்க, உங்களுக்கு மேலே பரிசுத்த

ஆவியானவர் கீழே பார்த்துக்கொண்டிருக்க, தேவன் உங்கள் இருதயத்தைத் தட்டி, "ஓ பாவியே, வீட்டிற்கு வா" என்று சொல்லும் போது... இதை ஏற்றுக்கொள்வதற்கு நாளை நீங்கள் இங்கே இல்லாமல் போகலாம். இன்றிரவு நீங்கள் வரமாட்டீர்களா? தேவன் உங்கள் இருதயத்தைத் தட்டிக்கொண்டிருந்து, தேவன் உங்களுடன் பேசுவதாக நீங்கள் உணர்ந்தால்... இப்போது என்னிடம் அல்ல, தேவனிடம், நீங்கள் அவருக்காக உங்கள் கையை உயர்த்தி, "தேவனே என்னை மன்னியும், நான் இப்போது இயேசுவை என் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன்" என்று சொல்வீர்களா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, அம்மா. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, அம்மா. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஐயா, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, அம்மா, வெகு தொலைவில் பின்னால் இருப்ப வர்களே. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சிறிய பெண்மணி. வேறு யாராவது உங்கள் கையை உயர்த்தி, "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்; நான் இப்போது

வருகிறேன். போதகர் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார்..." என்று சொல்வீர்களா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, அங்கே அழுதுகொண்டிருக்கும் அம்மா. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, கடைசியில் இருக்கும் அம்மா. நான் உங்களைப் பார்க்கிறேன். "ஊழியர் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் அசைவாடுவதையும், நோயாளிகளைச் சுகமாக்குவதையும், முன்னறிவிப்பதையும், காரியங்களை எடுத்துச் சொல்வதையும், மனிதகுலத்திற்குப் புரியாத புதிரான காரியங்களையும் பார்க்க நான் இரவுதோறும் இங்கே வருகிறேன். எங்களால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆண்டவரே, இனி நான் அதைப் புரிந்துகொள்ள முயற்சிக்கப் போவதில்லை. நீர் என் இருதயத்தைத் தட்டிக்கொண்டிருக்கும்போதே நான் உம்மை இப்போது ஏற்றுக்கொள்ளப் போகிறேன், ஏனென்றால் உம்முடைய ஆவி எப்போதும் என்னுடன் போராடாது என்று எனக்குத் தெரியும். எனவே இப்போது நீர் என்னை அழைக்கும்போது, ஆண்டவரே, இதோ என் கை, நான் வருகிறேன்".

வேறெங்காவது, யாராவது உங்கள் கைகளை உயர்த்துவீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக, ஐயா. மூலையில் இருக்கும் அம்மா, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. வெகு தொலைவில் பின்னால் இருப்பவர்களே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இங்கே வரிசையின் (aisle) நடுவில் இருப்பவர்களே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இங்கே மூலையில், எனக்கு இடதுபுறம் உள்ள பால்கனியில் (balcony) இருப்பவர்களே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஓ, என்மே, அங்கே அந்தப் பெரிய வரிசையில் கைகளை உயர்த்தியிருக்கும் அனைவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களோடு இருப்பாராக. நீங்கள் நித்தியத்திற்காக இரட்சிக்கப்பட்ட அந்த நேரத்தை நினைவுகூருங்கள். எனக்கு வலதுபுறம் உள்ள பால்கனியில், அங்கே மேலே உள்ள யாராவது உங்கள் கைகளை உயர்த்துங்கள், இன்றிரவு உங்கள் இருதயத்திலிருந்து ஒரேயடியாகத் தீர்த்துக்கொள்ள விரும்பு கிறவர்கள், தேவன் பேசிக்கொண்டிருக்கிறார்...

44 அந்த வார்த்தை "சோயே" (Zoe) என்பதாகும், "தேவனுடைய சொந்த ஜீவன்".

எனவே தேவனால் அழிய முடியாது என்றால், உங்களாலும் அழிய முடியாது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அங்கே மூலையில் இருக்கும் அம்மா, ஒரு இளம் பெண்மணி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நான் உங்கள் கையைப் பார்க்கிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, இப்போது உங்களுக்கு நித்திய ஜீவனைத் தருவாராக. அங்கே கீழே இருக்கும் சிறுமி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உன் கையையும் நான் பார்க்கிறேன், அன்பே.

சரி, இங்கே வரிசையில் கீழே, ஆம், நான் உங்களைப் பார்க்கிறேன். இங்கே பின்னால், தேவன் உங்களைப் பார்க்கிறார். அங்கே பின்னால் அந்த ஸ்பானிஷ் சகோதரரை நான் பார்க்கிறேன், அவரும் அவர் குடும்பத்தாரும் தங்கள் கைகளை உயர்த்தியிருக்கிறார்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது சரி. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டீர்கள்.

அணுகுண்டு உங்களுக்கு என்ன செய்ய முடியும்? அணுகுண்டு உங்கள் வீட்டின் முன் முற்றத்திலேயே தாக்கலாம், என் சகோதரனே.

அது செய்யக்கூடிய ஒரே காரியம், உங்களை இயேசுவிடம் கொண்டு சென்று உங்களுக்குப் புதிய சரீரத்தையும், புதிய ஜீவனையும் கொடுப்பதே ஆகும். நீங்கள் அதை இப்போதே கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அதை இப்போதே கொண்டிருக்கிறீர்கள். அந்த ஜீவனை, நித்திய ஜீவனை உருவாக்கும் அதே விதை உங்களுக்குள் இருக்கிறது, ஏனென்றால் நீங்கள் தேவனுடைய ஒரேபேறான குமாரனை விசுவாசித்தீர்கள்.

45 வேறு யாராவது? கவனியுங்கள், நீங்கள் சுகமாவதற்கு உங்கள் கையை உயர்த்த முடியுமானால், நீங்கள் இரட்சிக்கப்படவும் முடியும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சிறிய ஸ்பானிஷ் சிறுமி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அங்கே இருக்கும் மற்ற பெண்மணி, தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஓ, அது அருமை, ஒரு புதிய கூட்டம் கைகள் மேலே உயருகின்றன. பரிசுத்த ஆவியானவர் உள்ளே இறங்கட்டும். இங்கே கண்ணாடி களுடன் அமர்ந்திருக்கும் ஐயா, நரைத்த முடி கொண்ட மனிதர், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை

ஆசீர்வதிப்பாராக, ஐயா. வெகு தொலைவில் பின்னால், உங்கள் கையை நான் பார்க்கிறேன், அம்மா, அங்கே வெகு தொலைவில் பின்னால். தேவனும் அதைப் பார்க்கிறார். அங்கே கைகளை உயர்த்தியிருக்கும் அந்த இளம் பொன்னிறத் தலைமுடி கொண்ட பெண்மணி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இங்கே கீழே கைகளை உயர்த்தியிருக்கும் இரண்டு இளம் பெண்கள், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, அன்பே. அது அருமை. இங்கே மேலே, பால்கனியில் இருக்கும் சிறிய பெண்மணி. மேலும், அங்கே பின்னால் இருக்கும் சிறு பையன்.

நீங்கள் கேட்கலாம், "அந்தச் சிறு பிள்ளைகளைப் பற்றி என்ன?"

நிச்சயமாக, இயேசு அவர்கள் இருதயங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார். சில நேரங்களில் பெரியவர்கள் மிகவும் கடினப்பட்டிருப்பதால், பரிசுத்த ஆவியானவர் அவர்களுடன் பேசவே முடிவதில்லை. இயேசு சொன்னார், "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத்

தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது".

46 சரி, இப்போது இந்தக் கட்டிடத்தில் இருக்கும் ஒவ்வொரு பாவியும், நீங்கள் கிறிஸ்துவிடம் உங்கள் கையை உயர்த்தவில்லை என்றால், இன்றிரவு முதல் விசுவாசிப்பதற்காக, அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு இப்போது உங்கள் கையை உயர்த்துவீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக, ஐயா, அங்கே மேலே பால்கனியில் உங்கள் கையை உயர்த்தியிருப்பதை நான் பார்க்கிறேன். இப்போது, நீங்கள் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்ளுங்கள், கிறிஸ்துவைப் பெற்றுக் கொள்வது ஜீவன். நீங்கள் இப்போது மரணத்திலிருந்து, பாவத்திலிருந்து நித்திய ஜீவனுக்குக் கடந்து செல்கிறீர்கள்.

மக்களாகிய நீங்கள் உணர்ந்துகொள்ள முடிந்தால்... அங்கே பின்னால் உள்ள அம்மா, கையை உயர்த்தியிருக்கும் அந்த இளம் பெண்மணி, தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, அம்மா. அங்கே சிவப்புச் சட்டை

*அணிந்திருக்கும் ஒரு சிறிய பையன், உன் கையைப் பார்த்தேன், அன்பான பையனே. அது மிகவும் நல்லது. ஆம், நீ இல்லை, நீ சரியாக இருக்கிறாய். என் பையன் உன்னைவிடப் பெரியவனாக இல்லாதபோதே நான் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன். அது... அது சரி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இங்கே பின்னால் இருப்பவர்கள், அந்த இளம் பெண் மற்றும் அந்த வாலிபன், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக. நீங்களும், இங்கே இருக்கும் பையன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, வாலிபனே. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளுங்கள்...*

தேவன் அதை எவ்வளவு எளிமையாக ஆக்கினார் என்று நினைத்துப் பாருங்கள். சும்மா விசுவாசியுங்கள், ஏற்றுக்கொள்ளுங்கள்; விசுவா சிப்பது மட்டுமே உங்களால் செய்ய முடிந்த தெல்லாம். நீங்கள் செய்யக்கூடிய வேறு எதுவும் இல்லை. இயேசு சொன்னார், "அவர்கள் விசுவாசித்தால், நான் அவனுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பேன், கடைசி நாட்களில் அவனை எழுப்புவேன்".

ஆம், இங்கே கீழே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அது அருமை. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சரி.

இப்போது, நாம் நம் தலைகளை ஒரு கணம் தாழ்த்தி வைத்திருப்போம். இயேசுவின் இரத்தத்தின் கீழும், அவருடைய சொந்த வார்த்தையின் கீழும் நாம் இவர்களைப் பிதாவிடம் ஒப்புக்கொடுக்கப் போகிறோம்.

47 இப்போது, பிதாவே, உம்முடைய அன்பான குமாரனாகிய கர்த்தராகிய இயேசு, இங்கே பூமியில் நின்றபோது, ஒருபோதும் தவறாத தேவனுடைய வார்த்தையாகிய வேதத்தின்படி, நீர் சொன்னீர், "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு, நித்திய ஜீவன் உண்டு, அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்".

அதிசயங்களிலெல்லாம் மிகப் பெரிய அதிசயமாகிய, பாவிகள் கிறிஸ்துவைப் பெற்றுக் கொள்வதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இதற்காக நாங்கள் உமக்கு

நன்றி செலுத்துகிறோம். தேவனே, பிதாவே, அவர்களில் ஒருவரும் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்வதிலும், இந்த இரவை நினைவுகூருவதிலும் தவறாமல் இருக்கக் கிருபை செய்யும். பிதாவே, இந்த வார்த்தைகளுக்குப் பதில் சொல்ல நான் நியாயத்தீர்ப்பில் உமக்கு முன்பாக வரும்போது. நான் மக்களுக்கு உம்முடைய வார்த்தையை வழங்கியிருக்கிறேன், அவர்கள் அழிந்து போகாமல், நித்திய ஜீவனைப் பெற்றிருப்பார்கள்.

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ (ஸ்பானிஷ், நிறமுள்ளவர்கள், எத்தியோப்பியர், இந்தியர், ஆங்கிலோ-சாக்சன், யாராயிருந்தாலும்) அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்," ஏனென்றால் பாவியின் இடத்தில் மரிக்கத் தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார் என்று அவர்கள் நம்பினார்கள். அவர்களுக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவர்கள் இங்கு இருக்கும்போது, பூமியில்

நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் ஒவ்வொருவரும் பெறும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். நான் என் கடைசிப் பிரசங்கத்தைப் பிரசங்கித்து, கடைசி முறையாக வேதாகமத்தை மூடிவிட்டு, நாங்கள் உம்முடைய சமுகத்தில் நிற்கும்போது, நான் அவர்களை அங்கே பார்க்கவும், நாங்கள் ஒருவருக்கொருவர் சிம்மாசனத்தைச் சுற்றி மகிழ்ச்சியுடன் ஒன்று கூடவும் அருளும். "அன்று இரவு பீனிக்ஸ் (Phoenix) நகரில், நான் என் கையை உயர்த்தினேன். தேவன் என் இருதயத்தைத் தட்டினார் என்று நான் நம்புகிறேன், நான் பதில் கொடுத்தேன். ஓ, நான் கர்த்தருக்கு அற்புதமாகச் சேவை செய்த எப்பேர்ப்பட்ட வாழ்க்கையைக் கொண்டிருந்தேன்" என்று அவர்கள் சொல்ல ட்டும். இதோ அவர்கள் இப்போது அழியாத வர்களாக இருக்கிறார்கள். அதை அருளும், பிதாவே.

48 இன்றிரவு இந்தக் கூட்டங்கள் முடியும் போது, அவர்கள் ஒவ்வொருவரும் இங்கே ஜெப அறைக்குத் திரும்பி வந்து முழங்காலிட்டு, "பிதாவே, என்னை இரட்சித்ததற்காக உமக்கு நன்றி. இப்போது, என்னைப்பரிசுத்த

ஆவியினால் நிரப்பும். அந்த ஏவுதலினால் எனக்கு ஞானஸ்நானம் கொடும்" என்று சொல்லட்டும். உம்முடைய ஆவியை அவர்கள் வாழ்க்கையில் அபரிமிதமாக ஊற்றும். ஆண்டவரே, அதை அருளும், கிறிஸ்துவின் நாமத்தில் நாங்கள் அதைக் கேட்கிறோம். ஆமென்.

*ஓ, அந்த நித்திய நாளில்,*

*"நன்று" என்று அவர் சொல்ல நீங்கள் எப்படி விரும்புவீர்கள்.*

*அன்பான இரட்சகரை உங்கள் இருதயத்திலிருந்து புறக்கணித்துத் தள்ளாதீர்கள்,*

*அவரைப் புறக்கணித்துத் தள்ளாதீர்கள்.*

ஓ, நீங்கள் நன்றாக உணரவில்லையா? சற்று முன்பு உங்கள் கைகளை உயர்த்திய நீங்கள், உங்களுக்கு ஏதோ ஒன்று நேர்ந்ததாக நீங்கள் உணர்ந்தால் உங்கள் கைகளை உயர்த்துங்கள், உங்கள் கைகளை உயர்த்திய அனைவரும் உங்கள் கைகளை உயர்த்துங்கள். ஓ, என்மே. அது அற்புதம் அல்லவா? நிச்சயமாக.

49 கென்டக்கி மலைகளுக்குக் கீழே வெகு தொலைவில், பழைய பாணியிலான மிஷனரி பாப்டிஸ்ட் சபையில், அந்தப் பழைய பெண்கள் மற்றும் அவர்கள், "அவரைப் புறக்கணித்துத் தள்ளாதே" (Don't Turn Him Away) என்று பாடத் தொடங்குவது எனக்கு நினைவிருக்கிறது. அங்கே பின்னால் இருக்கும் அந்தப் பழைய பையன்கள், பழைய...?... தொப்பியை அணிந்து கொண்டு, பலிபீடத்திற்கு வரத் தொடங்கி, அழுது கொண்டு, நித்திய ஜீவனை ஏற்றுக் கொண்டு, கர்த்தராகிய இயேசுவை விசுவா சிப்பதைப் பார்ப்பது எனக்கு நினைவிருக்கிறது.

இப்போது, கர்த்தராகிய இயேசுவிடம் புதிதாக வந்து, நித்திய ஜீவனை ஏற்றுக்கொண்ட புதிய விசுவாசிகளாகிய உங்களிடம், நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இப்போது, இயேசு... அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெ ழுந்தார் என்று வேதம் போதிக்கிறது. அவர் பூமியில் இருந்தபோது செய்த அதே கிரியைகளை, அவர் மீண்டும் வரும் வரை சபை மூலமாகச் செய்வார் என்று அது கோருகிறது. "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் செய்கிற

கிரியைகளை அவனும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். ஏனென்றால் நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறேன்". அங்கே வார்த்தை பெரியது (greater) என்பதாகும். "பெரியது" என்றால் "அதிகம்" (more) என்று அர்த்தம், தரத்திலோ அல்லது அளவிலோ உங்களால் பெரிதாக எதையும் செய்ய முடியாது, ஆனால் தரத்தில், அதில் அதிகமானதைச் செய்ய முடியும். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருப்பதால், அவர் எல்லா சபைகளிலும் எல்லா இடங்களிலும் இருக்க முடியும்.

50 இப்போது, அவர் தரிசனங்களைக் கண்டார், "பிதா எனக்குக் காண்பிக்கிறதைத் தவிர நான் ஒன்றும் செய்வதில்லை, பிதா எனக்கு எதைக் காண்பிக்கிறாரோ, அதை நான் செய்கிறேன்" என்று சொன்னார். கிணற்றடியில் இருந்த பெண்ணின் பிரச்சனையை அவர் கண்டார். நேத்தனியேல் எங்கே இருந்தார் என்று அவருக்குத் தெரியும், அல்லது பிலிப்பு நேத்தனியேலைத் தேடிக்கொண்டிருந்தபோது அவர் ஜெபித்துக்கொண்டிருந்தார். ஒரு நபர் வந்தார், அவருடைய பெயர் அவருக்குத்

தெரியும், அவர் யார் என்று அவருக்குத் தெரியும், அவர் பெயர் என்னவென்று அவரிடம் சொன்னார், கூட்டத்தைப் பார்த்து, அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து கொண்டார். ஒரு பெண் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். அவர் திரும்பிப் பார்த்து, "என்னிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டது" என்றார். அவர் அவளைக் கண்டுபிடிக்கும் வரை அவள் இருந்த கூட்டத்தைப் பார்த்து, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது (குணமாக்கியது)" என்றார். அவர் பூமியில் இருந்தபோது அந்த வகையான இயேசுவாகத்தான் இருந்தார்.

அவர் வல்லமையில் அதேபோலவும், மரியாதையில் அதேபோலவும், மனப்பான் மையில் அதேபோலவும், எல்லாவற்றிலும் அதேபோலவும் இருந்தால், அவர் எல்லா வற்றிலும், நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். "இன்னும் கொஞ்சக்காலத்தில் உலகம் (அவிசுவாசிகள்) இனி என்னைக் காணாது, ஆனால் நீங்கள் (விசுவாசிகள்) என்னைக் காண்பீர்கள், ஏனென்றால் நான் ('நான்' என்பது ஒரு தனிப்பட்ட பிரதிபெயர்),

உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களுடனேகூட, உங்களுக்குள்ளும் இருப்பேன் (அப்போஸ் தலர்களின் காலத்தில் மட்டுமல்ல)" என்று இயேசு சொன்னார், இயேசு கிறிஸ்து, நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.

இப்போது, நாம் நோயாளிகளுக்காக ஜெபிக்கப் போகிறோம். இன்னும் சில நிமிடங்களில்... நான் ஒரு சுகமளிப்பவன் அல்ல. நான் உங்களைப் போலவே இருக்கிறேன், கிருபையினால் இரட்சிக்கப்பட்ட ஒரு பாவி; அவ்வளவுதான். கர்த்தர்...

நான் அந்த மலைகளில் ஒரு சிறு குழந்தையாகப் பிறந்தபோது, நம்மிடம் இருக்கும் இந்த ஒளி (Light), உங்களில் அநேகர் இதைப் பார்த்திருக்கிறீர்கள், நான் இருந்த என் சிறிய தொட்டில் படுக்கைக்கு மேல், சிறிய தாழ்வான படுக்கைக்கு (trundle affair) மேல் தொங்கிக்கொண்டிருந்தது; அப்போதிருந்து அது என்னுடனே இருக்கிறது. தரிசனங்களைப் பார்ப்பது நான் அல்ல; அவற்றைக் காண்பிப்பது அவரே. எனவே என்னிடம் எதுவும் இல்லை. புரிகிறதா? இது தேவன் உங்களுக்குக்

கொடுத்தது. அதைச் செய்வது என் விசுவாசம் அல்ல; அதை நகர்த்துவது உங்கள் விசுவாசமே. என்னால் அதை நகரச் செய்ய முடியாது; அதை நகரச் செய்வது நீங்கள்தான். புரிகிறதா? நீங்களே அதை நம்ப வேண்டும். அப்படி நம்புவதினால், நீங்கள் சரியாக நம்பினால், தேவன் உங்கள் வேண்டுதலை அருளுவார். அது... என்பதினால் அல்ல, அது கர்த்தராகிய இயேசு என்பதினாலேயே ஆகும்.

51 மக்களை வழிநடத்த இயேசு முதல் முறை தோன்றியபோது, அவர் அக்கினி ஸ்தம்ப வடிவில் இருந்தார் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? உடன்படிக்கையின் தூதர் இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தினார்.

இரண்டாவது முறை அவர் தோன்றிய போது, இயேசு என்று அழைக்கப்பட்ட ஒரு மனிதரின் வடிவில் இருந்தார்.

மூன்றாவது முறை அவர் தோன்றும்போது, அவர் பரிசுத்த ஆவி என்று அழைக்கப்படும் ஆவி வடிவில் இருக்கிறார்: பிதா, குமாரன்,

பரிசுத்த ஆவி. உங்களுக்குப் புரிகிறதா? ஆமென். அது-அது அவரே.

இப்போது, அவர் அக்கினி ஸ்தம்பத்தில் பிள்ளைகளை வழிநடத்தியபோது எப்படி இருந்தாரோ, இன்றும் அப்படியே இருக்கிறார். அது என்னவென்றால் தேவன் தம்மைத் தாழ்த்தி இறங்கி வருவது மட்டுமே.

அங்கே மேலே மலையின் மேல்... மோசே, யாரும், ஒரு மிருகம் மலையைத் தொட்டாலும் கூட, கொல்லப்பட வேண்டும், பலி இல்லை. பாவிகள் பரிசுத்த தேவனை அணுகக்கூடிய எந்த இரத்த பலியும் அப்பொழுது இருக்கவில்லை.

அடுத்ததாக அவர் ஒரு கன்னிகையிடம் பிறந்து, கன்னிப் பிறப்பாகக் கீழே இறங்கி வந்தார். தேவன் தம்முடைய குமாரனாகிய கிறிஸ்து இயேசுவுக்குள் வந்து, உலகத்தைத் தமக்குள்ளாக ஒப்புரவாக்கிக்கொண்டார். நீங்கள் அவரைத் தொடலாம், ஆனால் அவர் ஒரு வித்தியாசமான நபர். தேவன் என்ன செய்கிறார்? அவரே கீழே இறங்கி வந்து மக்களுடன் ஐக்கியம் கொள்ளும்படி, ஒரு சபையைப்

பரிசுத்தமாக்குவதற்காக இந்த இரத்த அணுவை (Blood Cell) உடைக்கிறார். தேவன் உங்களை எப்படி நேசிக்கிறார் என்று பார்க்கிறீர்களா? அவர் கொண்டு வந்தார்... உங்களால் அதைக்குறித்து ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர் ஆதாமோடு மீண்டும் ஐக்கியம் கொள்ளும்படி கீழே இறங்கி வருவதற்காகத் தம்மைத் தாழ்த்தித் தம்முடைய வழியைச் சுத்திகரித்து...?... பாவத்தை அகற்றினார். நீங்கள் அதைப் பார்க்கிறீர்களா?

52 பாவம் வருவதற்கு முன்பு அவர் அவனுடன் ஐக்கியம் கொண்டிருந்தார், பின்னர் பாவத்தை அகற்ற ஒரு வழியை உருவாக்க அவர் வர வேண்டியிருந்தது. இப்போது, அவர் மீண்டும் அவனுடன் ஐக்கியம் கொள்கிறார்: அதே பரிசுத்த ஆவி, அதே பிதா, தம்முடைய ஜனங்களுக்குள்ளே உலாவுகிறார். மிகவும் எளிமையானது, இதில் விசித்திரமானது எதுவுமில்லை, அது தேவன். இப்போது, அவர் சரீர வடிவில் பூமியில் இருந்தபோது செய்த அதே காரியத்தை இன்றிரவு இங்கேயும் செய்வார் என்று நான் நம்புகிறேன். தேவன் அந்தச் சரீரத்தை உயிர்ப்பித்தார், அது இன்று

தேவனுடைய சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறது. கிறிஸ்து தனது சொந்தச் சிம்மாசனத்தில் இல்லை; அவர் இப்போது பரலோகத்தில் தேவனுடைய சிம்மாசனத்தில் இருக்கிறார். ஆனால் அவர் மீண்டும் திரும்பும்போது, அவர் உரிமைதாரராக இருக்கிற தாவீதின் சிம்மாசனத்திற்கு வருவார்.

இப்போது, கவனியுங்கள், அதே காரியத்தைச் செய்ய, அதே அன்பை நேசிக்க, அவர் இப்போது இன்றிரவு ஆவி வடிவில் இங்கே இருக்கிறார்; அவர் சற்று முன்பு அங்கே ஒரு பாவியை இரட்சித்தார்; அதுதான் அவர் கொண்டிருந்த அன்பு. இப்போது, அவர் நோயாளிகளைச் சுகமாக்குவார், அதே அன்புதான் அவரிடம் இருந்தது. அவர் அடையாளங்களையும் அதிசயங்களையும் காட்டுவார், அவரிடம் இருந்த அதே அன்பு, அதே இயேசு. அவர் அதைச் செய்தால், நீங்கள் அவரை ஏற்றுக்கொள்வீர்களா? தேவன் உங்களை இப்போது ஆசீர்வதிப்பாராக.

பிதாவாகிய தேவனே, நீர் இதை அருள வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மூலம் நான் இப்போது என்னை உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். ஆமென்.

53 பில்... நாம் என்ன ஜெப அட்டைகளை... Q, நேற்றிரவு நாம் அதிலிருந்து அழைத்தோம், இல்லையா? ஜெப அட்டை Q என்று நான் நம்புகிறேன். நாம் அவற்றில் முதல் தொகுப்பை அழைத்தோம் என்று நான் நம்புகிறேன். இன்றிரவு Q-வின் கடைசிப் பகுதியை அழைப்போம். அவர் அந்த நேரத்தில் இங்கே இல்லை. நாம்... அது ஜெப அட்டைகள் Q, யாராவது அவற்றை வைத்திருக்கிறார்களா? அங்கே வெளியே பாருங்கள். அது நன்று.

சரி, அப்படியானால் Q-விலிருந்து அழைப்போம். அவற்றில் கடைசிப் பகுதியிலிருந்து அழைப்போம், கடைசி... நம்மிடம் எத்தனை இருந்தன, பதினைந்து... நேற்றிரவு...? பதினைந்து அல்லது பதினாறா? [சகோதரர் பிரான்ஹாம் ஒருவரிடம் பேசுகிறார்] சரி, கடைசிப் பதினைந்தை அழைப்போம், அது எண்பத்தி ஐந்திலிருந்து நூறு வரை இருக்கும்.

Q-85, யாராவது வைத்திருக்கிறார்களா? உடனே உங்கள் கையை உயர்த்துங்கள். Q-85, தயவுசெய்து உங்கள் கையை உயர்த்துங்கள். யாராவது வைத்திருக்கிறார்களா? அந்தப் பெண்?

சரி சகோதரி, இங்கே வாருங்கள். 86, சீக்கிரம், என் படம் உள்ள ஒரு சிறிய அட்டை, மற்றும் அதன் பின்புறம் ஒரு எண்ணும்-ஒரு எண்ணும் ஒரு எழுத்தும் இருக்கும். Q-85, 86. 86 யாரிடம் இருக்கிறது? அந்தப் பெண்மணி. 87, நாங்கள் நேரத்தைச் சேமிப்பதற்காக இப்போது சீக்கிரம் உங்கள் கையை உயர்த்துங்கள். இதுதானா? 87, 88, சரி, Q ஜெப அட்டை 88. சரி.

ஜெப அட்டை Q-89, 89? Q-90? Q-90, யாராவது வைத்திருக்கிறார்களா. உங்கள் கைகளை உடனே உயர்த்துவீர்களா? ஜெப அட்டை Q-90. எங்காவது யாருடைய அட்டையையாவது பாருங்கள். அது... ஆம், சரி. 90, 91, நாங்கள் பார்க்கும்படி உங்கள் கையை உயர்த்துங்கள். உங்களால் முடிந்தால் இங்கே எனக்கு உதவுங்கள். 91, யாராவது காது கேளாதவர்கள் அல்லது யாராவது எழும்ப

முடியாதவர்கள் உங்களுக்குத் தெரியும், அப்படியானால்... 91? மதியக் கூட்டங்களுக்கு வாருங்கள்; அவர்கள் ஜெப அட்டைகளைக் கொடுக்கிறார்கள். 91? Q-91 இங்கே இருக்கிறதா? 92? சரி, அம்மா. 92, 93, 94, 95, 96, 97, 98, 99, 100 வரை. இப்போது, அவர்கள் கூட்டத்திற்கு வந்திருக்கிறார்களா, வரிசையில் வந்திருக்கிறார்களா என்று சுற்றிப் பாருங்கள்.

இப்போது, நம்மால் முடிந்தால்... எல்லோரும் பயபக்தியுடன் இருந்தால், ஒருவேளை நாம் வெளியேறி, இன்னும் சில ஜெப அட்டைகளைக் கொடுக்கலாம், இன்னும் சிலவற்றை அழைக்கலாம். எல்லோரும் விசுவாசத்தைப் பிடித்துக்கொண்டு நம்ப முயற்சித்தால்...

அவர்கள் வரும்போது, இங்கே இருக்கும் இந்தத் துணிகளுக்காக நான் மீண்டும் ஜெபிக்க விரும்புகிறேன். நாம் ஒரு கணம் நம் தலைகளைத் தாழ்த்துவோமா?

54 அன்புள்ள இயேசுவே, தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில், எலியாவைக்

குறித்து வேதாகமம், "அவர் நம்மைப் போலவே பாடுள்ள மனுஷனாயிருந்தார்" என்று சொல்லு கிறது என்பதை நாங்கள் உணருகிறோம். அவருக்கு ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. நம்மைப் போலவே அவருக்கும் பிரச்சனைகள் இருந்தன. ஆனால் அவர் ஒரு மரித்த குழந்தையின் மேல் வைப்பதற்காகத் தான் நடந்து கொண்டிருந்த ஒரு கோலை அனுப்பினார். பவுல் தன்னை "பாவிகளில் பிரதான பாவி" என்று அழைத்துக் கொண்டார். இந்த மார்க்கத்தில் இருந்தவர்கள் அனைவரையும் அடைத்து வைப்பதற்காகத் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில், பரிசுத்த ஆவியானவர் அவரைக் கீழே தள்ளி, புறஜாதிகளுக்குத் தேவனுடைய வார்த்தையைச் சுமந்து செல்லும் ஒரு பாத்திரமாக அவரைத் தேர்ந்தெடுத்தார். அந்த அப்போஸ்தலனை அவர்கள் மிகவும் நம்பினார்கள், அவருடைய சரீரத்திலிருந்து கைக்குட்டைகளையும் கச்சை களையும் எடுத்துச் சென்றார்கள். அவற்றை அவர்கள் நோயாளிகள் மேல் வைத்தார்கள், அசுத்த ஆவிகள் வெளியேறின, தீங்குகளும், பலவீனங்களும் நீங்கி, மக்கள் சுகமானார்கள்.

ஆண்டவரே, தீர்க்கதரிசி சென்றுவிட்டார் என்பதையும், பவுலும் சென்றுவிட்டார் என்பதையும் நாங்கள் உணருகிறோம், ஆனால் இயேசு என்றென்றும் நிலைத்திருக்கிறார். பிதாவே, இந்நாளில் மக்களின் விசுவாசம், நீர் இப்போது இந்தக் கைக்குட்டைகளையும் உள்ளே இருக்கும் சிறிய பொட்டலங்களையும் ஆசீர்வதிப்பீர் என்று நம்புவதால், அவை நோயாளிகள் மேல் வைக்கப்படும்போது, அவர்கள் ஒவ்வொருவரும் சுகமடையும்படி நாங்கள் ஜெபிக்கிறோம், ஏனெனில் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவற்றை அனுப்புகிறோம். ஆமென்.

55 இப்போது, அனைவரும் பயபக்தியுடன் இருங்கள். இங்கே கொஞ்சம் குளிர்ச்சியாகி விட்டது என்று நினைக்கிறேன்; பெண்கள் தங்கள் கோட்டுகளைப் போடுவதைப் பார்த்தேன், ஒருவேளை அவர்கள் விசிறிகளை (fans) அணைத்தால், அது கொஞ்சம் நன்றாக இருக்கலாம். பராமரிப்பாளர் (custodian) தயவுசெய்து செய்வார்.

கவனியுங்கள், நண்பரே. மக்களை வரிசைப்படுத்திக் கொண்டிருக்கும்போது நான் உங்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இப்போது, நசரேயனாகிய இயேசு பல ஆண்டுகளுக்கு முன்பு ஸ்வீடனில் எனக்குக் கொடுத்த இந்தக் கோட் சூட்டை (suit) அணிந்துகொண்டு இன்றிரவு இங்கே நின்றால், அவர் இந்தச் சூட்டை அணிந்துகொண்டு இங்கே நின்றால், உதாரணமாக இங்கே இருக்கும் இந்தப் பெண், அல்லது வரிசையில் உள்ள யாராவது, இங்கே அவரிடம் வந்து, "ஆண்டவரே, நீர் என்னைச் சுகமாக்குவீர்களா?" என்று கேட்டால், இயேசு அவர்களிடம் என்ன சொல்வார் என்று நினைக்கிறீர்கள்?

அவர், "என்னால் முடியாது. நான் அதை முன்பே செய்துவிட்டேன்" என்று சொல்வார். கல்வாரியில் இயேசு மரித்தபோது, அவர் அதை அவர்களுக்காகச் செய்தார் என்று விசுவாசிக்கும் ஒவ்வொரு நோயாளியையும் அவர் சுகமாக்கினார். அது சரியா?

சிறிது நேரத்திற்கு முன்பு அந்தப் பாவி, "இப்போது, ஆண்டவரே, நீர் என்னை

இரட்சிப்பீரா?" என்று கேட்டால் என்ன நடந்திருக்கும்? அந்தப் பாவி இங்கே மேடைக்கு வந்து, இயேசு இங்கே நின்று கொண்டிருந்தால்... "இயேசுவே நீர் என்னை இரட்சிப்பீரா?" என்று கேட்டால்.

"மகனே, நான் பத்தொன்பது நூறு ஆண்டுகளுக்கு முன்பே உன்னை இரட்சித்து விட்டேன். நீ இப்போது அதை ஏற்றுக் கொள்கிறாயா?" என்று அவர் சொல்வார்.

அவன், "சரி, நீர் அதை இப்போது செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று சொன்னால்.

அவர், "நான் அதை முன்பே செய்துவிட்டேன்" என்று சொல்வார்.

எனவே உங்களை இரட்சிக்க முடியும் அல்லது சுகமாக்க முடியும் என்று யாராவது உங்களிடம் சொன்னால், அது ஒரு தவறு, ஏனென்றால் ஏற்கனவே செய்யப்பட்டதை யாராலும் செய்ய முடியாது. புரிகிறதா? பாவிகளை இரட்சிக்கவும், நோயாளிகளைச் சுகமாக்கவும் இயேசு மரித்தார். அதுதான்...

நமது பலவீனங்களைக்கண்டு பரிதாபப்படத்தக்க ஒரு பிரதான ஆசாரியராக (High Priest) அவர் இன்றிரவு தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். அது சரியா? என்ன செய்கிறார்? நமது அறிக்கையின்மேல் பரிந்து பேசுகிறார் (Intercession upon our confession). புரிகிறதா? அவர் அதைச் செய்துவிட்டார் என்று உங்கள் இருதயத்தில் முதலில் நீங்கள் விசுவாசித்து, அவர் அதைச் செய்துவிட்டார் என்று சொல்லும் வரை அவரால் உங்களுக்காக ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. நீங்கள் அதை விசுவாசித்துச் சொல்லும் அந்த நிமிடமே, தேவனுக்கு முன்பாக, அது சரி என்று அவர் சொல்கிறார். உங்கள் அறிக்கையின்மேல் பரிந்துபேச அவர் அங்கே இருக்கிறார்.

56 இப்போது, நீங்கள் இங்கே பீடத்திற்கு வந்து அலறலாம், அழலாம், தரையில் இங்கும் அங்கும் நடந்து அலறலாம், "தேவனே, பாவியாகிய என்னை இரட்சியும்". அது ஒரு துளி கூட நன்மை செய்யாது. நீங்கள் அதை இன்றிரவு, இரவு முழுவதும், நாளை முழுவதும், அடுத்த இரவும் செய்யலாம், தரையில் அடிக்கலாம், நீங்கள் விரும்பும்

எதையும் செய்யலாம். நீங்கள் உங்கள் உணர்வை வெளிப்படுத்துகிறீர்கள் (giving vent to your feeling) அவ்வளவுதான். ஆனால் நீங்கள் முதலில் அதை விசுவாசித்து, பின்னர் அதை அறிக்கை பண்ணும் வரை நீங்கள் ஒருபோதும் இரட்சிக்கப்பட முடியாது. ஏனென்றால், "மனுஷர் முன்பாக நீங்கள் என்னை அறிக்கைபண்ணினால், நானும் என் பிதா முன்பாகவும் பரிசுத்த தூதர்கள் முன்பாகவும் உங்களை அறிக்கைபண்ணுவேன்" என்று அவர் சொன்னார். அது சரியா? நீங்கள் செய்யும் அந்த நிமிடமே... நீங்கள் அதை உங்கள் அறிவிலிருந்து (head) மட்டும் செய்தால், சரி, அது ஒரு பொருட்டல்ல. நீங்கள் உங்கள் இருதயத்திலிருந்து அதைச் செய்தால், அது அங்கேயே தீர்க்கப்படுகிறது. தீர்க்கப்பட்டே ஆக வேண்டும். அந்த நிமிடமே புதிய, மறுபிறப்படைந்த நபர்... "என் வார்த்தைகளைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு (இப்போதே) நித்திய ஜீவன் உண்டு, அவன் ஒருபோதும் கெட்டுப் போகமாட்டான், ஆனால் மரணத்தை விட்டு

ஜீவனுக்குக் கடந்து செல்கிறான்," நீங்கள் விசுவாசிப்பதினாலேயே. அவ்வளவுதான்.

தெய்வீகச் சுகத்திலும் அதே காரியம்தான். நீங்கள் இங்கே மேடையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் அமர்ந்திருக்கும் இடத்திலேயே விசுவாசியுங்கள். இயேசுவை அண்ணாந்து பார்த்து, "நான் இப்போது அதை விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறேன். நீர் இப்போது என் பரிகாரியாய் இருக்கிறீர்" என்று சொல்லுங்கள்.

அந்த நிமிடமே, அவர் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக அதே காரியத்தை அறிக்கை செய்து, "என் தழும்புகளால் அவன் சுகமானான் என்று நான் அங்கீகரிக்கிறேன்" என்று சொல்கிறார். புரிகிறதா? அவர் தேவனாய் இருப்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக நீங்கள் சுகமாவீர்கள். அவர் செய்தே ஆக வேண்டும். தேவன் ஒன்றைச் சொல்லிவிட்டு அதைத் திரும்பப் பெற முடியாது; அவர் தனது வார்த்தையைக் காத்துக்கொள்ள வேண்டும். நான் ஒன்றைச் சொல்லிவிட்டு அதைத் திரும்பப் பெறலாம்;

நீங்களும் செய்யலாம், ஆனால் அவரால் முடியாது. அவர் தேவன், ஒருமுறை பேசினால், அது முடிந்தது. சரி.

57 இப்போது, இப்போது, இந்த மக்களுக்காக என்ன செய்ய முடியும்? இப்போது, வரிசையில் நிற்கும் இவர்கள், இங்கே அவர்களில் சிலர் மட்டுமே; அவர்களில் சிலரை நாம் இங்கே மேடைக்கு அழைத்தோம். எனக்குத் தெரிந்தவரை, அந்த வரிசையில் உள்ள ஒருவரையும் நான் பார்த்ததே இல்லை என்பது என் பரலோக பிதாவுக்குத் தெரியும். வெளிப்படையாகச் சொன்னால், இந்தக் கட்டிடத்தில் யாரும் இல்லை... சற்று முன்பு இங்கே அமர்ந்திருந்த இந்த மனிதர் லிட்டில் ராக்கைச் (Little Rock) சேர்ந்த சகோதரர் ஜி. எச். பிரவுன் என்று நினைத்தேன், ஆனால் அது அவர் இல்லை. அவர் அவரைப் போலவே இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியும், அது சகோதரர் பிரவுன் என்று நான் நினைத்தேன், ஆனால் அது அவர் இல்லை.

நான் தவறாக நினைக்கவில்லை என்றால், இங்கே அமர்ந்திருப்பது சகோதரர் ஃபுல்லர்

(Fuller), நான் தவறாக நினைக்கவில்லை என்றால் அங்கே அமர்ந்திருக்கிறார். இங்கே இருக்கும் இந்த மனிதர், எனக்கு அவரைத் தெரியாது, ஆனால் எனக்கு அவர் முகம் தெரியும், ஆனால் அவர் பெயர் தெரியாது. அது தவிர, இங்கே என் சொந்தச் சகோதரர்களைத் தவிர, இந்தக் கட்டிடத்தில் எனக்குத் தெரிந்த ஒருவரையும் நான் பார்க்கவில்லை. அது உண்மை.

58 இப்போது, நான் அதைச் சொல்லவில்லை, உங்களுக்கு என்னைத் தெரிந்தால் நான்... புரிகிறதா, எனக்கு உங்களைத் தெரியாது. உங்களுக்குப் புரிகிறதா? புரிகிறதா? அல்லது நான் உங்களை அடையாளம் காணவில்லை. தேவனுக்கு அது தெரியும்.

ஆம், அந்தப் பெண்மணி அங்கே அமர்ந்திருப்பதை நான் பார்க்கிறேன், அவளுடைய சகோதரி. எனக்கு அந்தப் பெண்மணியைத் தெரியும், அவள் டுப்சானைச் (Tucson) சேர்ந்த திருமதி மோர்கன். என் வாழ்க்கையில் நான் கண்ட முதல் தரிசனம்... அவளுடைய சகோதரி கென்டக்கியின்

லூயிஸ்வில்லில் (Louisville) இருபத்தொரு வருடப் பட்டதாரி செவிலியராக இருந்தார். அவள் இறந்து சுமார் பதினான்கு ஆண்டுகள் ஆகிறது. அவள் கிளார்க் கவுண்டி நினைவு மருத்துவமனையில் செவிலியராகப் பணி புரிகிறாள். கர்த்தருடைய தூதர் எனக்கு ஊழியம் செய்த பிறகு அவள் வந்தாள்... அது என்னவென்று என்னிடம் சொன்னார், இந்தத் தரிசனங்களைப் பற்றி, போதகர்கள் என்னிடம் அது பிசாசு என்று சொன்னார்கள், ஆனால் அது தேவனுடைய ஆவி என்பதை அவர் எனக்குத் தெரியப்படுத்தினார். அந்நாட்களில் புரிந்து கொண்டது போல அவர்கள் இதைப் புரிந்து கொள்ளவில்லை. திருமதி மோர்கன் தான் முதலில் வந்தார். திரு. மெக்டோவல் (Mr. McDowell) கண்களில் சுகமடைந்திருந்தார். திருமதி மோர்கன், திரு. மோர்கன், அவளுடைய கணவர், "வாருங்கள்," என்று சொல்லி, "இப்போது, அது என் மனைவியிடம் வேலை செய்யுமா என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது; அவள் சாகக்கிடக்கிறாள், ரேடியம், எக்ஸ்ரே எடுக்கிறாள்...?... ஓ, என்னே. அவள் சுயநினைவில் இல்லை" என்றார்.

எனவே அவர் வந்து என்னிடம் கேட்டார். நான், "அதைக்கேட்பது என் வேலை அல்ல, கேட்பது உங்கள் வேலை. நீங்கள் அதை நம்புகிறீர்களா? நான் நம்புகிறேன்" என்றேன். எனவே அவர் அவளைக் கொண்டு வந்தார், அந்தப் பெண்மணி, இங்கே, அன்று இரவு வந்திருந்தார். புற்றுநோயுடன் இருந்த அந்தப் பெண், அது மார்பகத்திலிருந்து, அடிவயிற்றின் வழியாக, குடல் பாதை வரை சென்றிருந்தது, மருத்துவர் அவளைத் திறந்தபோது, "ஏன்," அவர் சொன்னார், "ஒரு மரத்தின் வேர்களைப் போல இருக்கிறது. சுற்றியிருக்கிறது..." அவளுக்கு எனிமா (enema) கொடுத்துக் கூடக் கழுவ முடியவில்லை என்று சொன்னார். "அவளைச் சாக விடுவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது" என்று சொன்னார். அவள் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றாள், மருத்துவர் அவள் கணவரிடம், "இப்போது, நீங்கள்... அவளை மருத்துவ மனையிலிருந்து ஜெஃபர்சன்வில்லுக்கு (Jeffer sonville) அழைத்துச் செல்ல விரும்பினால்," "அவள் எப்போதும் நதியை விரும்புவதாகச் சொல்வாள், அவள் இறப்பதற்கு முன் நதியைப்

பார்க்கட்டும் என்பதற்காக நீங்கள் அவளை அழைத்துச் செல்லலாம்" என்று சொன்னார். ஆனால் "அவளுக்காக எதுவும் செய்ய முடியாது" என்று சொன்னார்.

59 சரி, அது என்னுடைய முதல்...?... சாகக்கிடக்கும் ஒரு பெண் அப்படிப் படுத்திருந்தாள், ஆனால் நான் அவள் கையைப் பிடித்தபோது... அதற்கு இரண்டு இரவுகள் அல்லது மூன்று இரவுகளுக்கு முன்பு கர்த்தராகிய இயேசு என்னை அங்கே சந்தித்திருந்தார். இந்தத் தூதர் என் அருகில் நின்றார், இந்த விஷயம் நடக்கும் என்று சொன்னார், நான் உலகம் முழுவதும் சென்று, அன்று இரவு மேடையில் அதைப் பற்றிச் சாட்சி கொடுப்பேன் என்று சொன்னார், அவளுக்காக ஜெபிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் திரும்பப் பேசி, "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் (THUS SAITH THE LORD)" என்றார். இன்று அவள் ஆரோக்கியமான, மற்றும் வலிமையான, நல்ல, அருமையான பெண்ணாக இருக்கிறாள், அங்கே அமர்ந்திருப்பது அவளுடைய சகோதரி, ஒரு

சாட்சி. அது சரியா, சகோதரி? அது... அது-அது சரி. அருமையான...

வடக்கிலிருந்து ஒரு பெரிய வழக்கறிஞர் வந்தார். அவர் அதைப் பற்றிக் கேள்விப் பட்டார். அவர் கீழே வந்து, கண்டுபிடிக்க விரும்பினார். எனவே அவர் லூயிஸ்வில்லில் உள்ள புற்றுநோய் மருத்துவமனைக்குச் சென்றார், அவள் இறந்து பல வருடங்கள் ஆகிறது. அவர், "நீங்கள் அவளைச் சந்திக்க விரும்புகிறீர்களா?" என்று கேட்டார். "நீங்கள் பார்த்ததிலேயே மிகவும் உயிருள்ள மரித்த நபர் அவர்தான்," இன்னும் செவிலியராகப் பணியாற்றுகிறார் என்றார்.

60 நானும் என் மனைவியும், இப்போது சில வாரங்களில் குழந்தையுடன், அவள் எப்போதும் எங்களுடன் இருந்திருக்கிறாள், உலகிலேயே எனக்கு இருக்கும் அருமையான நண்பர்களில் ஒருவர், அருமையான நண்பர்களில் ஒருவர்.

ஆம், நான் உங்களைப் பார்க்கவில்லை சகோதரி. மன்னிக்கவும். நீங்கள் கூட்டத்தில்

பின்னால் உட்கார்ந்திருப்பதை நான் கவனிக்கவில்லை, குறிப்பாக இங்கே மேலே நின்று கொண்டு விளக்குகள் வேறு விதமாகப் பிரகாசிக்கும்போது. பார்ப்பது சற்று கடினம். இங்கே மேலே நிற்கும் எவரும், அங்கே மக்களாகிய உங்களைப் பார்ப்பது கடினம் என்பதைப் பார்க்க முடியும்.

இப்போது, கவனியுங்கள், ஆனால் இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திருந்தால், அவர் பூமியில் இருந்தபோது என்ன செய்தார்? நான் சும்மா... நிதானமாக இருங்கள். அவசரப்பட வேண்டாம். அவர் என்ன செய்தார்? சத்தியத்தை அங்கீகரிக்கும் ஒரு விஷயம் அதை என்றென்றும் தீர்க்க வேண்டும். இயேசு பூமியில் இருந்தபோது, அவர் ஒரு சுகமளிப்பவர் என்று உரிமை கோரினாரா? இல்லை, ஐயா. "நான் எந்தச் சுகமளித்தலையும் செய்வதில்லை" என்று அவர் சொன்னார். "எனக்குள் வாசம் பண்ணுகிற என் பிதாவே சுகமளிக்கிறார்" என்றார். அது சரியா? "குமாரனாகிய நான் ஒன்றும் செய்ய முடியாது" என்று சொன்னார். அவர் என்ன செய்தார்? அவர் தேவனுடைய வல்லமையை

அளவில்லாமல் பெற்றிருந்தார். நாம் அதை அளவில் பெற்றிருக்கிறோம். அவர் அதை அளவில்லாமல் பெற்றிருந்தார். கடலுக்குச் சென்று ஒரு ஸ்பூன் தண்ணீரை (spoonful of the water) எடுப்பதைப் போல; அது கடலிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு ஸ்பூன் அளவுதான். அது அவருக்குப் பக்கத்தில் ஒரு சிறிய வரமாக இருக்கும். ஆனால் ஒரு ஸ்பூன் தண்ணீரில் இருக்கும் அதே இரசாயனங்கள் முழுக் கடலிலும் உள்ளன என்பதை நினைவில் கொள்ளுங்கள் (புரிகிறதா?), அதே காரியம்தான், ஆனால் சிறியது (புரிகிறதா?), மிகவும் சிறியது.

ஆனால் அவர் நின்றுகொண்டிருந்தபோது, மக்கள் பார்த்து நம்பினார்கள். சில காரியங்கள்... அவர் கூட்டத்தில் அழைத்துச் சிலவற்றைச் சொல்வார்.

பிலிப்பு நத்தானியேலைக் கொண்டுவந்தார், அவர், "இதோ, கபடற்ற ஒரு இஸ்ரவேலன்" என்றார்.

அவர், "ரபி, நீர் எப்படி என்னை அறிவீர்?" என்று கேட்டார்.

"பிலிப்பு உன்னை அழைக்கிறதுக்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருந்தபோது, நான் உன்னைக் கண்டேன்" என்றார்.

61 கிணற்றடியில் இருந்த பெண்ணிடம், அவளுடைய ஆவியைத் தொடர்பு கொள்ள அவளுடன் சிறிது நேரம் பேசிய பிறகு அவர் சொன்னார். தரிசனங்களைப் பார்க்கும் ஏதோ ஒன்று அவரிடம் இருந்தது. முடவர்கள் மற்றும் சூம்பின உறுப்புள்ளவர்கள் போன்ற அநேகரை இயேசு கடந்து சென்று, படுக்கையில் படுத்திருந்த ஒரு மனிதனிடம் சென்று சொன்னார்... இப்போது, கவனியுங்கள். அவர் அங்கே இருப்பதை இயேசு அறிந்திருந்தார். தேவன் அவருக்குக் காண்பித்திருந்தார். அவர் அந்த மனிதனைச் சுகமாக்கி, படுக்கையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போகச் சொன்னார். சரி, என்மே, யூதர்கள் அவரைக் கண்டு கேள்வி கேட்டார்கள். அவர்கள் இயேசுவைக் கேள்விக்குட்படுத்தினார்கள்; அவர் சொன்னது இதுதான், "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பிதா எதைச் செய்யக் குமாரன் காண்கிறாரோ, அதையேயன்றி, குமாரன் தாமாய்

ஒன்றும் செய்யமாட்டார்". அது சரியா? பிதா எதைச் செய்ய வேண்டும் என்று முதலில் தமக்குக் காண்பிக்கும் வரை தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று இயேசுவின் சொந்த வார்த்தையே சொன்னது.

62 லாசருவின் உயிர்த்தெழுதலையும், அங்கே மற்ற அநேக காரியங்களையும் பாருங்கள். ஒரு முறை குருடன் ஒருவன் வந்து, தனக்காக ஜெபிக்கும்படி கேட்டான். அவனுக்காக அவருக்கு எந்தத் தரிசனமும் இல்லை. அவர் அவர்கள் கண்களைத் தொட்டு, "இப்போது, உங்கள் விசுவாசத்தின்படி, உங்களுக்கு ஆகக்கடவது" என்று சொன்னார். அந்தப் பெண் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டுவிட்டு கூட்டத்திற்குள் சென்று, அங்கே சிறிது நேரம் நின்று கொண்டிருந்தாள். அவர் அவளைக் கண்டுபிடித்தபோது திரும்பிப் பார்த்து, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது (குணமாக்கியது)" என்றார். உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சரீரப் பிரகாரமாக உன்னை இரட்சித்தது. அதே வார்த்தைகள், "சோசோ" (Sozo). உன்னை இரட்சித்தது, உன்னை இரட்சித்தது, சரீரப் பிரகாரமாக

அல்லது ஆவிக்குரிய பிரகாரமாக, அதே வார்த்தை, வேதாகமத்தில் ஒவ்வொரு முறையும் அதே வார்த்தை, சுகமளிப்பது அல்லது இரட்சிப்பது அதே கிரேக்க வார்த்தையான "சோசோ" ஆகும். படித்த எந்தப் போதகருக்கும் அது தெரியும். சோசோ, உன் விசுவாசம் உன்னைச் சரீரப் பிரகாரமாக இரட்சித்தது, ஆவிக்குரிய பிரகாரமாக இரட்சித்தது.

இப்போது, இயேசு இன்றிரவு இங்கே இருந்தால், அவர் சென்றபோது, "இன்னும் கொஞ்சக்காலத்தில் உலகம்..." என்று சொன்னார். அவிசுவாசிகள், அவர்கள் அதை நம்பமாட்டார்கள். அன்று மக்கள் அதைப் பற்றி என்ன நினைத்தார்கள்? அவர் யார் என்று அவர்கள் சொன்னார்கள்? சரி, அவர்கள்...

"இவர் உண்மையிலேயே தேவனுடைய குமாரன்" என்று அந்தப் பெரிய மத உலகம் சொன்னதா? அவர்கள், "இவர் நாட்டின் சிறந்த குறிசொல்லுகிறவர். இவர் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூல் (Beelzebub)" என்று சொன்னார்கள். அது சரியா? ஆனால் பிசாசு அவர் யார் என்று சொன்னது?

"தேவனுடைய குமாரன்". எனவே பிசாசு பிரசங்கிகளைப் போலவே இருந்தான். எனவே... பிறகு உங்களுக்குத் தெரியுமா? அந்தப் பிரசங்கியை விட அந்தக் குறிசொல்லுகிறவர்கள் ஆவிகளுக்கு அதிகம் உட்பட்டிருந்தார்கள். அது முற்றிலும் சரி.

இங்கே ஒரு சிறிய விஷயம் இருக்கிறது. மறுநாள் அந்த ஒதுக்கீட்டுப் பகுதியில் (reservation), அந்த இந்தியர் ஒதுக்கீட்டுப் பகுதியில் என்ன நடந்தது? நான் சொல்வது புரிகிறதா? ஆவிகளுக்கு அதிகம் உட்பட் டிருப்பது. நாம் அனைவரும் படித்தவர் களாகவும், கல்வியறிவு பெற்றவர்களாகவும் இருக்கிறோம், என்மே, காரியங்கள் வெகு தொலைவில் போய்விட்டன. ஆனால் கீழ்திசை மனிதன் (easterner), சகோதரனே, அவன் நம்புகிறான்.

63 இப்போது, இயேசு இன்றிரவு இங்கே இருந்து, உள்ளே வந்து, அவர் பூமியில் இருந்தபோது செய்த அதே காரியங்களைச் செய்தால், அவர் இங்கே இருக்கும் இந்த மக்களுக்கு என்ன செய்வார்? இப்போது, அவர்

ஏற்கனவே அவர்களைச் சுகமாக்கியிருந்தால், இப்போது அவர் என்ன செய்ய முடியும்? இப்போது, வார்த்தையைப் பிரசங்கிப்பதன் மூலம், அவர் எதை நம்புகிறார், அவர் என்ன செய்தார் என்பதை அவர்களுக்குத் தெரியப் படுத்துகிறார். இப்போது, அவர்களால் அந்த வழியில் அதை ஏற்றுக்கொள்ள முடியா விட்டால், அதுதான்-அதுதான் சிறந்த வழி, அதுதான் ஆரம்பச் சுகம் (initial healing). அது சரியா? அதுதான் ஆரம்ப வழி. விசுவாசம் கேள்வியினாலே, வார்த்தையினாலே வருகிறது.

இப்போது, அது இல்லையென்றால், அவர் சபைக்கு வரங்களை அளித்தார், சிலர் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், சுவிசேஷகர், அந்நிய பாஷை வரம், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல், இவை அனைத்தும் சபையின் பக்தி விருத்திக்காக.

இப்போது, நான் பெரிய பிரசங்கியார் அல்ல. என்னால் செய்யக்கூடிய ஒரே விஷயம், தரிசனங்களைப் பார்க்கும் வரத்தின் மூலமாக மட்டுமே, இங்கே அல்ல, இங்கே சபையில்

அல்ல, ஐயோ. இது அதன் ஒரு சாதாரண (amateur) பக்கமே. மற்ற இடங்களில் என்னுடன் இருக்கும் என் கூட்டாளிகளைக் கேட்டுப் பாருங்கள். ஏன், வழியில் மற்றும் எல்லா இடங்களிலும் நடக்கும் காரியங்களை முன்னறிவித்து, தரிசனங்கள் எல்லா நேரத்திலும் எங்கிருந்தும் வருகின்றன. ஒரு முறையாவது அது எப்போதாவது தவறியிருக்கிறதா என்று யாரையாவது கேட்டுப் பாருங்கள். அது வில்லியம் பிரான்ஹாம் ஆக இருந்தால், அது எப்போதும் தவறும்; ஆனால் அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாக இருக்கும் வரை, அது தவறவே முடியாது. அது சரி.

64 மேலும் இங்கிருக்கும் அவருடைய இந்தப் புகைப்படம், நான் உண்மையைச் சொன்னேன் என்பதை விஞ்ஞான உலகிற்கு நிரூபிக்கிறது. அது-அது-அது அவருடைய புகைப்படம், என்னுடையது அல்ல. அது டெக்சாஸில் உள்ள ஹூஸ்டனில் பதிப்புரிமை (copyrighted) பெறப்பட்டுள்ளது, நாங்கள் அதை விலைக்கு வாங்கி மக்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஆனால் இப்போது, முழு சுவிசேஷ மக்களாகிய நாம் அனைவரும், கிறிஸ்தவர் களாகிய நாம் அனைவரும் போராடுகிறபடி, அவர் உயிர்த்தெழுதலின் வல்லமையில் வந்தால்... இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெ ழுந்தார். அப்படியானால் அவர் மரித்தோரி லிருந்து உயிர்த்தெழுந்திருந்தால், நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்றால், அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருப்பதற்கு, அவர் நேற்று செய்த அதே காரியத்தை இன்றும் செய்தாக வேண்டும். அது சரியா? அவர் மாறாதவராயிருக்க அவர் அதைச் செய்தே ஆக வேண்டும்.

இப்போது, இன்றிரவு நான் நூறு சதவீதம் சரியாக இல்லை என்று எனக்குத் தெரியும், ஆனால் நான்-நான், என் சகோதரனே, அதை உன்னால் மறைக்க முடியாது. ஆனாலும்... நான்... எப்படியிருந்தாலும் அது அப்படியே இருக்கிறது. புரிகிறதா, புரிகிறதா?

65 இப்போது, அந்த விசுவாசிகளின் நிமித்தம் அவர் வந்து கிரியை செய்வாராக... இப்போது, இங்கே ஜெப அட்டை (prayer card)

இல்லாத எத்தனை பேர் இருக்கிறீர்கள், ஆனாலும் இயேசு உங்களைச் சுகமாக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்? உங்கள் கையை உயர்த்துங்கள். நீங்கள் இயேசு உங்களைச் சுகமாக்க விரும்புகிறீர்கள், ஆனால் ஜெப அட்டை இல்லை என்றால், நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று என்னால் ஒரு பொதுவான கணிப்பிற்கு வர முடியும். சரி. நாம் ஜெபிப்போம்.

பிதாவே, உம்முடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், இந்த ஏழை, தாழ்மையான, தகுதியற்ற சரீரத்தை நான் இப்போது உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன், நீர் இந்த உதடுகளின் மூலம் பேசி, இந்தக் கண்களின் மூலம் பார்ப்பீராக. ஆண்டவரே, அங்கே வெளியே இருக்கும் மக்களின் இருதயங்களுக்குள் சென்று, விசுவாசிக்கிறதற் கேதுவான விசுவாசத்தை அவர்களுக்குக் கொடும், அப்பொழுது உம்முடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலின் மகிமைக்காக, இன்றிரவு உமது ஊழியர்களாகிய நாங்கள் ஒன்றிணைந்து செயல்பட முடியும். ஆமென்.

இப்போது, எல்லோரும் தயவுசெய்து உங்கள் இடங்களில் இருங்கள்; உங்கள் இருக்கைகளிலேயே இருங்கள், அலைந்து திரிய வேண்டாம்; எங்களுக்குச் சிறிது நேரம் கொடுங்கள். நாளை இரவு கடைசி இரவாக இருப்பதால், கர்த்தருடைய ஆவி என்மேல் இறங்கினால், நிச்சயமாக, சிறிது நேரத்தில் நான் ஒரு மாதிரியாக ஆகிவிடுவேன்; அது வேறொரு பரிமாணம் (dimension); அது வேறொரு உலகம். நான் என்ன சொல்கிறேன் என்று எனக்குத் தெரியாது. அவர்கள் என்னிடம் சொல்வார்கள். அங்கே வைக்கப்பட்டிருக்கும் இந்த ஒலிப்பதிவு நாடாவைப் (tape recording) பாருங்கள், அதன் மூலமாகத்தான் நான் தெரிந்துகொள்கிறேன்.

அவர்களிடம் என்ன சொல்லப்பட்டது என்பதை யாராவது அறிய விரும்பினால், அந்த ஒலிப்பதிவு நாடாவைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். நாங்கள் அதைச் செய்கிறோம், ஏனென்றால் ஒவ்வொரு முறையும் அது முற்றிலும் தவறாத உண்மையாக இருக்கிறது. நீங்களே சென்று தெரிந்துகொள்ளுங்கள். அது அப்படித்தான் இருக்கிறது... எனக்கு

நாற்பத்தைந்து வயதாகிறது; ஒரு சிறு குழந்தையாக எனக்கு நினைவிருக்கும் முதல் காரியத்திலிருந்தே இது அப்படித்தான் இருந்து வருகிறது.

இப்போது, பயபக்தியுடன் இருங்கள். "சகோதரர் பிரான்ஹாம், அது என்ன?" என்று நீங்கள் கேட்கலாம். அது உங்களை தேவனுடைய ஆவிக்கு ஒப்புக்கொடுப்பதாகும், எப்படி ஒப்புக்கொடுப்பது என்று அறிந்து கொள்வது மட்டுமே. நீங்களும் அதே காரியத்தைச் செய்கிறீர்கள். உங்களால் தரிசனங்களைப் பார்க்க முடியாமல் இருக்கலாம், ஆனால் பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்காக உங்களை ஒப்புக்கொடுக்க முடியும்.

66 இப்போது, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், தேவனுடைய மகிமைக்காக இங்கிருக்கும் ஒவ்வொரு ஆவியையும் என் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறேன். ஆமென்.

இப்போது, ஒலிப்பதிவாளர் (engineer) கவனிப்பார், சில நேரங்களில் என் குரல் மிகத் தாழ்வாக இருப்பதால் நான் டேப்பில் பதிவாவதில்லை. இப்போது, இங்கே நிற்கும் இந்த இளம் பெண், எனக்கு முன்பின் அறிமுகமில்லாதவர். என் வாழ்நாளில் நான் இவரைப் பார்த்ததே இல்லை, எனக்குத் தெரிந்தவரை. அப்படியிருந்தால், எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் தேவனுக்கு இந்தக் குழந்தையைப் பற்றி எல்லாம் தெரியும். அவளுக்கு என்ன தவறு, அல்லது அவள் எதற்காக இங்கே இருக்கிறாள், எல்லாவற்றையும் அவர் சரியாக அறிவார்.

எனவே கர்த்தருடைய தூதர் இப்போது வந்து, இங்கே நிற்கும் இந்தச் சிறிய பெண்மணியிடம் பேசி, கடந்த காலத்தில் உங்கள் வாழ்க்கையில் நடந்த ஒன்றைச் சொல்லி, அதை வெளிக்கொண்டு வந்தால், அது எதுவாக இருந்தாலும் எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது என்று உங்களுக்குத் தெரியும்... நாமும் அறிமுகமில்லாதவர்கள், அனேகமாக நீங்கள் பதினான்கு, பதினைந்து வயது மூத்தவராக இருக்கலாம், அல்லது

அவ்வளவு வயது இல்லாமலும் இருக்கலாம், எனக்கு நாற்பத்தைந்து வயது. நாம் பல வருட இடைவெளியில் பிறந்திருக்கிறோம், அனேக மாக, நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் பிறந்திருக்கிறோம். ஒருவரையொருவர் சந்திப்பது இதுவே முதல் முறை. அப்படியானால், அது தேவனிடமிருந்தே வர வேண்டும் அல்லவா, சிறிய பெண்மணியே?

அப்படியானால் அவர் அதைச் செய்தால், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து இன்றும் இங்கே வாழ்கிறார், நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் என்று சபையார் விசுவாசிப்பீர்களா?

67 நல்லது, இப்போது சிறிய பெண்மணியே, நான்... இங்கே முதலாவதாக இருப்பதால், நிச்சயமாக, ஏதோ ஒன்று நடக்கிறது என்பதை நீங்கள் உணருகிறீர்கள். இப்போது, ஒரு குழந்தையாக, நீங்கள்-நீங்கள் ஒரு கிறிஸ்தவர், நீங்கள் ஒரு விசுவாசி, ஏனென்றால் உங்கள் சிறிய ஆவி வரவேற்பதாக உணர்கிறது. புரிகிறதா? அப்படி இல்லை யென்றால் அது அவரிடமிருந்து பின்

வாங்கியிருக்கும், ஆனால் ஏதோ ஒன்று நடக்கிறது என்பதை நீங்கள் உணருகிறீர்கள், இல்லையா? அது கர்த்தருடைய தூதர் கீழே இறங்கி வருவதாகும். இப்போது, அது உங்களைக் காயப்படுத்தாது. நீங்கள் அதை விசுவாசித்தால் அது உங்களுக்கு நன்மையே செய்யும்.

இப்போது, உங்களுடன் பேசுகிறேன், கிணற்றடியில் இருந்த பெண்ணிடம் நம் ஆண்டவர் பேசியது போலவே. அவளுடைய ஆவியைத் தொடர்புகொள்ள அவர் சிறிது நேரம் பேச வேண்டியிருந்தது.

68 ஒரு விஷயம், நீங்கள் ஏதோ ஒன்றைக் குறித்து மிகவும் பதட்டமாகவும், குழப்ப மாகவும் இருக்கிறீர்கள். நீங்கள் ஒரு சிறுநீரகக் கோளாறினால் (kidney condition) பாதிக்கப் பட்டுள்ளீர்கள். அது உங்கள் சிறுநீரகங்களில் உள்ளது. அது சரிதானே, சகோதரி? தேவன் உங்கள் இருதயத்தை ஆசீர்வதிப்பாராக, அன்பே, கவலைப்பட வேண்டாம். நீங்கள் இப்போது விசுவாசிக்கிறீர்களா? எல்லாம் குழப்பமாக இருக்கிறது, சிறுநீரகக் கோளாறு இருக்கிறது,

அனேகமாக அதுதான் அவளுக்குச் சிறுநீரகக் கோளாறை உண்டாக்கியிருக்கலாம். இப்போது, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் சகோதரி.

69 இப்போது, அதை உங்களுக்காகச் செய்ய அவர் இப்போது பிரசன்னமாகியிருக்கிறார் என்றால், நான் ஒரு மனிதன் மட்டுமே என்பதையும், எனக்கு உங்களைத் தெரியாது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்; உங்கள் பிரச்சனை என்ன என்பதை அவரால் உங்களுக்குச் சொல்ல முடிந்தால், நிச்சயமாக அது அவருடைய பிரசன்னமே, அப்படியானால் அது கர்த்தராகிய இயேசு என்று நீங்கள் நம்புகிறீர்களா? அப்படியானால் எப்படியோ இந்தத் தகுதியற்ற சரீர ஆலயத்தில், இயேசு கிறிஸ்து பேசுகிறார், இல்லையா? அப்படியானால், அவருடைய வார்த்தையின்படி நான் உங்கள் மேல் கைகளை வைத்தால், நீங்கள் விசுவாசித்தால் நீங்கள் சுகமடைந்தே ஆக வேண்டும். அது சரியா?

அந்தச் சிறிய பெண்மணி என்னை விட்டு மீண்டும் விலகிச் செல்வது போல்

தோன்றுகிறது. ஓ, நீங்கள்... நான் ஒரு மனிதரைப் பார்க்கிறேன்; அவர் மிகவும் சுகவீனமாக இருக்கிறார்; அவருக்கு ஏதோ தவறு இருக்கிறது... அது உங்கள் தந்தை; அங்கே ஏதோ இருக்கிறது; அவருக்கு... ஓ, அவர் சாகக்கிடக்கிறார்; அவருக்குத் தலை, தலையில் ஏதோ பிரச்சனை இருக்கிறது. அவர் தலையில் ஒரு அழுத்தம் (pressure) அல்லது ஏதோ ஒன்று இருக்கிறது. அந்த மனிதர் சாகக்கிடக்கிறார், உங்கள் தந்தை. அது உண்மை.

அன்புள்ள தேவனே, இன்றிரவு இரக்கமாயிரும். ஆண்டவரே, ஆழ்ந்த துக்கத்துடனும், உடைந்த உள்ளத்துடனும் இங்கே நிற்கும் இந்தச் சிறு பிள்ளையிடம் வாரும். பிதாவே, நீர் எல்லாவற்றையும் அறிவீர். உம்மால் எல்லாவற்றையும் செய்ய முடியும். நீர் இப்போது இவளை ஆசீர்வதிக்கும்படி நான் ஜெபிக்கிறேன். இன்றிரவு மிகவும் மோசமாக இருக்கும் இவளுடைய பிரியமானவரை ஆசீர்வதியும். பெரிய பரிசுத்த ஆவியானவர் அந்த அறையில் இருப்பாராக. மரணத்தின் கரத்தை நிறுத்தும். இந்தச் சபையில் விசுவாசிகள் இருக்கிறார்கள், நாங்கள் இப்போது

இந்த ஆசீர்வாதத்தைக் கேட்கிறோம். இதற்காக இங்கே நிற்கும் இந்தச் சிறுமி, அவள் எதற்காக வந்தாளோ அதைப் பெற்றுக்கொள்வாளாக. உமது தாழ்மையான ஊழியனாகிய நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இதைக் கேட்கிறேன். ஆமென்.

தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக, அன்பே. தேவன் உன்னுடன் இருப்பாராக.

"விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" என்று அவர் சொன்னார். விசுவாசம் வையுங்கள். அவிசுவாசமாய் இருக்காதீர்கள்; தேவன் பேரில் விசுவாசமாயிருங்கள். இப்போது உங்கள் முழு இருதயத்தோடும் நீங்கள் விசுவாசிக்க வில்லையா? வேதம் சொல்லுகிறது, "விசுவாசிக் கிறவன் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசிக்கிறவன் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாகத் தீர்க்கப்படான்". சரி.

70 அம்மையாரே, உங்களிடம் ஒரு தனிப்பட்ட ஊழியர் (personal worker) இருப்பதை நான் பார்க்கிறேன். ஆனால் நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்கள்

என்று நான் கருதுகிறேன். நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்கள், நீங்கள் என்னைப் பார்த்திருக்கிறீர்கள், ஆனால் ஒரு தனிப்பட்ட ஊழியராக இருப்பதால், நிச்சயமாக நீங்கள் என்னைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளும் விதத்தில், நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள். ஆனால் கர்த்தராகிய இயேசு நம் இருவரையும் அறிவார், இல்லையா?

இப்போது, உங்களை அறிந்துகொள்ளவும், உங்களைப் பற்றி அல்லது அதுபோன்ற ஏதாவது ஒன்றை அறிந்துகொள்ளவும் அவர் எனக்கு உதவினால், நீங்கள் அவரை ஏற்றுக் கொள்வீர்களா? இப்போது, அம்மையாரே, நீங்கள் எதற்காக அங்கே நிற்கிறீர்கள் என்பதை நான் அறிந்துகொள்ள உலகில் எந்த வழியும் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். அது சரியா? உலகில் எந்த வழியும் இல்லை... அதுபற்றி எனக்கு எதுவுமே தெரியாது. தேவனுடைய கிருபையினால் மட்டுமே நான் அறிந்துகொள்கிறேன்.

ஆனால் நீங்கள் இருதயத்தில் ஏதோ ஒன்றினால், இருதயக் கோளாறினால் அவதிப் படுகிறீர்கள். அதுதான் அது. உண்மை. இப்போது, தேவன் உங்களைச் சுகமாக்குவார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? தேவன் உங்களை நலமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா? இப்போது, உங்கள் பிரச்சனை என்னவென்று தெரியாமலேயே நான் இதைச் செய்ய வேண்டியிருந்தது, வெளிப் படையாகச் சொன்னால், இப்போது அது என்னவென்று நான் நினைக்கவில்லை, ஆனால் அது எதுவாக இருந்தாலும் நான் ஏதோ ஒன்றைப் பார்த்தேன், அதுதான் அது என்று எனக்குச் சொன்னது. இப்போது, உங்களை ஒரு விசுவாசியாக மாற்ற அது போதுமானது, இல்லையா?

71 நீங்கள் வேறொருவர் மேலும் அக்கறையாக இருப்பதை நான் பார்க்கிறேன். அது உங்களை விட வயது குறைந்த ஒருவர். அது உங்கள்-அது உங்கள் பிள்ளை; அது-அது உங்கள் மகள். உங்கள் மகள் சுமார்... குடும்பத்தில் ஒரு குடும்பப் பிரச்சனை (domestic trouble) இருக்கிறது. அது ஒரு... நான் எதைப்

பற்றிப் பேசுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா? இந்நேரத்தில் உங்கள் இருதயத்தில் என்ன இருக்கிறது? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் கேட்டதைப் பெற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறீர்களா? ஒரு நிமிடம் இங்கே வாருங்கள்.

சர்வவல்லமையுள்ள தேவனே, இப்போது இரக்கமாயிரும், உமது ஆவி இந்த எங்கள் சகோதரி மேல் வருவதாக. நான் அவள் மேல் என் கைகளை வைக்கும்போது, பிதாவாகிய தேவனே, அவள் எதைக் கேட்கிறாளோ அதற்காக அவள் இருதயத்தின் ஆழமான விருப்பத்தை அவளுக்கு அருளும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். ஆமென்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரி, அவருடைய ஆசீர்வாதத்தின் ஐசுவரியங்களை அவர் உங்களுக்குக் கட்டளையிடுவாராக.

வணக்கம், அம்மையாரே. நாமும் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்கள் என்று நினைக்கிறேன். அறிமுகமில்லாதவர்கள்,

எனக்கு உங்களைத் தெரியாது, ஆனால் இயேசு கிறிஸ்து உங்களை அறிவார், இல்லையா?

யாரோ அவரைத் தொட்டார்கள். தரிசனம் உடையவில்லை (break), ஆனால் அது இங்கேயே இருந்தது.

மன்னிக்கவும், நான் என் சுயநினைவில் இல்லை. நான் சும்மா... அது சும்மா... என்னால் அதை விளக்க முடியாது. உங்களுக்குப் புரிகிறதா?

72 உங்களுக்கு நுரையீரல் கோளாறு (lung trouble) இருக்கிறது. நீங்கள் மருத்துவ மனையிலிருந்து இப்போதுதான் வந்திருக் கிறீர்கள், அல்லது மருத்துவமனைக்குச் செல்கிறீர்கள் அல்லது அது போன்ற ஏதோ ஒன்று இல்லையா? ஒரு மருத்துவமனை தோன்றுவதை நான் பார்க்கிறேன். இயேசு கிறிஸ்து உங்களை நலமாக்கி, அந்தக் காரியத்தை உங்களை விட்டு நீக்குவார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? அவர் அதைச் செய்வார் என்று நம்புகிறீர்களா? அருகில் வருவீர்களா?

விலையேறப்பெற்ற ஆண்டவரே, நான் இந்தப் பெண்ணின் மேல் என் கைகளை வைக்கிறேன். பிதாவே, மரணத்தின் இந்த நிழலை இவளை விட்டு அகற்றும், ஜீவனின் வெளிச்சம் அந்த இடத்தை நிரப்பட்டும். ஆண்டவரே, அதை அருளும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் இதைக் கேட்கிறேன். ஆமென். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, அம்மையாரே. விசுவாசத் தோடு செல்லுங்கள். விசுவாசம் வையுங்கள்.

அவரை உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா?

73 சகோதரி, சற்று முன்பு உங்கள் தலையைத் தாழ்த்தி, "ஆண்டவரே, என்மேல் இரக்கமாயிரும்" என்று சொன்ன நீங்கள், நரம்புத் தளர்ச்சியுடன் (nerve trouble) அங்கே அமர்ந்திருக்கிறீர்கள், அங்கேயே அமர்ந்திருக் கிறீர்கள். ஆம், அவர் உங்களைக் கேட்டார். இப்போது, அதைத்தானே நீங்கள் ஜெபித்துக் கொண்டிருந்தீர்கள்? அது அப்படித்தான் என்றால், உங்கள் கையை உயர்த்துங்கள், அது சரியில்லை என்றால். ஒரு வகையான மன

*ரீதியான நடுக்கத்தினால்* (mental nervousness) *நீங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள், இல்லையா? உங்களுக்குப் பொருட்களைக் கீழே போடும் பழக்கமும் இருக்கிறது, இல்லையா? நீங்கள் நின்று கொண்டிருந்தபோது, சமீபத்தில் ஒரு தட்டு அல்லது ஏதோ ஒன்றை கீழே போட்டு உடைத்ததை நான் பார்க்கிறேன். அது சரி. சரி. அது சரிதானே? இல்லை என்று சொல்லுங்கள், உங்கள் கையை உயர்த்துங்கள். பார்த்தீர்களா? எனக்கு உங்களைத் தெரியாது, ஆனால் தேவனுக்குத் தெரியும். இப்போது, நீங்கள் சுகமடைந்துவிட்டீர்கள்; அது உங்களை விட்டு நீங்கிவிட்டது. நீங்கள் குணமாகி வீட்டிற்குச் செல்கிறீர்கள்.*

*இவர் என்னுடைய... நோயாளியா? அந்தக் குழந்தைக்காக, அந்தச் சிறுமிக்காக நீங்கள் அங்கே விசுவாசிக்கிறீர்களா? தேவன் அந்த நீரிழிவு நோயை* (diabetes) *அவளை விட்டு நீக்கி, அவளை நலமாக்குவார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? சற்று முன்பு நீங்கள் அழுது கொண்டிருந்தீர்கள், இல்லையா? உங்களிடம் ஜெப அட்டை இருக்கிறதா? இல்லையா? உங்களுக்கு அது தேவையில்லை. தேவன்*

உன்னை ஆசீர்வதிப்பாராக, அன்பே. அங்கே மேலே அமர்ந்து கொண்டு உன் சிறிய தலையைக் குனிந்து ஜெபித்துக் கொண்டிருந்தாய், இல்லையா? அது சரி என்றால், உன் சிறிய கையை அதுபோல உயர்த்து, அன்பே.

பார்த்தாயா, இயேசு உன் ஜெபத்தைக் கேட்டு, "இயேசுவே, இன்றிரவு நான் சுகமடைய முடியுமா?" என்று நீ சொல்வதைக் குறித்து என்னிடம் வந்து சொன்னார். நிச்சயமாக நீ சுகமடையலாம், அன்பே, அதை ஏற்றுக்கொள். நீ செய்ய வேண்டியதெல்லாம் அதுதான், நீ வீட்டிற்குச் சென்று குணமாகலாம்.

"நமக்கு வெற்றியைத் தருகிற தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்று நாம் சொல்வோம். [சபையார், "தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்கிறார்கள்] ஒரு சிறு குழந்தையின் விசுவாசம்... விசுவாசியுங்கள். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா, எல்லோரும் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தாலே போதும், நீங்கள் சுகமடையலாம்.

74 அந்தச் சிவப்பு உடை அணிந்து அங்கே அமர்ந்திருக்கும் அம்மையாரே, நீங்கள் ஒருவிதமாக, "தேவனே, இன்றிரவு நீர் என்னைப் பிடிப்பீரா (கண்டுபிடிப்பீரா)?" என்று நீங்கள் உண்மையில் நினைத்துக் கொண்டிருந்தீர்கள். அது உண்மைதானே? உங்கள் மனதை வாசிக்கவில்லை, ஆனால் நீங்கள் சொன்னது அதுதான். அது சரி. ஏனென்றால் நீங்கள் மூட்டுவலியிலிருந்து (arthritis) குணமாக விரும்புகிறீர்கள், இல்லையா? மேலும் உங்களுக்குப் பர்சைட்டிஸ் (bursitis) கூட இருக்கிறது, இல்லையா? அது சரிதானே? சரி, இப்போது உங்கள் விசுவாசம் கர்த்தராகிய இயேசுவைத் தொட்டால் போதும், நீங்கள் அதிலிருந்து குணமாகலாம். ஆமென்.

ஓ, மக்களே, நீங்கள் எப்படி அவரைப் புறக்கணிக்க முடியும்? இன்றிரவு அவர் உயிருடன் இல்லை என்று நீங்கள் எப்படிச் சொல்ல முடியும்? ஏன் அவர் உயிருடன் இல்லை? அவர் பூமியில் இருந்தபோது செய்த அதே காரியத்தை இதோ செய்கிறார். அவரை நம்புங்கள்; நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அதுதான். பாருங்கள், ஜெப அட்டைகள்

இல்லாமல் அல்லது எதுவுமே இல்லாமல் அங்கே வெளியே இருக்கும் அந்த மக்கள், மேடைக்கு மேலே வர எந்த வழியும் இல்லை, ஆனால் அவர்கள்-அவர்கள் தங்கள் விசுவாசத்தை இங்கிருந்து கீழே அனுப்பு கிறார்கள். நீங்கள் அதைச் செய்யும்போது, அது தொடுகிறது. இப்போது, இங்கிருக்கும் ஒவ்வொரு ஆவியையும் நான் உணர்கிறேன். அது முற்றிலும் சரி. தேவன் விரும்பினால், நீங்கள் நினைத்தாலும் உங்கள் வாழ்க்கையை உங்களால் மறைக்க முடியாது. புரிகிறதா? இப்போது சரி, எங்கே?

வணக்கம், ஐயா. நான் தேவனுடைய ஊழியன் என்று நம்புகிறீர்களா? ஐயா, நான் அதைச் சொல்வதற்குக் காரணம்... நான் அவருடைய ஒரு ஏழைப் பிரதிநிதி. ஆனால் என்னால் முடிந்த சிறிதளவுடனும், என் முழு இருதயத்துடனும், நான் என் முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் அவரை நேசிக்கிறேன். நான் அவரை நேசிக்கிறேன்.

என் சகோதரனே, நீங்களும் நானும் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்கள் என்று நினைக்கிறேன். அனேகமாக, நம் வாழ்நாளில் நாம் ஒருவரையொருவர் பார்த்திருக்க மாட்டோம். நீங்கள் என்னைப் பார்த்திருக்கிறீர்கள், ஆனால் எனக்கு உங்களைத் தெரியாது. கூட்டங்களில் மற்றும் அதுபோன்ற காரியங்களில் இருந்ததன் மூலம் அனேகமாக நீங்கள் என்னைப் பார்த்திருப்பீர்கள். ஆம், ஆம், ஐயா. அப்படியானால், உங்களைப் பற்றி எனக்கு ஏதாவது தெரியும் என்பதையோ அல்லது நீங்கள் எதற்காக இங்கே இருக்கிறீர்கள் என்பதையோ தேவன் எனக்குத் தெரியப் படுத்தும் ஒரே வழி, தேவன் மூலமாக மட்டுமே இருக்க முடியும். அது சரியா? இப்போது, உங்களுக்கு என்ன பிரச்சனை என்று அவர் எனக்குக் காண்பித்தால், தரிசனம்தான் என்னைப் பலவீனப்படுத்துகிறது. உங்களுக்குப் புரிகிறதா? ஏனென்றால் நான் சும்மா, உங்களுக்கு என்ன தவறு என்று அவர் எனக்குக் காட்டினால், சரி, அது உங்களுக்குப் போதுமானதாக இருக்கும். அப்போது நீங்கள் அதை நம்புவீர்கள், இல்லையா? உங்கள் முழு இருதயத்தோடும்...

உங்களால் முடிந்தால், மிகவும் பயபக்தியுடன் இருங்கள்.

75 இப்போது, என் சகோதரனே, நிச்சயமாக ஆவி எங்கும் சுற்றிலும் இருக்கிறது. உங்கள் சகோதரனாகிய நான், வேறொரு உலகத்தில் இருக்கிறேன், ஆனால் நீங்கள் என்னை விட்டு விலகிச் செல்கிறீர்கள். நீங்கள் இருதயக் கோளாறினால் அவதிப்படுவதை நான் பார்க்கிறேன். அது ஒரு நரம்பு நிலையினால் ஏற்படுகிறது, அது இருதயக் கோளாறை உண்டாக்குகிறது. அது ஒரு நரம்பு நிலை. அது சரி. உங்களுக்கு ஒரு மனைவியும் இருக்கிறார், அவரும் சுகவீனமாக இருக்கிறார். ஒருவிதமான குடல் கோளாறு (colon trouble) இருக்கிறது. உங்களுக்கு ஒரு... நான் ஒரு மகளைப் பார்க்கிறேன். உங்களுக்கு ஒரு மகள் இருக்கிறாள், அவள் ஒரு ஸ்பாஸ்டிக் (spastic - மூளை முடக்கு வாதம் போன்ற நிலை) அல்லது ஏதோ ஒன்று. உங்களுக்கு இருக்கிறது. உங்களுக்கு இன்னொரு மகளும் இருக்கிறாள், அவள் நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப் பட்டுள்ளாள். அவள் பள்ளி சம்பந்தப்பட்ட ஏதோ ஒன்றில் இருக்கிறாள்; அவள் ஒரு

*ஆசிரியை அல்லது பள்ளியில் ஏதோ ஒன்று இல்லையா? அது சரி, பள்ளி ஆசிரியை. அந்தக் காரியங்கள் உண்மை, ஐயா.*

*இப்போது, அது நான் பேசியது அல்ல. அது என் குரல், ஆனால் பேசியது அவரே.*

*இப்போது, அவர் உங்களுக்கு என்ன சொன்னாரோ, அது சத்தியம். ஏனென்றால், "அவர்கள் வியாதிக்காரர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்று இங்கே சொன்ன அதே நபர் அவரே. நீங்கள் அதை நம்புகிறீர்களா? அப்படியானால் அருகில் வாருங்கள்.*

*சர்வவல்லமையுள்ள தேவனே, ஜீவாதிபதியே, எல்லா நன்மையான ஈவுகளையும் கொடுக்கிறவரே, இந்த மனிதர் மேல் உமது ஆசீர்வாதத்தை அனுப்பி, பிதாவே, அவர் இருதயத்தின் விருப்பத்தை அவருக்குக் கட்டளையிடும். தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் நாமத்தில் நான் இதைக் கேட்கிறேன். ஆமென்.*

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் சகோதரனே.

வணக்கம், ஐயா? நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்கள் என்று நினைக்கிறேன், ஐயா? மக்களிடம் பேசும்போது, எல்லோரும்... விடுங்கள்... நான் உங்களிடம் ஒரு நிமிடம் பேச விரும்புகிறேன். அந்தப் புத்தகத்தையும், படத்தையும் நீங்கள் வைத்திருப்பதை நான் பார்க்கிறேன். நீங்கள் அவற்றை அனுபவிப் பீர்கள் என்றும், அவற்றை வாசிப்பதன் மூலம் தேவன் உங்களை ஆசீர்வதிப்பார் என்றும் நம்புகிறேன். நாம் ஒருவருக்கொருவர் அந்நியர்கள். எனக்குத் தெரிந்தவரை என் வாழ்நாளில் நான் உங்களைப் பார்த்ததே இல்லை. நாம் ஒருவருக்கொருவர் முற்றிலும் அந்நியர்கள். அப்படியானால் உங்களைப் பற்றியோ, அல்லது நீங்கள் எதற்காக இங்கே இருக்கிறீர்கள் என்பது பற்றியோ எதுவும் இருந்தால், தேவன் அதை எனக்கு ஏதோ ஒரு வழியில் கொடுக்க வேண்டும். இயேசு இங்கே இருந்தபோது செய்ததைப் போலவே, தேவனுடைய ஆவியினால் நான் இந்தக் காரியங்களை அறிந்துகொண்டால், அது ஏதோ

ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட மூலத்திலிருந்து வருகிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். அப்படியானால் அது தேவனிடமிருந்து வருகிறது என்று ஏற்றுக் கொள்வீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

76 சபையார் அதையே செய்வார்களா? நான் தொடர்ந்து செய்வதற்கு எனக்கு அதிக பலம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன், ஆனால் இப்போது உங்களிடம் ஒரு நிமிடம் பேசுவதற்கு…

நீங்கள் ஒரு நரம்புத் தளர்ச்சியினால் (nervous condition) அவதிப்படுகிறீர்கள். அது சரி. இருந்தாலும் நீங்கள் ஒரு அற்புதமான நபர். உங்களிடம் ஒரு வலிமையான ஆவி இருக்கிறது, உங்களுக்காகத் தரிசனம் சீக்கிரம் கிடைக்கிறது. நீங்கள்-நீங்கள் ஒரு ஊனமுற்ற முன்னாள் இராணுவ வீரர் (disabled veteran). உங்களுக்கு ஒரு மனைவி இருக்கிறார்; நீங்கள் ஒரு திருமணமான மனிதர். அவரும் நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார். நீங்கள் டெக்சாஸைச் சேர்ந்தவர். நீங்கள் இங்கே…

நீங்கள் ஒரு வியாபாரத்தில் இருக்கிறீர்கள், ஏதோ ஒரு வகையான... நீங்கள்-நீங்கள் எரிபொருள் நிரப்பு நிலைய (filling station) வியாபாரத்தில் இருக்கிறீர்கள், ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை நடத்துகிறீர்கள். ஊழியத்திற்காக உங்கள் வாழ்க்கையில் ஒரு அழைப்பு இருக்கிறது; உங்களுக்கு இருப்பதாக நீங்கள் உணருகிறீர்கள். அதைப் பற்றிக் கற்றுக்கொள்வதற்காக எங்காவது ஒரு பள்ளிக்குச் செல்ல நீங்கள் பணம் சேர்க்க முயற்சிக்கிறீர்கள். அது உண்மை. நீங்கள் நம்புகிறீர்களா? அப்படியானால் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் (THUS SAITH THE LORD). போய் நீங்கள் கேட்டதை இயேசுவின் நாமத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.

77 நீங்கள் அங்கே அமர்ந்திருந்தபோதே கர்த்தராகிய இயேசு உங்களைச் சுகமாக்கினார் என்று நம்புகிறீர்களா? நீங்கள் சுகமானீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் இப்போது சென்று நலமாகலாம்.

அம்மா, இயேசு அந்த மூட்டுவலியை (arthritis) உங்களை விட்டு நீக்கப் போகிறார்,

நீங்கள் குணமாகப் போகிறீர்கள் என்று நம்புகிறீர்களா? சும்மா போய், "உமக்கு நன்றி, கர்த்தராகிய இயேசுவே" என்று சொல்லுங்கள். சும்மா...

தலைவலிகள் இருக்கின்றன, இல்லையா? எல்லா வகையான தலைவலிகளும் இருந்து கொண்டிருக்கின்றன. தேவன் உங்களை ஆசீர்வதித்தார். உங்களுக்கு அருகில் அமர்ந்திருப்பவருக்கு, காதுகளில் பிரச்சனை இருக்கிறது, இல்லையா? இயேசு உங்களை நலமாக்கப் போகிறார் என்று நம்புகிறீர்களா?

அங்கே அமர்ந்திருக்கும் அந்தப் பெண்மணிக்குக் கண்களில் ஏதோ பிரச்சனை இருக்கிறது. உங்கள் கண்களில் ஒரு கட்டி (tumor) இருக்கிறது, இல்லையா, அம்மையாரே? உங்கள் கைகளை உங்கள் கண்கள் மேல் வைத்து அந்தப் பக்கமாகத் துடைத்துவிடுங்கள். இப்போது, போய்ப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களை நலமாக்குகிறார்.

தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. பெண்களுக்கே உரிய பிரச்சனையும்,

மூட்டுவலியும் இருக்கிறது. இயேசு உங்களை நலமாக்கப் போகிறார் என்று நீங்கள் நம்புகிறீர்களா... தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, செல்லுங்கள், தேவன் உங்களை நலமாக்குவார். மகிழ்ச்சியோடும் சந்தோஷத்தோடும் செல்லுங்கள்.

78 உங்கள் பிரச்சனை உங்கள் முதுகில் இருக்கிறது, இல்லையா, அம்மையாரே? நீங்கள் குணமாக விரும்புகிறீர்களா? அங்கே வெளியே நடந்து, இதுபோலக் குனிந்து, உங்கள் முதுகை வளைத்து, "இயேசுவே, நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லுங்கள். பின்னர் செல்லுங்கள், இயேசு கிறிஸ்து உங்களை நலமாக்குவார். "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று நாம் சொல்வோம். [சபையார், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்கிறார்கள்]

சகோதரரே, நீங்கள் சென்று உங்கள் இரவு உணவைச் சாப்பிட்டு, மீண்டும் நலமாக இருக்க விரும்புகிறீர்களா? சரி, செல்லுங்கள், அந்தப் புண் (ulcer) உங்களை விட்டு நீங்கிவிட்டது; நீங்கள் இப்போது போய் நலமாகலாம்.

வாருங்கள். நீங்கள் நம்புகிறீர்களா? அம்மையாரே, நீங்கள் நம்புகிறீர்களா? உங்கள் முழு இருதயத்தோடும்? அப்படியானால் உங்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய அவசியமில்லை; அந்தக் கட்டி உங்களை விட்டு நீங்கிவிடும், நீங்கள் வீட்டிற்குச் செல்லலாம்...?...

நீரிழிவு நோய் (Diabetes) இயேசு கிறிஸ்து சுகமாக்குவதற்கு ஒரு பொருட்டே அல்ல. ஆமென். நீங்கள் அவரை நம்புகிறீர்களா?

நீங்கள் அந்தக் கட்டியிலிருந்தும் குணமாக விரும்புகிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இயேசுவின் நாமத்தில் சென்று நலமாகுங்கள்.

தேவன் பேரில் விசுவாசமாயிருங்கள்.

79 சுவிட்சை (switch) யார் மாற்றியது? சரி, அசையாமல் நில்லுங்கள். நீங்கள் அனைவரும் ஒன்றாக இருக்கிறீர்களா? இதுதான் வரிசையின் மீதமா?

சரி, இளம் பெண்மணியே, இப்போது விசுவாசம் வையுங்கள். உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசியுங்கள். இந்தக் குடும்பத்தின் மேல் ஒரு இருண்ட மரண நிழல் தொங்கிக்கொண்டிருக்கிறது. இந்த அம்மையார் இவர்களைப் பராமரிப்பவர். இவர்கள் இந்தியர்கள் (Native Americans). நீங்கள் ஒரு இந்தியர் பள்ளியிலிருந்து (Indian school) வருகிறீர்கள். காசநோய் (TB) காரணமாக நீங்கள் பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறீர்கள். பிள்ளைகள் எல்லோரும் இறக்கப் போகிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். இவர் தந்தை. என்னைப் பாருங்கள், ஐயா. வேலை செய்வதால், இந்த அம்மையாருக்குக் காசநோய் தொற்றியிருக்கிறது, தன் விசுவாசத்தில் செயல் பட்டுக் கொண்டிருக்கிறார். ஊழியத்திற்காக உங்களுக்கு ஒரு அழைப்பு இருப்பதாக நீங்கள் உணருகிறீர்கள். நீங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறீர்கள். பிள்ளைகள் மேல் இருக்கும் மரணத்தின் நிழல்களே, நீங்கள்தான். நான் தேவனுடைய தீர்க்கதரிசி என்று நீங்கள் நம்புகிறீர்களா? இந்த நிழல் இன்றிரவு நீக்கப்பட முடியும் என்றும், நீங்கள் உங்கள்

இன மக்களிடம் திரும்பிச் செல்லலாம் என்றும், இந்தப் பிள்ளைகளுடன் சென்று நலமாகி வாழலாம் என்றும் நம்புகிறீர்களா? நீங்கள் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுவை விசுவாசிப்பீர்களா? அப்படியானால் சர்வவல்லமையுள்ள தேவனே, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஒவ்வொரு பிசாசின் வல்லமையையும் நான் கண்டிக்கிறேன். இந்த மக்கள் மேலிருந்து சாபத்தை நான் எடுக்கிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஒவ்வொரு அசுத்த ஆவியும் இவர்களை விட்டுப் போவதாக. நம்பிக்கை அற்றுப்போகிறது, ஓ, இந்த மக்களிடமிருந்து. சாத்தானே வெளியே போ, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் நான் உனக்கு ஆணையிடுகிறேன்.